# உதயன்



www.onlineuthayan.com

32 : பக்கங்கள் சுடர் 27 கதிர் 336 வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 11 சனிக்கிழமை (27/10/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 20.00



## தீர்வு, தெரிவுக்குழு விவகாரத்தில்

# சரியான நேரத்தில் அரசுக்குப் பதிலடி

### கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்ரோபர் 27

அரசியல் தீர்வு, நாடாளுமன்றத் தெரிவுக்குழு விவகாரம் தொடர்பில் அரச தரப்பு தமது தரப்புக்கெதிராக முன்வைக்கும் குற்றச்சாட்டுகளுக்கு உரிய நேரத்தில் உரிய வகையில் பதிலளிக்கப்படுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.



நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்காமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் இழுத்தடிப்புப் போக்கைக் கடைப்பிடிக்குமானால் தீர்வு விடயத்தில் தீர்க்கமானதொரு முடிவை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் அரசு தள்ளப்படும் என அமைச்சரவையின் பேச்சாளரும், அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல நேற்றுமுன்தினம் கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்னவாகவுள்ளது என 'உதயன்' கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் வினவியது.

அதன்போது கருத்து வெளியிட்ட அவர்,

''கெஹலிய போன்றோர் வெளியிடும் கருத்துக்குப் பதில் சொல்ல

பார்க்க பக்கம் 4

## போர்க்குற்ற ஆதாரங்கள் ஐ.நாவிடம்

ஜெனிவா,ஒக் 27

இறுதிக்கட்ட போரின் போது முள்ளிவாய்க்காலில் இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் பொதுமக்கள் கொல்லப்பட்டமைக்கான ஆதாரங்கள் போதியளவு ஐ.நாவிடம் இருப்பதாக அந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டிச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இதுவரை காலமும் ஐ.நா தம்மிடம் ஆதாரங்கள் இருப்பதாக வெளிப்படையாகக் கூறவில்லை. எனினும் பிற அமைப்புக்களினதும் பொதுமக்களின் வாய்மொழிச் சாட்சியங்களையும் வைத்தே அறிக்கைகளை விடுத்ததுடன், தம்மால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு அறிக்கையினையும் ஆதாரம் காட்டியது.

பார்க்க பக்கம் 4

## இலங்கைக்கு 1.2 பில்லியன் டொலர் இழப்பு

கொழும்பு,ஒக் 27

ஈரான் மீது அமெரிக்கா விதித்துள்ள பொருளாதாரத் தடையினால், எரிபொருள் இறக்குமதியில் இலங்கைக்கு 1.2 பில்லியன் டொலர் இழப்பு ஏற்பட்டுள்ளது. பெற்றோலியத்துறை அமைச்சர் சுசில் பிறேம ஜயந்த இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அமெரிக்காவின் தடையினால்,வேறு நாடுகளில்

பார்க்க பக்கம் 4


விடுதலைக்காகப் போராடிய மகாத்மா காந்திக்கு 'தேசத் தந்தை' என்ற பட்டம் அளிக்க அரசியல் சட்டத்தில் இடம் இல்லை என்று உள்துறை அமைச்சகம் தெரிவித்தது. 8 ▷

ஆப்கானிஸ்தானில் இராணுவத்தினருடன் பணியில் ஈடுபட்டிருந்தபோது, இறந்த அமெரிக்க நாய்க்கு வீரச் செயலுக்கான பதக்கம் வழங்கப்பட்டுள்ளது. 9 ▷

நெருக்கடிகள் நிலவும் இந்தவேளையில் அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து மிகப் பிரமாண்டமான கூட்டு இராணுவப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளன. 10 ▷

13 ஆவது அரசமைப்புத் திருத்தம் ரத்துச் செய்யப்பட்டால் நாட்டில் மீண்டும் மோதல்கள் ஏற்படும் - சிவநேசதுரை சந்திரகாந்தன் கூறுகிறார். 17 ▷


## சிபாரிசு நடைமுறை பற்றி துருவுகின்றது அமெரிக்கா

கொழும்பு, ஒக்.27

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளின் நடைமுறை தொடர்பிலான இலங்கை அரசின் செயற்பாடுகள் குறித்து அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் கேள்வி எழுப்பியிருப்பதாக நம்பகரமாக அறியமுடிகின்றது.

பார்க்க பக்கம் 4

## '13'ஐ ஒழிக்க முற்படுகையில் தெரிவுக்குழுவில் இணைவதா?

### சீறுகிறார் சித்தார்த்தன்

யாழ்ப்பாணம்,ஒக்.27

13 ஆவது திருத்தச் சட்டத்தையே இல்லாதொழிக்குமாறு கடும் போக்கு அரசியல் கட்சிகள் வலியுறுத்தி வரும் நிலையில் நியாயமான தீர்வு கிடைப்பதனை ஜனாதிபதி உறுதிப்படுத்தாத நிலையில் தமிழ்தேசியக் கூட்டமைப்பு எவ்வாறு தெரிவுக்குழுவில் இணைய முடியும். தீர்வை இழுத்தடிப்பது அரசே ஒழிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அல்ல என்று தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) தலைவர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சிக்கு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு ஒத்துழைக்காமல் காலம்

பார்க்க பக்கம் 4

## விலகினார் கிருஷ்ணா



புதுடில்லி,ஒக் 27

இந்திய மத்திய அமைச்சரவை நாளை ஞாயிற்றுக்கிழமை மாற்றியமைக்கப்படஉள்ளநிலையில் வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா பதவி விலகியுள்ளார்.

நீண்டகாலமாகச் சொல்லப்பட்டு வரும் மத்திய அமைச்சரவை மாற்றம்

பார்க்க பக்கம் 4

## கூடங்குளத்துக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் பிரசாரம்

### திமுது ஆட்டிக்கல தலைமையில்



யாழ்ப்பாணம், ஒக்.27

தென்னிந்திய கூடங்குளம் அணு மின் நிலையத்தில் பாதிப்பு ஏற்படும் பட்சத்தில் கதிர் வீச்சின் தாக்கம் இலங்கையைப் பாதிக்கும். எம்மை நாம் பாதுகாப்பதற்காக இந்திய- இலங்கை

பார்க்க பக்கம் 4

## புத்தளத்தில் இருந்தே வடக்கே கஞ்சா கடத்தல்

### பிரதிப் பொலிஸ்மா அதிபர் தகவல்

யாழ்ப்பாணம்,ஒக்.27

புத்தளம் மாவட்டத்திலிருந்தே கஞ்சா, ஹெரோயின் போன்ற போதைவஸ்துக்கள் வடபகுதிக்குக் கடத்தப்படுகின்றன. கடந்த சனிக்கிழமை யாழ். பூஸ் நிலையத்தில் வைத்து ஒரு கிலோகிராம் 28 கிராம் கஞ்சாவுடன் புத்தளத்தைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று யாழ்.பிராந்திய பொலிஸ்மா அதிபர் எரிக்பெரேரா தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் பெரேரா இதனைத் தெரிவித்தார்.

பார்க்க பக்கம் 4

## பாலியல் தொந்தரவுகள் குறித்த ஐ.நா. அறிக்கை ஆதாரமற்றது

### மறுக்கிறது இலங்கை அரசு

கொழும்பு,ஒக் 27

பாலியல் தொழிலாளர்கள் இலங்கையில் தொந்தரவுக்கு உள்ளாகின்றனர் என்ற ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சில குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை. ஆயினும் அரசு என்ற வகையில் இந்த குற்றசாட்டுக்களை உதாசீனம் செய்யாது இந்தப் பிரச்சினை தொடர்பில் முழுமையாக ஆராயவுள்ளோம் என அரசு அறவித்துள்ளது.

இது தொடர்பில் அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல மேலும் கூறுகையில்,

'பாலியல் தொழிலாளர்

பார்க்க பக்கம் 4

## மக்களின் வீடுகளை விடுவிக்க முடியவில்லை

யாழ்ப்பாணம், ஒக்.27

யாழ்ப்பாணத்தில்பொலிஸ் நிலையங்கள் அமைப்பதற்குச் சில பிரதேச செயலகங்கள் அரச காணிகளை ஒதுக்கியுள்ளன. எனினும் அவற்றில் பொலிஸ் நிலையங்களை அமைப்பதற்கான நிதி

பார்க்க பக்கம் 4

## பல்கலை. பேரவைக் கூட்டம் இன்று நியமனங்கள் பற்றி ஆராயப்படுமா?

யாழ்ப்பாணம், ஒக். 27

யாழ். பல்கலைக்கழகத்தின் பேரவைக் கூட்டம் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்திலாவது, கனினி பிரயோக உதவியாளர்கள் மற்றும் எழுதுவினைஞர்கள் நியமனம் ஆராயப்படுமா என்ற எதிர்பார்ப்பு தீவிரமாக எழுந்துள்ளது. இந்த நியமனங்களிலேயே அரசியல் தலையீடுகள் அளவுக்கு அதிகமாக இருப்பதாகச் சர்ச்சை எழுந்துள்ளது.

பல்கலைக்கழகத்தில் ஏதாவது நியமனங்கள் இடம் பெறுகையில் தேர்வுக் குழுவால் இறுதி செய்யப்பட்ட நியமனப் பட்டியல், அடுத்து வரும் பேரவைக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டு அங்கீகரிக்கப்படும் அல்லது நிராகரிக்கப்படும் என்பதே வழமையான நடைமுறை. ஆனால், இந்த வழமைக்கு

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கில் கடந்த வாரம் பெருமளவு ஆயுதம் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக். 27

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் கடந்த வாரம் 450 கிலோகிராம் சி4 வகை வெடிமருந்து உட்பட பெருமளவு ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக்பெரேரா தெரிவித்தார்.

நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது-

முள்ளிவாய்க்கால் பகுதியில் 450 கிலோகிராம் சி4 வகை வெடிமருந்து மீட்கப்பட்டுள்ளது. இவற்றுடன் 80 மில்லிமீற்றர் வகையைச் சேர்ந்த ஆயிரத்து 220 ரவைகள், ரி-56 ரக துப்பாக்கி வகையைச் சேர்ந்த 5 ஆயிரத்து 925 ரவைகள், கிளைமோர் குண்டுகள்-25 என்பவற்றை ஒரே இடத்திலிருந்து கடந்த செவ்வாய்க்கிழமை பொலிஸார் மீட்டனர்.

இதே பகுதியில் பிறிதொரு இடத்தில் ரி-56 ரக துப்பாக்கிகள் -7, ஆர்.பி.ஜி. ரவை-17, குண்டுகள் -3, 12.7 வகை ஆயுத ரவைகள் -122, எம்.ஜி.எம்.பி.ட்ரம்-40 மில்லிமீற்றர் ரவை 17 என்பன மீட்கப்பட்டன.

முள்ளிவாய்க்கால் மேற்குப் பகுதியில் கடந்த புதன்கிழமை 12 கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

வவுனியா செட்டிக்குளம் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைக்குண்டுகள் -3, தொலைத் தொடர்புக் கருவி-1, றெக்கோடர் வயர்கள் -20அடி, என்.பி குண்டு -6, ரி.என்.ரி. ட்ரம் 3 என்பன மீட்கப்பட்டன.

மன்னாரில் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின்படி என்56 வகை ரவை வைத்திருந்த இரண்டு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர் - என்றார். (த-4)

# தமிழ் எம்.பிக்கள் கட்சி பேதமின்றி 'திவிநெகும'வை எதிர்க்க வேண்டும்

## ஜனநாயக மக்கள் முன்னணி கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.27

திவிநெகும சட்ட வரைவுக்கு எதிராக தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி பேதமின்றிச் செயற்பட வேண்டும் என்று ஜனநாயக முன்னணியின் ஊடகச் செயலாளரும், கொழும்பு மாநகரசபை உறுப்பினருமான சி.பாஸ்கரா தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது :-

'திவிநெகும' சட்டவரைவு மாகாண சபைகளில் நிறைவேற்றப்பட்டுச் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டுள்ள நிலையில் எமது கட்சியின் தலைவர் மனோகணேசன் உட்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, ஸ்ரீதுங்க, ஜெயசூரிய, அசாத் சாலி ஆகியோருடன் சேர்ந்து 44 மனுக்கள் உயர்நீதிமன்றத்தில் 'திவிநெகும' சட்ட வரைவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நீதிமன்றத் தீர்ப்பின் பின்னர் நாடாளுமன்றத்துக்குச் சட்ட வரைவு கொண்டுவரப்படும்போது, அரச தரப்புச் சார்ந்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும், கட்சி பேதமின்றி 'திவிநெகும' சட்ட வரைவுக்கு எதிராக வாக்களிக்க வேண்டும்.

மேலும் மேலும் வரலாற்றுத் தவறுகளை விட்டுக்கொண்டு சேதாரம் இல்லாத விட்டுக்கொடுப்பு, சிறுசேதாரமான விட்டுக்கொடுப்பு என்று கதை சொல்லி எமது சிறுபான்மையின இருப்பை இல்லாமல் செய்யாமல் எமது இருப்பை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பும் தாம் பிரதிநிதித்துவ மக்களுக்கான உரிமையை இழக்காமல் செய்வதற்கான கடமையும் ஆகும்.

இதன்படி வழுவாமல் 'திவிநெகும' சட்ட வரைவை எதிர்த்த எமது மக்களின் உரிமையைக் காப்பாற்றுவது அரசு சார்ந்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வரலாற்றுக் கடமையும் ஆகும் - என்றுள்ளது. (த-5)

# மாவின் விலை அதிகரித்தது

கொழும்பு, ஒக். 27

கோதுமை மாவின் விலை நேற்று நள்ளிரவில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் விலை அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளதாக கோதுமை மா நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

இதன்படி பிறிமா கோதுமைமாவின் விலை 6 ரூபாவாலும், செரண்டிப் மாவின் விலை 4 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அந்த நிறுவனங்கள் அறிவித்துள்ளன. இதேவேளை கடந்த 15ஆம் திகதி யாழ். மாவட்டத்தில் கோதுமை மாவின் விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# புங்குடுதீவுக் கடற்பரப்பில் தென்னிலங்கை மீனவர்

யாழ்ப்பாணம், ஒக். 27

புங்குடுதீவுக் கடற்பரப்பில் தென்னிலங்கை மீனவர்கள் சட்டவிரோதமாக புகுந்து தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர் என புங்குடுதீவு கடற்தொழில் சங்கத்தினர் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவித்ததாவது-

தென்னிலங்கை மீனவர்கள் இந்தக் கடற்பரப்பில் கொட்டகைகளை அமைத்துக் கடலட்டை பிடித்தும் செல்கின்றனர். இந்த நிலை 2 மாதங்களுக்கும் மேலாக நடைபெற்று வருகிறது.

இந்த விடயம் தொடர்பாக யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் துறை திணைக்கள உதவிப் பணிப்பாளர் என். கணேசமூர்த்தியிடம் கேட்டபோது-

இது தொடர்பான முறைப்பாடுகள் வாய்மொழி மூலமாக புங்குடுதீவு சங்கத்தினால் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திடம் இது குறித்துத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை தொடர்பாக புங்குடுதீவு கடற்பரப்புக்கு நேரில் சென்று ஆராயவுள்ளோம்- என்றார். (த-13)

# 8 லட்சத்து 62 ஆயிரம் ரூபா பெறுமதியான உடமைகள் திருட்டு

யாழ்ப்பாணம், ஒக். 27

யாழ். மாவட்டத்தில் கடந்த வாரம் ஐந்துக்கும் மேற்பட்ட இடங்களில் இடம்பெற்ற திருட்டுக்களில் 8 லட்சத்து 62 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான உடமைகள் திருடப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.,

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

அதிக தொகையாக நெல்லியடியில் வீடு உடைத்து 5 லட்சத்து 55 ஆயிரம் ரூபா பெறுமதியான உடமைகள் திருடப்பட்டுள்ளன. இரவு நேரம் இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது. நள்ளிரவு ஒரு மணியளவில் வீட்டிலிருந்தவர்கள் விழித்த போதே ஓடுகள் கழற்றப்பட்டதைக் கவனித்ததன் மூலமாக வீட்டினுள் பார்வையிட்டபோது திருட்டு தெரியவந்தது.

சாவகச்சேரி மட்டுவில் தெற்கில் பகல்வேளை வீட்டுக்காரர் வெளியே சென்றிருந் போது வீடு உடைத்து உள் நுழைந்தவர்கள் 2 லட்சத்து 70 ஆயிரம் ரூபா பெறுமதியான உடமைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

கொழும்புத்துறையில் 6 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான சைக்கிள் திருடப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவை தவிர ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை மோசடி இடம்பெற்றுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. யாழ். புதுவீதி மற்றும் யாழ். அம்மன் வீதி ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களே இதனுடன் தொடர்புடையவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. சந்தேக நபர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை என்று அவர்மேலும் தெரிவித்தார். (த-4)

# அதிபரை நான் தாக்கவில்லை பல்கலை மாணவன் விளக்கம்

யாழ்ப்பாணம்,ஒக்.27

வடமராட்சி கிழக்கு, செம்பியன் பற்று அ.த.க பாடசாலை அதிபரை நான் தாக்கவில்லை. அவர் என் மீது அபாண்டமாகக் குற்றம் சுமத்தியுள்ளார். இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறிக் கைதாகிப் பின்னர் விடுவிக்கப்பட்ட பல்கலை மாணவன்.

நேற்றுமுன்தினம் காலை அதிபர் அலுவலகத்துக்குள் நுழைந்து கண்டபடி என்னைத் தாக்கினார் என்று குறித்த பாடசாலை அதிபர் பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார். இதன்போது சம்பந்தப்பட்ட மாணவன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் குறித்து தெரிவிக்கும் குறித்த மாணவன் ''நான் எனது தனிப்பட்ட காரணங்களுக்காக அதிபரிடம் நியாயம் கேட்கச் சென்றேன். ஆனால் அவரே என்னிடம் அநாகரிகமாக நடந்து கொண்டார். சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு எடுத்துக்கூறியபோது அவர்கள்என்னை உடனடியாக விடுவித்து விட்டனர்''. - என்றார். (ஐ-16)

# முள்ளிவாய்க்காலில் குடியமர்ந்த மக்களை பதிவு செய்யும் படைப் புலனாய்வாளர்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.27

முள்ளிவாய்க்கால் மேற்கு மற்றும் அம்பலவன் பொக்கணை கிராம சேவையாளர் பிரிவுகளில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகளில் இராணுவத்தினரும், அவர்களது புலனாய்வு பிரிவினரும் நேற்று வெள்ளிக்கிழமை ஈடுபட்டதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த செப்ரெம்பர் மாதம் 26 ஆம் திகதி மனிக்பாம் மூடப்பட்ட பின்னர், முல்லைத்தீவு மாவட்டத்தில் எந்தவொரு பகுதிகளிலும் வெளிப்படையாக அறிவித்து மீள்குடியமர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளக் கூடாதென்று இலங்கை அரசு அறிவுறுத்தியுள்ளது.

இதற்கு முன்னர் முல்லைத்தீவு மாவட்டத்தில் பகிரங்கமாக அறிவிக்கப்பட்டு மக்கள் மீள்குடியமர்த்தப்பட்ட போது, கிராம சேவையாளர், இராணுவத்தினர், புலனாய்வுப் பிரிவினர் அனைவரும் ஒரே இடத்தில் வைத்தே பதிவுகளை மேற்கொண்டனர்.

பகிரங்கமாக அறிவித்து மீள்குடியமர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டாம் என்று அரசு அறிவித்து பின்னர் கடந்த 16 ஆம் திகதி அம்பலவன் பொக்கணை, முள்ளிவாய்க்கால் மேற்கு மக்களை கிராம சேவையாளர்கள் பதிவுகளை மேற்கொண்ட பின்னர் மீளக்குடியமர்த்துவதற்கு அனுமதித்துள்ளனர்.

இந்த நிலையில் இராணுவத்தினரும், புலனாய்வுப் பிரிவினரும் பதிவுகளை மேற்கொள்ளாமையால் நேற்றைய தினம் மக்களைப் பதிவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.(த-5-400)

# கடந்தவாரம் 86 பேர் குடாநாட்டில் கைது

நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள், டெங்கு பரவும் வகையில் சூழலை வைத்திருந்தவர்கள் உட்பட யாழ். குடாநாட்டில் கடந்த வாரம் 86 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ். பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக். பெரேரா தெரிவித்தார்.

யாழ். சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் ;-

நீதிமன்றங்களினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 23 பேரும், டெங்கு பரவும் வகையில் சூழலைப் பேணிய 6 பேரும், மது போதையில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்த 16 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொது இடத்தில் மது அருந்திய 5 பேரும், மது அருந்திவிட்டு தடுமாறிய நிலையில் செயற்பட்ட 8 பேரும், சட்டவிரோதமாக மரக் கடத்தலில் ஈடுபட்ட ஒருவரும் உட்பட 86 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அனைவரும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். ஒவ்வொருவரது குற்றத்துக்கேற்ப அபராதம் விதித்தும், பிணையில் விடுவிக்கப்பட்டும், விளக்கமறியலில் வைக்கப்பட்டும் உள்ளனர் என்று பெரேரா தெரிவித்தார். (த-4)

# விரைவில் இடம் மாறுகிறது யாழ். இறைவரித் திணைக்களம்

## யாழ். பிரதேச செயலக பழைய கட்டடத்துக்கு

யாழ்ப்பாணம், ஒக்.27

யாழ்ப்பாண பிரதேச செயலகத்தின் தற்போதைய கட்டடம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்துக்கு வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் 1963 ஆம் ஆண்டு பிராந்திய திணைக்களமாக முதல் முதலாக ஆரம்பிக்கப்பட்டது உள்நாட்டு இறைவரித் திணைக்களம். அடுத்த வருடம் 50 ஆவது வருட சேவையை பொன்விழாவாகக் கொண்டாட உள்ளது. ஆனால் அதற்கு இதுவரை நிரந்தரக் கட்டடம் இருக்கவில்லை. தற்காலிகமாக யாழ். வீரசிங்கம் மண்டபத்தின் மூன்றாம் மாடியில் இயங்கிவருகிறது.

பண்ணை வீதியில் உள்ள ரெலிக்கொம் கட்டடத்துக்கு அருகில் இறைவரித் திணைக்களத்துக்கான காணி ஒதுக்கப்பட்டிருந்தபோதும் யாழ். மாவட்ட செயலகத்தால் குறித்த காணி வழங்க முடியாது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் யாழ்ப்பாணப் பிரதேச செயலகம் புதிய கட்டடத்துக்கு இடமாற்றப்படவுள்ளதால் தற்போதைய பிரதேச செயலகக் கட்டடத்தை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக மக்கள் மத்தியில் வரி தொடர்பான சேவை வெகுவிரைவில் யாழ். பிரதேச செயலகத்தின் தற்போதைய கட்டடத்தில் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரியவருகிறது. (த-14)

# டிராக்டர் –ஹைஏஸ் விபத்து இளைஞர் படுகாயம்

கிளிநொச்சி, ஒக். 27

முல்லைத்தீவு கொக்காவில் பகுதியில் இராணுவ டிராக்டரும் ஹைஏஸ் வாகனமும் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்து அனுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

நேற்று மாலை 6.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் கரவெட்டி கிழக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இந்திரன் ராகுலன் (வயது-21) படுகாயமடைந்து உடனடியாக இராணுவத்தினரின் விசேட ஹெலி மூலம் அனுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்துத் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருவதுடன் ஹைஎஸ் வாகன சாரதியையும் கைது செய்துள்ளனர். (ஐ-16-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிகவும் மோசமான நிலையில் புதுக்குடியிருப்பு இரணைப்பாலை வீதி

புதுக்குடியிருப்புஇரணைப்பாலை வீதி மோசமான நிலையில் பெரும் குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் இதனூடாகப் பயணிக்கும் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் தினமும் என்றுமில்லாதவாறு இடர்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

புதுக்குடியிருப்புச் சந்தியில் இருந்து இரணைப்பாலை, புதுமாத்தளன் வரை செல்லும் பிரதான வீதியே என்றுமில்லாதவாறு சேதமடைந்து குன்றும் குழியுமாக காணப்படுகின்றது. மேலும் தற்போது பெய்து வரும் மழையினால் மழைநீர் தேங்கிக் காணப்படுகின்றது. இதனூடாக பஸ் சேவைகளும் அதிகளவில் இடம்பெறுவதில்லை. இதனால் பொதுமக்களும் மாணவர்களும் தினமும் கால்நடையாகவும் சைக்கிள்களிலும் பயணித்து வருகின்றனர். இதன்போது வீதியூடாகச் செல்லும் ஏனைய வாகனங்களால் அள்ளி வீசப்படும் சேற்றுடன் கூடிய மழைநீரினால் இவர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இவ்வாறு வீதியைப் புனரமைக்காது போக்குவரத்து வசதிகளையும் ஏற்படுத்தாததால் இந்தப் பகுதி மக்கள் என்றுமில்லாதவாறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

## சொந்த மண்ணில் இந்தக் கதியா...?



அண்மையில் பெருமளவு மிதிவெடிகள் மீட்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டம் மந்துவில் கிராமத்தில் மீள்குடியமர்ந்த குடும்பம் ஒன்றின் தற்காலிகக் குடிசையும், மிதிவெடிகள் மீட்கப்பட்ட காணியும் இவ்வாறு காணப்படுகின்றன. (க-400)

## அஞ்சல் தின நிகழ்வுகள்

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும் அஞ்சல் தின நிகழ்வும் இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணியளவில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் என்.ரட்ணசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் அஞ்சல் மா அதிபர் டி.எல்.பி.ஆர்.அபயரத்ன பிரதம விருந்தினராகவும், மன்னார் அரச அதிபர் சரத் ரவீந்திரா கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (க-13-17)

## கண்காட்சியும் இணைய வெளியீடும்

மன்னார்,ஒக்.27

மன்னாரில் ஓவிய மற்றும் புத்தகக் கண்காட்சியும் தழல் இணையத்தளத்தின் வெளியீடும் இடம்பெற இருக்கின்றன.

இதற்கான ஆரம்ப நிகழ்வு இன்று முற்பகல் 10 மணியளவில் மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

முதன்மை விருந்தினராக மன்னார் குரு முதல்வர் அருட்திரு அ.விக்டர் சோசை கலந்து கொள்வார்.

கௌரவ விருந்தினர்களாக நானாட்டான் பிரதேச செயலர் சி.சந்திரய்யாவும், முசலி பிரதேச செயலர் செ.கேதீஸ்வரனும் கலந்து கொள்வர்.

சிறப்பு விருந்தினர்களாக மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரி அதிபர் அருட்சகோதரி ஹில்டாவும், எஸ்.ஏ.உதயனும் கலந்து கொள்வர்.

மன்னார் தழல் இலக்கிய வட்டமும் தேசிய கலை இலக்கியப் பேரவையும் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன. (க)

# நிதி ஒதுக்கப்பட்டபோதிலும் நெல் கொள்வனவில் அசமந்தம்

### கடந்த காலபோகத்தில் கூ.சங்கங்களின் நிலை இதுதான்

அக்கராயன், ஒக்.27

*கடந்த ஆண்டு நெல் கொள்வனவுக்கென பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 10 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்ட போதிலும் நான்கு மில்லியன் ரூபா மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது.*

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் முல்லைத்தீவு மேலதிக அரச அதிபர் சி.ஏ.மோகன்ராஸ்.

அண்மையில் கோட்டைகட்டியகுளத்தில் இடம்பெற்ற காலபோக நெற்செய்கைக் கூட்டத்தில் வைத்து அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த காலபோகத்தில் தாம் அறுவடை செய்த நெல்லை விற்பனை செய்வதில் விவசாயிகள் அதிக சிரமங்களை எதிர்கொண்டனர். விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்யும் பொருட்டு கூட்டுறவுச் சங்கங்களுக்கு 10 மில்லியன் ரூபா நிதி வழங்கப்பட்டது. ஆனால் நான்கு மில்லியன் ரூபாவுக்கு மட்டுமே அவர்கள் நெல்லைக் கொள்வனவு செய்துள்ளனர். இதனால் விவசாயிகளே அதிகளவில் பாதிக்கப்பட்டனர்.

எதிர்காலத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்வதன் மூலமாக விவசாயிகளுக்கு உதவி புரியமுடியும்.

மேலும் நெல்லைக் கொள்வனவு செய்யாத கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பாக விவசாயிகள் முறைப்பாடு தெரிவிக்க முடியும்.

மேலும் இது தொடர்பான அறிக்கையைப் பிரதேச செயலாளர்கள் அனுப்பி வைக்க வேண்டுமெனவும் அவர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார். (க-18)

## யாருடையது மோ.சைக்கிள்?

கிளிநொச்சி,ஒக்.27

கிளிநொச்சி பூநகரிப் பகுதியில் இருந்து மீட்கப்பட்டு இதுவரை உரிமை கோரப்படாமல் நீதிமன்ற வளாகத்தில் வைக்கப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள் உரிமையாளரை எதிர்வரும் டிசெம்பர் 5 ஆம் திகதிக்கு முன்னதாக கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றுடன் தொடர்பு கொள்ளுமாறு நீதிமன்றப் பதிவாளர் கேட்டுள்ளார்.

கிளிநொச்சி பூநகரிப் பகுதியில் கடந்த ஜனவரி மாதம் 11 ஆம் திகதி NP JZ-2389 இலக்க மோட்டார் சைக்கிளும் அதில் கட்டப்பட்டிருந்த முட்கம்பிச் சுருள் ஒன்றும் அநாதரவான நிலையில் காணப்பட்டதால் பூநகரிப் பொலிஸார் இதனை மீட்டு நீதிமன்றில் ஒப்படைத்தனர். ஆனால் இந்த மோட்டார் சைக்கிள் இதுவரை எவராலும் உரிமை கோரப்படவில்லை. இந்த நிலையில் நீதிமன்றப் பதிவாளரின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. (க-6)

## திருட்டுக்கள்; வவுனியாவில் மூவர் மறியலில்

வவுனியா பகுதியில் இடம்பெற்ற களவுகள் தொடர்பான சந்தேகத்தின் பேரில் மூன்று பேரை வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சந்தேக நபர்கள் செட்டிகுளம் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டதுடன் களவாடப்பட்டதாக கருதப்படும் சுமார் 2 லட்சத்து 42 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளும் மீட்கப்பட்டுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா பொலிஸார் இவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் வவுனியா நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர்.

இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (க-86)

## மன்னார் ஓட்டோக்களுக்கு நகரசபையால் தரிப்பிடம்

மன்னார், ஒக்.27

மன்னார் நகரசபையால் ஓட்டோ தரிப்பிடத்துக்கென இடம் ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னாரில் ஓட்டோக்களுக்கென நிரந்தரமான ஒரு தரிப்பிடம் இது வரை இல்லாத நிலையில் மன்னார் நகர சபை புதிய ஒரு தரிப்பிடத்தை மன்னார் சிறுவர் பூங்காவுக்கு அருகில் ஒதுக்கியுள்ளதாக மன்னார் நகர சபையின் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ் தெரிவித்தார்.

மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசத்தின் நேரடிக் கண்காணிப்பில் பல்வேறு வேலைத் திட்டங்கள் மன்னார் நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் மன்னாரில் மனிதாபிமானப் பணியில் ஈடுபட்டு வரும் ஓட்டோ சாரதிகள் தமது ஓட்டோக்களை நிறுத்தி வைப்பதற்கு ஒரு நிரந்தர தரிப்பிடம் இல்லாத நிலையில் தொடர்ந்தும் பல்வேறு பிரச்சினைகளுக்கும், அசௌகரியங்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர்.

இது மட்டுமின்றி ஓட்டோக்கள் தொடர்பில் மன்னார் நகர சபைக்குத் தொடர்ந்தும் பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்த வண்ணம் உள்ளன.

இந்த நிலையில் இந்தக் குறையைத் தீர்க்கும் முகமாக மன்னார் நகர சபை மன்னாரில் நிரந்தரமான ஓட்டோ தரிப்பிடம் ஒன்றை அமைப்பதற்கு முடிவெடுத்த நிலையில் அரச, தனியார் பஸ் நிலையத்தை மையப்படுத்தி மன்னார் சிறுவர் பூங்காவுக்கு அருகில் குறித்த இடத்தை ஒதுக்கியுள்ளது என்று குமரேஸ் மேலும் கூறினார்.

இந்த நிரந்தரமான ஓட்டோ தரிப்பிடம் அமைப்பதனால் மன்னார் பஸ் தரிப்பிடப் பகுதியில் ஓட்டோக்கள் தொடர்பாக எழும் பிரச்சினைகளுக்கு முடிவு கட்டப்படுமென மன்னார் நகர சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க-12)

## உட்கட்டமைப்பு வசதிக் குறைபாடுகளுடன் முரசுமோட்டை முருகானந்தா கல்லூரி

கிளிநொச்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட முரசுமோட்டை முருகானந்தா கல்லூரியில் உட்கட்டமைப்பு வசதிகள் பற்றாக்குறையாகவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1939 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட மேற்படி பாடசாலை முதலில் மகா வித்தியாலயமாகவும் அதன் பின்னர் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 25 ஆம் திகதி கல்லூரியாகவும் தரமுயர்த்தப்பட்டு ஓராண்டாகின்றது.

ஆனால் அதன் உட்கட்டமைப்பில் பற்றாக்குறை நிலவுவதால் மாணவர்களின் கல்வி நிலை பாதிப்படைவதாகப் பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்போது தரம் 6 தொடக்கம் 13 வரையான வகுப்புகளில் 503 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். 35 ஆசிரியர்களும் இரண்டு பணியாளர்களும் பணியில் உள்ளனர். ஆனால் போதிய கட்டட வசதிகள் இல்லாத நிலையே காணப்படுகின்றது.

இங்கு விஞ்ஞான ஆய்வு கூடம், செயற்பாட்டறைகள் மட்டுமன்றி ஆசிரியர்களுக்கான விடுதிகளும் அமைக்கப்படவில்லையெனத் தெரிய வருகின்றது.

அத்துடன் மலசலகூட வசதிகள் போதியளவு இல்லாததால் ஆசிரியர்களும் மாணவர்களும் அவலங்களை எதிர்கொண்டு வருகின்றனர். நீர் விநியோகம் கூட சீரான முறையில் இடம்பெறுவதில்லை.

எனவே இந்தக் கல்லூரியின் உட்கட்டமைப்பு வசதிகளைப் பூர்த்தி செய்வதன் மூலமாக இங்கு கல்வி கற்கும் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு உதவுமாறு உரிய அதிகாரிகளிடம் முருகானந்தா கல்லூரியின் கல்விச் சமூகத்தினர் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-6)

## புதுக்குடியிருப்புக்கு கூட்டமைப்பின் எம்.பிக்கள் வருகை

வவுனியா, ஒக்.27

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் புதுக்குடியிருப்பு பகுதிக்கு வருகை தந்து மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கேட்டறிந்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கென்றி மகேந்திரன் ஆகியோர் கடந்த திங்கட்கிழமை புதுக்குடியிருப்புப் பகுதிக்கு வருகை தந்தனர்.

மல்லிகைத்தீவு, மந்துவில், ஆனந்தபுரம் ஆகிய பகுதிகளுக்குச் சென்ற இவர்கள் மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாகக் கேட்டறிந்தனர். அத்துடன் புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்துக்குச் சென்று பாடசாலையின் வளப்பற்றாக்குறை, ஆசிரியர்கள், மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடினர். (க-400)

## மீன் சந்தையை அமைக்குமாறு மக்கள் வேண்டுகோள்

அக்கராயன் பகுதியில் மீன் சந்தை ஒன்றை அமைக்குமாறு இந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். அக்கராயன் பகுதியில் சகல வசதிகளுடனும் மீன் சந்தை ஒன்று அமையுமானால் 2 ஆயிரம் வரையான குடும்பங்கள் நன்மை அடைவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

30 ஆண்டுகளாக நடைபெற்ற போர் இடர் காரணமாக சந்தைகள் இந்தப் பகுதியில் அமையவில்லை. தற்போது மரக்கறிச் சந்தை உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் நல்ல சுகாதார வசதிகளுடன் கூடிய மீன் சந்தை இல்லாத குறை காணப்படுகின்றது. அக்கராயன் பகுதியில் மீன் சந்தை உருவாக்கப்படுமானால் தாம் பெரு நன்மையடைய முடியும் என்று இந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (க-18)

## மைதானம் புனரமைப்பு

புதுக்குடியிருப்பு,ஒக்.27

குன்றும் குழியுமாக மோசமான நிலையில் காணப்பட்ட புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானம் புனரமைக்கப்பட்டுள்ளது.

மோசமான நிலையில் இந்த விளையாட்டு மைதானம் காணப்பட்டதால் மாணவர்கள் இதனைப் பயன்படுத்த முடியாத நிலையில் இருந்தனர்.

இதனை அவதானித்த பிரதேச இராணுவத்தினர் இந்த விளையாட்டு மைதானத்தை புனரமைத்து வழங்கியுள்ளனர். தற்போது சமதரையாகக் காணப்படும் இந்த மைதானம் மாணவர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. (க-555)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தின் எதிர்ப்பையும் மீறி இராணுவ உறவு குறித்து பேச்சு

புதுடில்லி,ஒக் 27

இலங்கைப் படையினருக்குத் தமிழ்நாட்டில் பயிற்சி அளிக்கப் படுவதற்கு, தமிழ்நாட்டில் கடும் எதிர்ப்புகள் இருந்து வருகின்ற போதிலும், பாதுகாப்பு ஒத்துழைப்பு களை மேலும் பலப்படுத்திக் கொள் வது தொடர்பாக இந்தியாவும் இலங்கையும் நேற்று முன் தினம் வியாழக்கிழமை பேச்சுக்களை நடத்தியுள்ளன.

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனனின் அழைப்பின் பேரில், புதுடில்லி சென்றுள்ள இலங்கைப் பாதுகாப்புச் செயலர் கோத்தாபாய ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந் தோனியைச் சந்தித்ததாக, இந்திய பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித் துள்ளனர்.

13ஆவது திருத்தச் சட்டத்தை ஒழிக்கவேண்டும் என்று இலங் கைப் பாதுகாப்புச் செயலர் கோத்த பாய ராஜபக்ஷ பகிரங்கமாகக் கருத்து வெளியிட்டிருந்த நிலை யில் அவர் அவசர அவசரமாக இந் தியாவுக்கு அழைக்கப்பட்டிருந் தார். 13ஆவது திருத்தம் தொடர் பில் அவர் வெளியிட்டுள்ள கருத் துக் குறித்து பேசவே இந்தியா அவரை அழைத்திருந்ததாகச் செய்திகள் வெளியாகியிருந்தன. தனது கருத்து இலங்கை அரசின் கருத் தல்ல என்பதை பாதுகாப்புச் செய லர் கோத்தபாயவே நேரில் இந்தியா விடம் தெரிவிப்பார் என்றும் கூறப் பட்டது.

இந்நிலையில், இந்தியப் பாதுகாப்புச் செயலர் சசிகாந்த் சர்மாவையும் சந்தித்த கோத்தாபாய ராஜபக்ஷ, இரு நாடுகளுக்கும் இடையிலான இராணுவ ஒத்து ழைப்புகளை மேலும் வலுப்படுத் திக் கொள்வது தொடர்பாக கலந்து ரையாடியுள்ளதாகவும் இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இலங்கைக்கு எந்தவொரு இராணுவப் பயிற்சியையும் இந்தியா வழங்கக் கூடாது என்று தமிழ் நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் வலியுறுத்தி வருகின்ற நிலையி லேயே இந்தச் சந்திப்புகள் இடம் பெற்றுள்ளன.

இந்தச் சந்திப்புக்களில் 13ஆவது திருத்தம் குறித்துக் கோத்தபாய வெளியிட்ட கருத்துத் தொடர்பில் பேசப்பட்டதா என்பது தெரியவர வில்லை.

தமிழ்நாட்டின் எதிர்ப்புகள் இருந்தாலும், இலங்கையுடன் தொடர்ந்து இராணுவ உறவுக ளைப் பேணவும், இலங்கை ஆயு தப்படைகளுடன் இணைந்து பயிற்சிகளை மேற்கொள்ளவும் இந்தியப் பாதுகாப்பு அமைச்சு முடிவு செய்துள்ளது.

எனினும் தமிழ்நாட்டு அரசி யல் கட்சிகளின் கவலைகளைக் கருத்தில் கொண்டு, தென்மாநிலங் களுக்கு வெளியே, கூட்டுப்பயிற்சி களை வைத்துக் கொள்வதற்கும் இந்தியப் பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது என்றும் தகவல் கள் தெரிவிக்கின்றன. (த)

## பல்கலை...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

மாறாக செப்ரெம்பர் மாதத்தில் இறுதி செய்யப்பட்ட, கணினி பிர யோக உதவியாளர்கள் மற்றும் எழுதுவினைஞர்கள் நியமனப் பட்டியல் அதே மாத இறுதியில் வவுனியாவில் நடைபெற்ற பேர வைக் கூட்டத்தில் அங்கீகாரத் துக்காக சமர்ப்பிக்கப்படவில்லை.

அந்தக் கூட்டத்தில் நியமனப் பட்டியல் ஏன் சமர்ப்பிக்கப்பட வில்லை என்று பீடாதிபதி ஒருவ ரால் எழுப்பப்பட்ட கேள்விக்கு ''அமைச்சர் அதனை நிறுத்தச் சொன்னார்'' என்று பதிலளிக்கப் பட்டிருந்தது. இது தொடர்பில் அந்தப் பேரவைக் கூட்டத்தில் சில வாதப் பிரதி வாதங்களும் இடம் பெற்றிருந்தன.

இருப்பினும் இன்றைய பேர வைக் கூட்டத்திலும் அந்தப் பட்டி யலைச் சமர்ப்பிப்பதற்கான முன்னறிவித்தல் ஏதும் தரப்பட வில்லை என்பதை பேரவை உறுப் பினர்கள் நேற்று மாலை 'உதய னு'க்கு உறுதிப்படுத்தினர். இன் றைய கூட்டத்துக்கான பேரவை கூட்ட குறிப்புரையில் (இது புத்தக வடிவில் இருக்கும்) அது இடம்பெற வில்லை. அதன் பின்னர் தயாரிக் கப்பட்ட முதலாவது இணைப்பிலும் அது இடம்பெற்றிருக்கவில்லை என்று உள்ளகத் தகவல்கள் உதய னிடம் உறுதிப்படுத்தின.

இரண்டாவது இணைப்பு ஒன்று தயார்ப்படுத்தப்பட்டதாக வும் அதில் இந்த விடயம் சேர்க் கப்பட்டிருக்கலாம் என்றும் உறுதிப் படுத்தாத தகவல்கள் தெரிவித் தன. எனினும் இது கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படுமா இல்லையா என்பது குறித்த சந்தேகம் பீடாதி பதிகள், பேரவை உறுப்பினர்கள் மத்தியில் நேற்றிரவு வரை நிலவி யது.

''ஒரு மாதத்திற்கு முன்னரே தயாரிக்கப்பட்ட நியமனப் பட்டி யல் ஒன்று குறிப்புரைப் புத்தகத் தில் இணைக்கப்படாமல் இருப்ப தற்கான நியாயமான காரணங்கள் ஏதும் இருக்க முடியாது'' என்று உத யனிடம் சுட்டிக்காட்டினார் பேரவை உறுப்பினர் ஒருவர்.

இந்த விடயம் இன்று சர்ச்சைக் குரியதாக மாறினால் அரசியல் தலையீட்டை எதிர்த்து பதவிக ளைத் தூக்கி எறிய ஒரு சில பீடாதி பதிகள் தயாராக இருக்கிறார்கள் என் றும் 'உதயனு'க்கு அறிய வந்தது. (உ-01)

## '13'ஐ...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

கடத்தும் செயற்பாட்டைத் தொடர்ந்து கடைப்பிடித்தால் அதனால் ஏற் படும் விளைவுகளுக்கு தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பே பொறுப்பு.

இந்த நிலைமை தொடர்ந்தால் அரசே தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டி ஏற்படலாம். அதற்கான சூழ்நிலை இன்னமும் ஏற்படவில்லையென்று தகவல் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார்.

இந்த விடயம் தொடர்பில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) தலைவர் த.சித்தார்த்த னிடம் கேட்டபோதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததா வது;

13 ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழிக்க வேண்டுமென்று அரசில் அங்கம் வகிக்கும் கடும் போக்கு அரசியல் கட்சிகள் வலி யுறுத்தி வருகின்றன. நாடாளுமன் றத் தெரிவுக்குழுவில் இந்தக் கட்சி களும் அங்கம் வகிக்கும் நிலை யில் நியாயமான தீர்வு எவ்வாறு கிடைக்கும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியாயமான தீர்வு எட்டு வதை இதுவரையில் உறுதிப்படுத்த வில்லை. இவ்வாறானதொரு நிலைமையில் தெரிவுக்குழுவில் எவ்வாறு இணையமுடியும்.

வெளிச்சமூகத்தினால் ஏற் படுத்தப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தையே முழுமையாக நடை முறைப்படுத்தாத இலங்கை அரசு, எவ்வாறு நான் முன்வைக்கும் தீர் வில் தமிழர் நலன் சார்விடயங் களை முன்வைக்கும்-என்றார்.(த-5)

## புத்தளத்தில்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த சனிக்கிழமை யாழ்.பஸ் நிலையத்தை அண்மித்து கஞ்சாவு டன் நின்றிருந்த வேளை புத்தளம் நபர் கைதுசெய்யப்பட்டார். எனது தலைமையின் கீழ் இயங்கும் குற்ற விசாரணைப்பிரிவினர் அவரைக் கைது செய்துள்ளனர்.வவுனியா செட்டிக்குளம் பகுதியில் கடந்த வாரம் 4 கிராம் கஞ்சாவுடன் ஒரு வர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வவுனியா தேக்கவத்தையில் வெவ்வேறு இடங்களிலிருந்து 4.4 கிராம் மற்றும் 6.3 கிராம் ஹெரோ யின் போதைப்பொருளுடன் 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியாவில் கடந்த ஞாயிற் றுக்கிழமை ஆயிரத்து 380 மில் லிகிராம் ஹெரோயினுடன் அனு ராதபுரத்தைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் போதைப் பொருள்களுடன் கைது செய்யப் படுபவர்களிடம் மேற்கொள்ளப் பட்ட விசாரணைகளிலிருந்து போதைப்பொருள்கள் புத்தளம் மாவட்டத்திலிருந்தே வட பகுதிக்கு எடுத்துவரப்படுகின் றமை தெரியவந்துள்ளது. யாழ்ப் பாணத்தில் பெரியதொரு வலை யமைப்பு கைதுசெய்யப்பட்ட தோடு அது குறைந்துவிட்டது- என்றார். (த-4)

## கூடங்குளத்துக்கு...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

அரசுகளை வற்புறுத்துவோம் என்று கூறி மக்கள் போராட்ட இயக்கம் யாழ்.நகரில் நேற்று வெள்ளிக் கிழமை துண்டுப் பிரசுரங்கள் மூல மான பிரசாரத்தை முன்னெடுத்தது.

முன்னணி சோஷலிசக் கட்சி யின் எஸ்.கே.ஜயசிங்க, திமுது ஆட் டிக்கல உள்ளிட்ட குழுவினர் யாழ். நகரில் நேற்றுமுற்பகல் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தனர்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது:

கூடங்குளம் அணுமின் நிலை யம் இலங்கைக்கு மிக அண்மித்த இடத்திலேயே அமைக்கப்பட்டுள் ளது. அணுமின் நிலையத்தில் வெடிப்போ அல்லது கசிவோ வேறு ஏதாவது ஆபத்தோ ஏற்படும் பட் சத்தில் அதிலிருந்து வெளியேறும் கதிர்வீச்சு இலங்கைக்குத் தாக் கத்தை ஏற்படுத்தும்.

காற்று, கடல்நீர், பறவைகள் மற்றும் இந்தியாவிலிருந்து இறக்கு மதி செய்யப்படும் மருந்துகள் ஊடா கவும் அது இங்கு வரமுடியும். அப் படியொரு நிலை உருவானால் நாம் செத்து மடிய நேரிடும்.

தற்போதைய ஆய்வுகளுக்கு ஏற்ப கூடங்குளம் அணுமின் நிலை யத்தில் விபத்து ஏற்பட்டால் வட மாகாணம் முழுமையாகவும், புத் தளம் மாவட்டம், திருகோண மலை மாவட்டம் மற்றும் வேறு சில பிரதேசங்களும் கடுமையாகப் பாதிக்கப்படும். அது திடீர் மரணத் தில் தொடங்கி புற்றுநோய் உள் ளிட்ட உயிர்க்கொல்லி நோய்களை உண்டாக்குவேதோடு எதிர்கால சந்ததியும் அங்கவீனர்களாகப் பிறக்கக்கூடிய பயங்கர நிலையை உருவாக்கும்.

இவ்வாறான ஆபத்து கண் ணெதிரே இருக்கும்போது அரசு என்ன செய்து கொண்டிருக்கிறது?

இந்த அழிவை நிறுத்துமாறு இந்தியாவிடம் கேட்டிருக்கவில்லை. அரச அதிகாரிகள் இந்தியாவுக்குச் சென்று ஆபத்து ஏற்படும் பட் சத்தில் மக்களை எவ்வாறு காப் பாற்றுவது என்று பேசுவதற்குப் பதிலாக மனிதர்கள் இறந்தால் இழப்பீடு எவ்வளவு கிடைக்கும் என்பது குறித்தே பேசியிருக்கிறார்கள்.

எமது மரணத்திலும் பணம் தேடு வதற்கே அரசு தயாராகிறது. இந்தியாவிடம் இருந்து கிடைக்கும் வரப்பிரசாதங்களை எண்ணி எதிர்க் கட்சியில் இருக்கும் எந்தவொரு அரசியல்வாதியும் இந்தப் பிரச் சினையில் வாயைத் திறப்பதில்லை. இந்தியா கோபித்துக் கொள்ளும் என்ற பயத்தில் மக்களுக்கு விளக்க மளிப்பதும் இல்லை.

இந்த நயவஞ்சகர்களை நம்பி மோசம் போகாமல் எமது உயிர் களைப் பாதுகாக்க நாம் தயாராக வேண்டும். கூடங்குளம் அணு மின் நிலையத்துக்கு எதிராக தென் னிந்திய மக்கள் போராடி வருகின் றனர். நாமும் அவர்களோடு சேர்ந்து போராட வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

## சிபாரிசு...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா தீர்மானம் நிறைவேற்றியிருந்தபோது நல்லி ணக்க ஆணைக்குழுவின் சிபாரிசு களை அமுல்படுத்துவதாக இலங்கை உறுதிமொழி வழங்கியிருந்ததன் பின்னணியில்இந்தக் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழு வின் அமுலாக்கம் நடைமுறைக்கு வந்திருந்தால் என்னென்ன விட யங்கள் இதுவரை நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன என்பது பற்றி யும் இன்னும் எஞ்சியுள்ளவற்றை நடைமுறைப்படுத்த தேவைப் படும் காலம் என்பன குறித்தும் அமெரிக்க இராஜாங்கத் திணைக் களம் இலங்கையிடம் பேசியிருப்ப தாக உயர்மட்ட அரச வட்டாரங்கள் கூறின. அமெரிக்காவின் கோரிக் கைக்கமைய இலங்கை ஒரு விரி வான அறிக்கையைத் தயார் செய்து வருவதாகவும், வெகு விரைவில் அந்த அறிக்கை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திடம் கையளிக்கப் படுமென்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (த-சி)

## பாலியல்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

கள் இலங்கையில் தொந்தரவுக்கு உள்ளாகின்றனர் என்ற ஐ.நாவின் அறிக்கையில் முன்வைக்கப்பட் டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பா கக் கவனம் செலுத்தி உரிய நட வடிக்கை எடுக்கப்படும்-என்றார்.

பொலிஸ் மற்றும் இராணுவத் தினரால் பாலியல் தொழிலாளர்கள் தொந்தரவு செய்யப்படும் நாடுக ளுள் இலங்கை, இந்தியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகள் அடங் குவதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி கூட்டம், ஐ.நா. சனத்தொகை நிதி யம் ஆகியவை வேறு சில நிறு வனங்களுடன் இணைந்து தயாரித் துள்ள 210 பக்கங்களை கொண்ட அறிக்கையில் பங்களாதேஷ், கம்போடியா, சீனா, பீஜிங், இந் தியா, கிரிபெட்டி, மியன்மார், நேபா ளம், பப்புவா நியூகினியா தீவுகள் மற்றும் இலங்கை போன்ற நாடுக ளில் பாலியல் தொழிலாளர்கள் பொலிஸ் மற்றும் இராணுவத்தால் துன்புறுத்தப்படுவதாகக் கூறப் படுகின்றது.

அநேகமாக ஆசிய நாடுகளில் விபசாரத்தை சட்டமாக்குதல் தொடர்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள வழிவகைகள், பாலியல் தொழிலா ளர்களை தலைமறைவாக தொழில் செய்ய வைப்பதால் எய்ட்ஸ் மற் றும் வேறு பால்வினை நோய்கள் தொற்றும் அபாயத்துக்குள் அவர் களை தள்ளிவிடுகின்றது என்றும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட் டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(த)

## மக்களின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கிடைக்கவில்லை. பொலிஸ் நிலை யங்களாக இயங்கும் பொதுமக்களின் வீடுகளை அவர்களிடம் கைய ளிக்க முடியாமைக்கு இதுவே காரணம்.

யாழ்.பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரோரா இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத் தியட்சகர் காரியாலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்களால் கேட்கப் பட்ட கேள்விக்குப் பதிலளிக்கை யிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல வருடங்களாகப் பொதுமக்க ளின் வீடுகளையே பொலிஸ் நிலை யங்களாகப் பயன்படுத்துகின் றோம். வீட்டு உரிமையாளர்கள் அதனை விடுவிக்கும்படி மனித உரிமை ஆணைக்குழுவில் முறை யிட்டுள்ளனர்.

பொலிஸ் நிலையங்கள் அமைப் பதற்கு சில பிரதேச செயலகங்கள் அரச காணிகளை ஒதுக்கியுள்ளன. அங்கு கட்டடப் பணிகளை ஆரம் பிப்பதற்கான நிதி இன்னும் எமக் குக் கிடைக்கவில்லை. எமக்குக் கிடைக்கப்பெற்ற காணிகள், பொலிஸ் நிலையம் அமைப்பது பற்றிய விவரங்கள் தலைமையகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. நிதி கிடைத்ததும் கட்டடப் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

பொலிஸ் நிலையங்கள் புதிய கட்டடத்துக்கு மாற்றலாகிச் செல் லும்வரை தற்போதுள்ள மக்களது வீடுகளிலேயே தொடர்ந்து இருக்க வேண்டியுள்ளது. அதற்கான வாட கைப் பணத்தை செலுத்தி வருகின் றோம்.- என்றார். (த-4)

## விலகினார்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

நாளை ஞாயிற்றுக்கிழமை நடை பெற உள்ளது. இந்த அமைச் சரவை மாற்றத்தின் போது கர் நாடக மாநில சட்டப்பேரவைத் தேர்தலைக் கருத்தில் கொண்டு கட்சிப் பணிக்காக வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா அனுப்பப்படுவார் என்று கூறப் பட்டு வந்தது.

இதை உறுதிப்படுத்தும் வித மாக எஸ்.எம். கிருஷ்ணா நேற்றுத் தமது அமைச்சர் பதவியை ராஜினாமா செய்திருக்கிறார்.

இதேபோல் அறக்கட்டளை மோசடி சர்ச்சையில் சிக்கியுள்ள சட்ட அமைச்சர் சல்மான் குர்ஷித் தின் பதவிக்கும் வேட்டுக் காத்திருப்ப தாகக் கூறப்படுகிறது.(த)

## இலங்கைக்கு...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

இருந்து எரிபொருளை இறக்குமதி செய்ய நேரிட்டுள்ளதால், 1.2 பில்லியன் டொலர் மேலதிக செலவு ஏற்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இதன்காரணமாக இலங்கை யின் எரிபொருள் இறக்குமதிச் செலவு 5 பில்லியன் டொலரை எட்டியுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (த)

## சரியான...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

வேண்டிய அவசியம் எமக்கில்லை. இருப்பினும், உரிய நேரத்தில் - உரிய வகையில் இவற்றுக்கு நாம் பதிலொன்றை வழங்குவோம்'' - என்று கூறினார். (த-சி)

## போர்க்குற்ற...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து

ஆனால் தற்போது முதல் முறை யாக ஐ.நாவிடம் காணொளிகள் உள்ளிட்ட ஆதாரங்கள் இருப்ப தாக செய்திகள் வெளியாகியுள் ளன.

இந்த ஆதாரங்களை அடிப் படையாக அடுத்த ஆண்டு நடை பெறவுள்ள ஐ.நா. மனித உரிமை கள் மாநாட்டில் இலங்கை மீது அழுத்தங்கள் மேற்கொள்ளப்படலாம் என ஐ. நா. வட்டாரங்கள் கூறுகின் றன. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## அனைத்துலக நியமங்களை கைக்கொள்ள அரசு மனதாரச் சிந்திப்பது எப்போது...?

முகாம்களை மூடிவிட்டால், உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் இல்லை என்று அர்த்தமாகிவிடாது. மக்கள் தங்குவதற்கும் அவர்கள் தமது அன்றாட வாழ்க்கையை நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்ததன் பின்னருமே, இடம்பெயர்ந்தோர் முகாம்களை மூட வேண்டும். உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் விவகாரத்துக்குப் பரிகாரம் காண்பதற்கு அதற்குப் பின்னர் பல வாய்ப்புகள் உருவாகும்.

உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் மனித உரிமைகள் தொடர்பான, ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அதிகாரி சாக்லோகா பியானி இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கிறார்.

முல்லைத்தீவு மாவட்டம் கேப்பாபிலவு மக்கள் அங்கிருந்து அவசர அவசரமாக வாகனங்களில் ஏற்றப்பட்டு, நந்திக் கடல் அருகே உள்ள சூரியபுரம் காட்டுப் பகுதியில் எவ்வித வசதியுமின்றி, அனாதரவாக விடப்பட்ட சரியாக ஒருமாத காலத்தில், ஐ.நா. உயர் அதிகாரி ஒருவரிடமிருந்து மேற்படி கருத்து வெளிவந்திருக்கிறது.

வடபகுதி மக்களின் மீளக்குடியமர்வுக்கு போர் முடிவுற்ற பின்னர் நிரந்தரமான தீர்வு காண்பதில் உறுதியற்ற நிலைப்பாடே தொடர்கிறது என்றும் சாக்லோகா சுட்டிக்காட்டியுள்ளார்.

இடம்பெயர்ந்தோர் முகாம்கள் மூடப்படுவதற்கு முன்னர், சம்பந்தப்பட்ட மக்கள் தத்தமது பிரதேசங்களில் குடியமர்ந்து முன்னரைப் போன்று ஒன்று சேர்ந்து வாழ்வதற்கு வசதிசெய்யப்பட வேண்டும் என்பது அனைத்துலக நியமம்.

ஆனால், மொத்தத்தில் வன்னிப்பிரதேச மக்களுக்கான மீளக்குடியமர்வு ஏற்பாடுகள் மேற்குறிப்பிட்ட நியமங்களுக்கு ஏற்ப முற்றிலும் மேற்கொள்ளப்பட்டன என்று சொல்வதற்கில்லை.

தமிழ்ப் பிரதேசங்களில் தான் நினைத்த எதனையும், எந்த வேளையிலும் நிறைவேற்றலாம் என்ற கோட்பாட்டின் பிரகாரம், இடம்பெயர்ந்தோரின் மீளக்குடியமர்வு, புனர்வாழ்வு, தொழில்வாய்ப்பு என்பன உட்பட சலக கருமங்களும் அரசினதும் அதன் அதிகாரிகளினதும் தேவைகளுக்கும் விருப்பங்களுக்கும் ஏற்பவே ஒப்பேற்றப்படுகின்றன. போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் என்ற மனிதாபிமானத்தின் மீதேனும், அனுதாபத்தின் பாற்பட்டேனும் செயற்படும் தன்மையைக் காணமுடியவில்லை.

போர் நடைபெற்று மக்கள் இடம்பெயர்வது என்பது பெரும் மனிதாபிமானப் பிரச்சினை. காலத்துக்குக் காலம், பூமிப்பந்தின் நான்கு திசைகளிலும், பரிமாணங்கள் வெவ்வேறாக இருந்தாலும், இந்த மனித அவலம் அரங்கேறியே உள்ளது.

அங்கு எல்லாம் இந்தப் பிரச்சினை மனித நேயத்துடனும், சகோதரத்துவ உணர்வுடனும் கையாளப்பட்டது. அதனால் அவர்களை அகதிகள், ஏதிலிகள் என்ற மனித நேயத்துடன் கையாண்டு வழமை நிலைக்கு இட்டுச் செல்வதற்கு வகை செய்யப்படுவதுண்டு.

ஆனால் எமது நாட்டில், அதற்கான விருப்பமும் வீச்சும், மனதார்ந்த ஈடுபாடும் மிகவும் குறைவாகவே இருந்தது; இருக்கிறது. வடக்கும் கிழக்கும் தமிழர்களின் பிரதேசம் என்ற குடிசார் வரைபடத்தை, எந்த வகையிலேனும் மாற்றிவிட வேண்டும் என்பதில் காட்டப்படும் வேகத்துடன் ஒப்பிடும் போது --

மூன்றரை வருடங்கள் நகர்ந்த போதிலும், போரினால் பாதிப்புற்று இடம்பெயர்ந்த மக்கள் தமது முந்திய வாழ்வுக்குத் திரும்பவேண்டும் என்பதற்கான ஏற்பாடுகள் மிகவும் மந்த கதியிலேயே நகர்கின்றன.

இத்தனைக்கும், தானே நியமித்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரை செய்தமைக்கு அமையவேனும் போரினால் இடம்பெயர்ந்தோரை மீளக்குடியமர்த்தும் பணிகளைச் செயற்படுத்துவதில் போதிய அளவில் அரசாங்கம்- அதன் அலகுகள்- ஈடுபாடு காட்டவில்லை.

அதனாலேயே, மீளக்குடியமர்த்தல் மந்த கதியில் நடைபெறவில்லை என்று அனைத்துலகத்துக்கு, ஒப்பிப்பதற்காக, மனிக்பாம் முகாமை சுருட்டிக் கட்டிவிட்டதாகக் காட்டும் குறியுடன் அதனை அவசர அவசரமாக மூடியது.

கேப்பாபிலவுப் பகுதியைத் தமது இராணுவத் தேவைக்குப் பயன்படுத்தும் திட்டத்துடன், அந்தப் பகுதி மக்களை மனிக்பாமிலிருந்து அவசர அவசரமாக அகற்றி நடுக்காட்டில் தள்ளிவிட்டிருக்கிறது!

அரசாங்கத்தின் இத்தகைய 'தில்லுமுல்லு'கள் குறித்த பின்புலத்தையும், பின்னணி நோக்கங்களையும் விஸ்தாரமாக நேரில் கண்டறிந்து கொள்வதற்காக, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் தொடர்பான விசேட அதிகாரி சாக்லோகா பியானி அடுத்தமாத முதல் வாரமளவில் இலங்கைக்கு வருகிறார் என்பது பிந்திய தகவல்.

மீளக்குடியமர்வு குறித்த நடவடிக்கைகளை, பிற நாடுகளில் இருந்தோ, அனைத்துலக அமைப்புகளிலிருந்தோ இங்கு வருவோர் அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்துக் குறைகுற்றம் காண்பதற்கு இடமளிகாமல்-

அனைத்துலக நியமங்களை நிறைவேற்றும் வகையில் இலங்கை அரசு தானாகவே செயற்பட்டால், வேண்டாத அவப்பெயரையும் கண்டனங்களையும் தடுக்கலாம்; தவிர்த்துக் கொள்ளலாம். இந்தச் சிந்தனை தானும் இலங்கை அரசுக்குப் பிறப்பது எப்போது...?

# 18ஆவது திருத்தச் சட்டம் மிக மிகக் கீழ்த்தரமானது

## சபையில் விமர்சித்தார் விஜயதாஸ ராஜபக்ஷ

கொழும்பு, ஒக்.27

நாடு சுதந்திரமடைந்த பின் இந்த நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட சட்ட வரைவுகளில் மிகவும் கீழ்த்தரமானது 18ஆவது திருத்தச் சட்டம். இதன் பின்னரே நாட்டில் குற்றச் செயல்களும் ஊழல் மோசடிகளும் தலைவிரித்தாட ஆரம்பித்துவிட்டன என்று சாடினார் எதிர்க் கட்சி உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜயதாஸ ராஜபக்ஷ.

நேற்று முன்தினம் நாடாளுமன்றச் சபை ஒத்திவைப்பு வேளையில் "நீதிச் சேவைகள் ஆணைக்குழுச் செயலாளர் மஞ்சுள திலகரட்ண" தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விவாதம் நடைபெறும் போதே விஜயதாஸ ராஜபக்ஷ இதனைக் குறிப்பிட்டார்.

ஜே.வி.பி. உறுப்பினரான அனுர குமார திஸாநாயக்க இதற்கான பிரேரணையைச் சபையில் முன்மொழிந்தார்.

இந்தப் பிரேரணையை வழிமொழிந்து பேசிய விஜயதாஸ ராஜபக்ஷ மேலும் கூறியதாவது:-

இன்று நீதித்துறையின் சுயாதீனம் பெரும் அச்சுறுத்தல்களுக்குள்ளாகி உள்ளது. சட்டம் ஒழுங்கு எல்லோருக்கும் பொதுவானது. சட்டத்தின் முன் அனைவரும் சமமே.

ஆனால் இன்று அரசு நினைத்தால் ஒருவர் மீது வழக்குத் தாக்கல் செய்யமுடியும். மற்றும் ஒருவரை விடுதலை செய்யவும் முடியும். நீதித்துறையிலும் அரசியல் கோலோச்சுகின்றது.

நீதித்துறை சுயாதீனமாக இயங்குவதை உறுதிப்படுத்தும் வகையிலேயே 17ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இலங்கை நாடாளுமன்றத்தில் இது ஒரு தலைசிறந்த செயலாகும்.

ஆனால், நீதித்துறையின் சுயாதீனத்தை மதிக்கும் வகையில் 18ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இதுவே மிகவும் கீழ்த்தரமான ஒரு செயலாகும் எனவும் விஜயதாஸ ராஜபக்ஷ கூறினார். (த-2)

# சுகாதார, கல்வி அபிவிருத்திக்கே பயன்படுத்தப்படுகிறது வரிப்பணம்

## இதுகுறித்து மக்களிடையே விழிப்புணர்வு இல்லை என்கிறார் இறைவரி ஆணையாளர்



யாழ்ப்பாணம்,ஒக்.27

மக்களால் செலுத்தப்படுகின்ற வரிப்பணம் மீளவும் சுகாதாரம், கல்வி போன்ற அபிவிருத்திப் பணிகளுக்காகவே பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் இது தொடர்பான விழிப்புணர்வு மக்கள் மத்தியில் இல்லை எனத் தெரிவித்தார் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் மல்லிகா சமரசேகர.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ்.பிராந்திய அலுவலகம் மற்றும் வரி செலுத்துவோர் சேவைகள் பிரிவின் ஏற்பாட்டில் வரி விழிப்பூட்டல் கருத்தரங்கு நேற்று நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கருத்துரை வழங்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிறிய, நடுத்தரக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்யும் நோக்குடனே அரசினால் வரவு- செலவுத்திட்ட அறிக்கை திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் நிதித்துறையைப் பலமாக்குவதன் மூலமே பொருளாதாரத்தை உயர்த்த முடியும். இதைவிட வரி ஊக்குவிப்பை அதிகரிக்க வேண்டியும் உள்ளது.

இலங்கையில் 55 வீதமானவர்களே வரி செலுத்துபவர்களாக உள்ளனர். மக்களால் செலுத்தப்படுகின்ற வரிப்பணம் ஒவ்வொரு பிரதேசத்தினதும் அபிவிருத்திக்காகவே பயன்படுத்தப்படுகின்றது. இது தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வு இல்லை. எனவே வரி செலுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை மக்களுக்கு விழிப்பூட்டல் செய்யவேண்டும்.- என்றார்.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணத்தில் வரிசெலுத்தும் 7 வர்த்தகர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் வரி செலுத்தும் முறைமைகள் தொடர்பான கருத்துரைகளும் வழங்கப்பட்டன. யாழ்.மாவட்டத் திணைக்களத் தலைவர்கள் மற்றும் வர்த்தகர்கள் பலரும் இதில் கலந்து கொண்டனர். (த-14)

## ஆயிரம் மரக்கன்றுகள் உள்ளூராட்சி சபைகளில் நடுகை

யாழ்ப்பாணம்,ஒக்.27

தேசிய மர நடுகை திட்டத்தின் கீழ் ஆயிரம் மரக்கன்றுகள் உள்ளூராட்சிச் சபைகள் ஊடாக நடப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் எதிர்வரும் 15 ஆம் திகதி மரம் நடுகை மேற்கொள்ள யாழ்.மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கு தலா 50 மரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளன.

மகோக்கனி, தேக்கு, பலா, கொய்யா உட்பட பல வகையான மரக்கன்றுகள் இவ்வாறு இலவசமாக வழங்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கையை அரச மரக் கூட்டுத்தாபன யாழ்.பிராந்திய அதிகாரி மேற்கொண்டுள்ளார்.

மரக்கன்றுகளைப் பெறவுள்ள சபைகளின் செயலாளர்கள் எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் இவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-50)

## வலி.கிழக்கு பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு தொடர்கிறது

யாழ்ப்பாணம், ஒக்.27

வலி.கிழக்கு பிரதேசத்தில் டெங்கு ஒழிப்புச் செயற்திட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் பிரதேசத்தின் சகல கிராமங்கள் தோறும் கட்டம் கட்டமாக இந்தத் திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்ந்தும் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

நாளை ஞாயிற்றுக்கிழமை இடைக்காட்டுப் பகுதியில் டெங்கு ஒழிப்பு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இப் பிரதேசத்தில் தேங்கியிருக்கும் கழிவுகள், குப்பைகள் என்பன அன்றைய தினம் அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வலி.கிழக்கு பிரதேச சபையால் ஒழுங்குபடுத்தப்பட்ட வாகனங்கள் மூலம் கழிவுகள் அகற்றப்படவுள்ளன.

இந்த நிலையில் மக்கள் தமது சுற்றாடல்களில் தேங்கும் கழிவுகளை ஒன்று சேர்த்து வைக்குமாறு சுகாதாரப் பிரிவினர் கேட்டுள்ளனர். (த-17)

## பனம் விதை சேகரிக்கும் செயற்றிட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக்.27

யாழ்.மாவட்டத்தில் பனம் விதைகளைச் சேகரிக்கும் செயற்றிட்டம் ஒன்றை பனை அபிவிருத்திச் சபை ஆரம்பித்துள்ளதாக அதன் தலைவர் பசுபதி சீவரெத்தினம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இம்முறை போகத்தின் போது பனம் பழத்தின் பெருக்கம் மிகக் குறைந்த அளவிலேலே காணப்பட்டது. குடாநாட்டில் நிலவிய கடும் வறட்சி, வெப்பம் ஆகிய காரணத்தினால் தான் பனை மரங்களில் நுங்குகளின் பெருக்கம் மிக மிகக் குறைவாகக் காணப்பட்டது.

ஆயினும் பனம் விதைகளைச் சேகரித்து நாற்று மேடைகளை அமைப்பதற்கான செயற்றிட்டம் பனை அபிவிருத்திச் சபையினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இம்முறை போகத்தின் போது ஒரு லட்சம் பனம் விதைகளைச் சேகரிக்கும் திட்டம் இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.- என்றார். (த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டெங்கு நோய்க்கு சமாதி...



கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலக வளாகத்தில் டெங்கு நுளம்பை அழிக்கும் சிரமதானப் பணிகளில் அங்கு கடமைபுரிவோர் ஈடுபட்டிருந்த வேளையில்... (க-405)

# இராணுவப் பதிவுகளின் பின்னரே மக்கள் செல்வதற்கு அனுமதி

## பூநகரி கௌதாரிமுனை, மண்ணித்தலை மக்களுக்கு தொடர்ந்து சோதனை, வேதனை

கிளிநொச்சி,ஒக்.27

கிளிநொச்சி மாவட்டம் பூநகரியிலுள்ள விநாசியோடை, கௌதாரிமுனை ஆகிய பகுதிகளுக்குச் செல்பவர்கள் இராணுவப் பதிவுகளுக்கு பின்னரே அனுமதிக்கப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கௌதாரிமுனை, விநாசியோடை, மண்ணித்தலை ஆகிய பகுதிகளுக்குச் செல்லும் பிரதான வீதியில் உள்ள இராணுவ காவலரணில், மேற்படி பகுதிகளுக்கு செல்லும் பொது மக்கள் மற்றும் அரச அலுவலர்கள் அனைவரும் மறிக்கப்பட்டு இராணுவப் பதிவுகளின் பின்னரே மேற்படி கிராமங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

மேலும் மேற்படி பகுதிகளில் சுமார் 103 வரையான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இவர்களது வீடுகளுக்குச் செல்லும் உறவினர்கள் கூட இராணுவ அனுமதிகளைப் பெற்றே செல்ல வேண்டிய நிலையில் உள்ளனர்.

இது இவ்வாறிருக்க "போர் நடந்த காலத்தில்தான் இவ்வாறான சோதனைகள், வேதனைகளைச் சகித்துக்கொண்டோம். இன்னும் ஏன் எங்களுக்கு மட்டும் இந்தக் கதி" என்று குறித்த பிரதேச மக்கள் வெதும்புகின்றனர். (க-6)

## புனரமைக்கப்பட்ட தென்னியன்குளத்தின் வாய்க்கால்களில் சிலரால் துளைகள்

### கவலை தெரிவிக்கின்றனர் விவசாயிகள்

அக்கராயன்,ஒக்.27

துணுக்காய் தென்னியன் குளத்தின் வாய்க்கால்கள் புனரமைக்கப்பட்ட நிலையில்அவற்றில்இடையிடையே சிலரால் துளைகள் இடப்பட்டுள்ளன என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்தக் குளம் பீஸ் திட்டத்தின் கீழ் சுமார் 100 மில்லியன் ரூபா செலவில் முழுமையாகப் புனரமைக்கப்பட்டுள்ளது. ஆனால் சிலரால் வாய்க்கால்களின் பல இடங்களிலும் துளைகள் இடப்பட்டுள்ளதுடன் மூன்று இடங்களில் பெரும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன என்றும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் குளத்தின் துருசுப் பகுதி மூன்று தடவைகள் அத்துமீறித் திறக்கப்பட்டு நீர் பெறப்பட்டுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

இவை தொடர்பாக துணுக்காய் பிரதேச செயலர் மற்றும் முல்லைத்தீவு அரச அதிபர் ஆகியோரிடம் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தென்னியன் குளத்தின் வான் பகுதியில் காடுகள் வளர்ந்திருப்பதால் அப்பகுதி பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

இது தொடர்பாக அதிகாரிகளிடம் தெரிவித்தபோது உலக உணவு வேலைத் திட்டத்தின் கீழ் பொது மக்கள் இந்தக் காடுகளை அழிக்க முடியுமென பதிலளிக்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது. (க-18)

## விற்பனையாகாத மீன்களைக் கருவாடாக்குவதில் மன்னார் மீனவர்களுக்கு இயற்கையால் இடையூறு

மன்னார், ஒக்.27

மன்னாரில் தொடர்ந்து மழைபெய்து வருவதால் விற்பனையாகாத மீன்களைக் கருவாடு போடமுடியாத நிலையில் மீனவர்கள் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில வாரங்களாக மன்னாரில் அதிகளவான மீன்கள் மீனவர்களின் வலைகளில் சிக்குகின்றன. குறிப்பாக சூரை மீன்கள் தினமும் ஆயிரக்கணக்கில் பிடிபடுகின்றன. இதனால் இவற்றின் விலையும் குறைவடைந்துள்ளது.



ஒரு கிலோ சூரை மீன் 100 ரூபா தொடக்கம் 150 ரூபா வரை விற்பனையாகி வந்த போதிலும் தற்போது இதிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

நாட்டின் பல பாகங்களிலும் அதிகளவில் மீன்கள் பிடிபடுவதால் அதன் தாக்கம் மன்னாரிலும் தெரிகின்றது.

தென்பகுதியிலும் அதிகளவு மீன்கள் பிடிபடுவதால் மன்னாரிலிருந்து கொழும்புக்கு மீனைஅனுப்பி வைக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

மாறாக தென்பகுதியிலிருந்து இங்கு மீன்களைக் கொண்டு வரும் நிலையே காணப்படுகின்றது.

இதனால் உள்ளூர் மீனவர்கள்தாம் பிடிக்கும் மீன்களை விற்கமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அத்துடன் தொடர்ந்து மழைபெய்வதால் விற்க முடியாத மீன்களை கருவாடு போட முடியாத நிலையில் கடலில் கொட்டி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-12)

## பிரதேச சபை செயலாளருக்கு விருதும் சான்றிதழும்

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சிறந்த செயலாற்றுகைக்கான தேசிய விருதும் சான்றிதழும் மாந்தை மேற்கு பிரதேச சபைச் செயலாளர் சம்சோன் ஜெனிவ்ஸுக்கு வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் 31 ஆம் திகதி கொழும்பு ஸ்ரீலங்கா பவுண்டேசன் நிறுவனத்தில் வைத்து கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன இவற்றை வழங்கவுள்ளார்.

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச சபையும், நூலகமும் இணைந்து ஏற்பாடு செய்த தேசிய வாசிப்பு மாத நிகழ்ச்சித் திட்டம், தெரு நாடகம், துண்டுப் பிரசுரம், கருத்தரங்கு மற்றும் சமூக நிகழ்வுகளில் பிரதேசசபை செயலாளர் சம்சோன் ஜெனிவ்ஸ் வினைத்திறனான பங்களிப்பை ஆற்றியமைக்காகவே இத் தேசிய விருதுக்காக வடமாகாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-41)

# மன்னார் நகரசபை செயலாளரை இடமாற்றுமாறு வலியுறுத்து

### குற்றச்சாட்டுகளை மறுக்கிறார் அவர்

யாழ்ப்பாணம்,ஒக்.27

மன்னார் நகரசபையின் செயலாளரை இடமாற்றுமாறு கோரி மன்னார் நகர சபையின் தவிசாளர் வலியுறுத்துகிறார். இது தொடர்பான கடிதம் உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். ஆனால் அவ்வாறு எந்தக் கடிதமும் தனக்குக் கிடைக்கவில்லையென்று வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.ஜெகூ மறுத்துள்ளார்.

மன்னார் நகர சபையின் தவிசாளரினால் அனுப்பி வைக்கப்பட்டதாகக் கூறப்படும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட மன்னார் நகரசபை உருவாகி 17 மாதங்கள் கடந்துவிட்ட போதும், சபையின் செயலாளரது திறமையின்மை மற்றும் அலட்சியப் போக்கினால் நகரசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் பெரும்பாலானவை செயற்படுத்தப்படாமலுள்ளதுடன், பொருத்தமற்ற சாக்குப் போக்குகள் கூறி காலம் கடத்தப்பட்டு வருகின்றது. நகரசபையின் அபிவிருத்தித் திட்டங்கள் மிகவும் மந்த நிலையில் உள்ளதோடு, சபைக்கு வர வேண்டிய வருமானங்களையும் இழந்து வருகின்றோம். குறிப்பாக முத்திரைக் கட்டணங்கள், வரிகள், வாடகைகள் போன்றவற்றை உரிய காலத்தில் பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

மேலும் நகரசபைக்குச் சொந்தமான அசைவற்ற ஆதனங்களின் விவரங்களைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதோடு அவற்றைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளும் சட்ட பூர்வமற்ற கட்டடங்களைத் தடுக்கும் முயற்சிகளும் அசமந்தப் போக்கிலேயே இடம்பெறுகின்றன.

சகல வேலைகளும் சபைச் செயலாளரினால் முடக்கப்படுகின்றன. எனவே சபையின் செயலாளரை இடமாற்ற வேண்டும்-என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு இந்தக் கடிதம் கடந்த 3 ஆம் திகதி அனுப்பப்பட்டுள்ளதாகத் தவிசாளர் தெரிவிக்கிறார். இதன் பிரதிகள் வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளர், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன எனவும் தெரிவித்து, அதன் பிரதி ஒன்றையும் 'உதயனிடம்' அவர் வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்று வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளரிடம் கேட்டபோது, அவ்வாறான கடிதம் எதுவும் தனக்குக் கிடைக்கவில்லை என்று திட்டவட்டமாகப் பதிலளித்தார்.

குற்றச்சாட்டுகள் தொடர்பில் சபையின் செயலாளரிடம் கேட்டபோது, அவர் தெரிவித்ததாவது:-

அரச நடைமுறைக்கு அமைவாகவும், அரசின் நிதிப் பிரமாணங்களுக்கு அமைவுமே நான் நடக்கிறேன். முத்திரைக் கட்டணம் மத்திய திறைசேரியிலிருந்தே கிடைக்கப் பெறும். நாம் கடிதம் எழுதியும் திறைசேரி நிதியை இதுவரை விடுவிக்கவில்லை. சட்டவிரோத கட்டடம் தொடர்பில் நாம் பொலிஸார் ஊடாக நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம்.

'நெல்சிப்' திட்டத்தில் சந்தைக் கட்டடம் அமைக்க சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. ஆனால் சந்தைக் கட்டடத்தின் காணிக்குரிய உறுதி பிரதேச செயலாளரிடமிருந்து இன்னும் கிடைக்கவில்லை. அதனால் அந்தப் பணிகளில் முன்னேற்றம் ஏற்படவில்லை.

அத்துடன் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் மேற்படி சந்தைக் கட்டடத்துக்கான அனுமதி மறுக்கப்பட்டு பதிலாக எட்டு வீதிகளில் திருத்தம் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இருந்தும் நான் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருக்கு கடிதம் எழுதியுள்ளேன்-என்றார். (உ-5-12)

## கழிவு நீர் தேங்கி துர்நாற்றம்; பயணிகள் பெரும் அசௌகரியம்

### மன்னார் தனியார் பஸ் தரிப்பிடத்தில்

மன்னார், ஒக்.27

மன்னார் தனியார் பஸ் தரிப்பிடப் பகுதியில் தேங்கி நிற்கும் கழிவு நீரினால் இங்கு வரும் பயணிகள் தாம் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

மன்னார் அரச பஸ் தரிப்பிடத்தில் உள்ள உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் பின்பகுதியில் அமைந்துள்ள தனியார் பஸ் தரிப்பிடப் பகுதியில் தேங்கி நின்று துர்நாற்றம் வீசுவதால் அங்கு பஸ்களுக்காகக் காத்திருக்கும் பயணிகள் அருவருப்புடன் மூக்கைப் பொத்தியவாறு நிற்பதைக் காண முடிகின்றது.

இது தொடர்பாக மன்னார் தனியார் பஸ் சங்கத்தின் தலைவர் ரீ.ரமேஷுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது; அரச பஸ் தரிப்பிடத்தில் அமைந்துள்ள உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் அதன் பின்பகுதியில் அமைந்துள்ள எமது தனியார் பஸ் தரிப்பிடப் பகுதியில் தேங்கி நிற்பது உண்மையே.

இது தொடர்பாக நாம் பல தடவைகள் அவர்களுக்கு எடுத்துக் கூறியுள்ளோம். ஆனால் அவர்களால் மாற்று நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

தற்போது மழைக்காலம் என்பதால் இந்தக் கழிவு நீருடன் மழை நீரும் கலப்பதால் துர்நாற்றம் வீசுகின்றது. இதனால் இங்கு வரும் பயணிகள் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இது தொடர்பாக எமது சங்கத்தின் சார்பாக மன்னார் நகரசபையின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளோம்.

அவர்கள் குறித்த கழிவு நீரைக் கழிவு நீர் வாய்க்காலுடன் இணைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதாகத் தெரிவித்து அதன் பிரகாரம் முதல் கட்டப் பணிகளையும் தற்போது ஆரம்பித்துள்ளனர். இந்தப் பணிகள் பூர்த்தியானதும் இந்தக் கழிவு நீர்த் தொல்லை நீங்குமென நம்புகின்றோம் எனத் தெரிவித்தார். (க-12)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் சிறுவர் - முதியோர் தின நிகழ்வுகள் பிரதேச செயலர் ஆ.சிறி தலைமையில் அண்மையில் நடைபெற்றன. இதன்போது இடம்பெற்ற கலை நிகழ்வுகளின் ஒரு சில காட்சிகள். பிரதேச செயலர் மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குகிறார். (ம-5)

## இரண்டு உள்ளூராட்சிச் சபைகள் சேரும் வீதியைப் புனரமைக்குக

### சபைத் தலைவர், செயலாளர்களுக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், ஒக்.27

இரு உள்ளூராட்சிச் சபைகள் சேரும் பிரதேச சபை வீதி நீண்ட பல வருடங்களாகப் புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் உள்ளது. இதனால் போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிக்கும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து யாழ்.பல்கலைக் கழக வணிகவியல் சிரேஷ்ட விரிவுரையாளரும் வெளிவாரிப் பட்டப் படிப்புகள் அலகு இணைப்பாளருமான பேராசிரியர் கந்தையா சிவராசா நல்லூர், மானிப்பாய் பிரதேச சபைகளின் தலைவர், செயலாளர்களுக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மானிப்பாய் பிரதேச சபைக்கான கொத்திமூலை வீதியையும் நல்லூர் பிரதேச சபைக்கான ஐங்கரன்-குரங்களிப்பான் வீதியையும் இணைக்கும் வீதியே இவ்வாறு மீளப்புனரமைப்பு இன்றி உள்ளது.

இந்தக் கொத்திமூலை, குரங்களிப்பான் வீதிகள் கடந்த 15 வருடங்களாக புனரமைப்புச் செய்யப்படவில்லை.

எனவே இரு சபைகளின் தலைவர், செயலாளர்கள் இணைந்து குறித்த வீதிகளைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தினமும் இந்த வீதிகளை ஆயிரக்கணக்கான பொதுமக்கள், விவசாயிகள், அரச அலுவலர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் பயன்படுத்தி வருகின்றனர். எனவே இதற்கான நடவடிக்கை விரைந்து எடுக்கப்பட வேண்டும் - என்றுள்ளது. (ம-41)

# யாழ். விதை வெங்காயத்துக்கு இலங்கை முழுவதும் கிராக்கி

### அதனை அதிகளவில் களஞ்சியப்படுத்த ஏற்பாடு

அச்சுவேலி,ஒக்.27

யாழ்.மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்டுக் களஞ்சியப்படுத்தப்படும் விதை வெங்காயத்துக்கு இலங்கை முழுவதும் பெரும் மதிப்பு ஏற்பட்டுள்ளதால் விதை வெங்காயத்தைக் களஞ்சியப்படுத்துவதற்கான களஞ்சியங்களை நிறுவுவதற்கு தெரிவு செய்யப்பட்ட முன்னோடி விவசாயிகளுக்கு 50 ஆயிரம் ரூபாவை விவசாயத் திணைக்களம் அன்பளிப்பாக வழங்கவுள்ளது. விவசாயிகள் 50 ஆயிரம் ரூபாவை முதலீடு செய்து ஒரு லட்சம் ரூபா செலவில் மாதிரிக் களஞ்சியங்களை நிறுவ வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெங்காய இறக்குமதியை முற்றாகத் தடைசெய்து நாட்டுக்குத் தேவையான வெங்காயம் முழுவதையும் உள்ளூரில் உற்பத்தி செய்வதற்கு அரசு கொள்கையளவில் தீர்மானித்திருப்பதால் உள்நாட்டில் மேற்கொள்ளப்படவுள்ள வெங்காயச் செய்கைக்கான விதை வெங்காயத்தை யாழ்.மாவட்டத்தில் தயார் செய்வதற்கு முன்னோடியாகவே விதை வெங்காயத்துக்கான மாதிரிக் களஞ்சியங்கள் கட்டமைப்பு அறிமுகம் செய்யப்பட்டு விவசாயிகளின் வசிப்பிடங்களில் அவற்றை நிறுவுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

விதை வெங்காயக் களஞ்சியங்களின் கூரை ஓலையால் வேயப்பட வேண்டும். நிரந்தரமான சிமெந்துத் தூண் கொண்டதாகவும் 20 X 16 அடி தரை விஸ்தீரணம் கொண்டதாகவும் தரைப் பகுதி சிமெந்துக் கலவை கொண்டு சீர்செய்யப்பட்டதாகவும் இருக்கவேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் கமநல சேவை நிலையப் பிரிவு ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட முன்னோடி விவசாயிகளுக்கு விதை வெங்காய களஞ்சியங்கள் அமைப்பதற்கு உரிய உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதுவரை 50 மாதிரிக் களஞ்சியங்கள் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன என்றும் வலி. கிழக்கில் மேலும் 20 களஞ்சியங்கள் நிர்மாணிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.


நாடளாவிய ரீதியில் வெங்காயச் செய்கை நடைபெறுகின்ற போதிலும் புத்தளம், கற்பிட்டி, நிலாவெளி, திருகோணமலை, மட்டக்களப்பு, மொனறாகலை, அம்பாறை, வவுனியா, அம்பாந்தோட்டை, குருநாகல் ஆகிய பிரதேசங்களில் கணிசமான அள்வு மேற்கொள்ளப்படுகின்றன.

ஆனால் குறித்த பிரதேசங்களில் விதை வெங்காயத்தைக் களஞ்சியப் படுத்தித் தயார் செய்வதற்கு முடியாத நிலை காணப்படுவதாகக் கூறப்படுகின்றது.

அவ்வாறு களஞ்சியப் படுத்திய வெங்காயங்கள் சேதமடைந்து போவதும் முளைதிறன் விகிதம் குறைவாகக் காணப்படுவதும் அவதானிக்கப்பட்டதை அடுத்தே யாழ். மாவட்டத்தில் முழுமையாக விதை வெங்காயத்தைத் தயார் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(த-11)

## வெள்ளத்தில் நினைவாலயம்




யாழ்ப்பாணம்,ஒக்.27

யாழ்.முற்றவெளிப் பகுதியில் உள்ள தமிழாராய்ச்சி மாநாட்டின் போது கொல்லப்பட்டவர்களின் நினைவாலயத்தை வெள்ளம் சூழ்ந்துள்ளது.

நினைவாலயத்தில் வெள்ளம் உட்சென்று தேங்கிக் காணப்படுவதால் அதன் தூய்மை பாதிக்கப்படுவதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மழை வெள்ளத்தை அகற்றி நினைவாலயத்தின் தூய்மையைப் பாதுகாக்கச் சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் உரிய கவனம் எடுக்காமை குறித்தும் விசனம் தெரிவிக்கப்படுகிறது. (ம-17)

## சாரதிக்கு அபராதம்

ஏ-9 வீதியில் அபாயகரமான நிலையிலும், வீதியில் செல்லும் வாகனங்களுக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடிய வகையிலும் பயணிகள் வாகனத்தை செலுத்திய சாரதிக்குச் சாவகச்சேரி நீதிமன்றில் 20 ஆயிரம் ரூபா அபராதமும் மூன்று மாதங்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரத்தை தடுத்து வைக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. பொலிஸாரால் சாவகச்சேரி நீதிமன் றில் தாக்கல் செய்த வழக்கு கடந்த 25 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்பட்டது. வழக்கினை விசாரித்த நீதிவான் சாரதியைக் கடுமையாக எச்சரிக்கை செய்து 20 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் அவரின் சாரதி அனுமதிப்பத்திரத்தை நீதி மன்றில் மூன்று மாதங்கள் தடுத்து வைக்குமாறும் உத்தரவிட்டார். (த-9)

## யாழ்.புல்லுக்குளம் பகுதியில் கழிவுநீர் வடிகால் துப்புரவு



யாழ்ப்பாணம்,ஒக்.27

யாழ். புல்லுக்குளத்துக்கு எதிராக உள்ள கழிவு நீர் ஓடும் வடிகால் மற்றும் அதனை அண்மித்த பகுதிகள் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

கழிவு நீர் வாய்க்காலில் தேங்கியுள்ள கழிவுகள், சேறு என்பன மாநகர சபைத் தொழிலாளர்களால் அகற்றப்பட்டு வருகின்றன.

இந்தப் பகுதிகளில் கழிவுகள் தேங்கி இருந்தமையால் குறித்த பகுதியிலுள்ள வீதியால் செல்லும் மக்கள் துர்நாற்றத்தால் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வந்தனர்.

இதனால் நுளம்புப் பெருக்கம் அதிகரித்துக் காணப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில் தற்போது கழிவுகள் அகற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

## பிரதேச அபிவிருத்தியில் கைதடி பகுதி புறக்கணிப்பு

**சாவகச்சேரி பிரதேசத்தில் கைதடி பிரதேசத்துக்கே முன்னுரிமை கொடுத்து அபி விருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்கிறார் பிரதேச சபைத்தலைவர்.**

கைதடி,ஒக்.27

சாவகச்சேரி பிரதேச சபையால் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி வேலைகளில் கைதடிப் பிரதேசம் புறக்கணிக்கப்பட்டு வருகின்றது என்று முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன.

குறித்த பிரதேச சபையால் ஏனைய உப அலுவலகப் பகுதிகளில் வீதி உள்ளிட்டபலஅபிவிருத்தி வேலைகள் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் கைதடிப் பிரதேசம் புறக்கணிக்கப்படுகின்றது என்று மக்கள் கூறுகின்றனர்.

பிரதேச வீதிகள் முப்பது வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாத நிலையில் காணப்படுகின்றன.

அத்துடன் சாவகச்சேரி பிரதேச சபையின் உப பணிமனைகள் யாவும் புதிய கட்டடத்தில் உள்ளன. தலைமை அலுவலகக் கட்டடம் கொடிகாமம் கடைத் தொகுதி போன்றவற்றைப் புதிதாக அமைக்க இந்தப் பிரதேச சபை கைதடி உப பணிமனைக் கட்டடத்தைத் திருத்தாது அங்கிருந்து வெளியேறி தனியார் வீடொன்றில் வாடகை கொடுத்து செயற்படுவதாகவும் கூறப்படுகின்றது.

இந்த விடயத்தில் பிரதேச சபை உறுப்பினர்கள் கவனம் செலுத்தாது தமது பகுதிக்கான வேலைகளை ஒப்பந்த அடிப்படையில் எடுத்து அவற்றை மட்டும் செய்து வருகின்றனர் என்றும் கூறப்படுகிறது.

இந்த விடயத்தில் சாவகச்சேரி பிரதேச சபை நிர்வாகம் கவனம் எடுத்து கைதடிப் பிரதேசத்திலும் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகச் சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் சிற்றம்பலம் துரைராசாவிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது:-

சாவகச்சேரி பிரதேசத்தில் கைதடி பிரதேசத்துக்கே முன்னுரிமை கொடுத்து அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எந்தவித பாரபட்சமும் காட்டப்படுவதில்லை. ஆறு லட்சம் ரூபா நிதியுதவியில் உள்ளூர் வீதிகள் கடந்த ஒரு வருட காலத்துக்குள் புனரமைப்புச் செய்யப்பட்டன.

இதனைவிட அடுத்த வருடம் 'நெல்சிப்' திட்டத்தின் கீழ் பெரியளவில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதனைவிட இந்த மாதம் இறுதிக்குள் வீதிகளுக்கு மின்சார விளக்குப் பொருத்தும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பிரதேச சபையால் சந்தை வசதி மற்றும் சுகாதார வசதிகள், வீதி அபிவிருத்திப் பணிகள் என்று குறிக்கப்பட்ட பணிகளையே மேற்கொள்ள முடியும்.

கைதடிப் பிரதேசத்தில் முற்று முழுதாக மக்களுக்கான அடிப்படைத் தேவைகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதைக் கூற முடியாது.

ஆனால் சாவகச்சேரி பிரதேச சபையால் திட்டமிட்ட அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.- என்றார். (ம-14-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காங்கிரஸின் மாபெரும் பேரணி நவம்பர் 4 இல்

எதிர்க்கட்சியினரின் குற்றச்சாட்டுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் காங்கிரஸ் சார்பில் அடுத்த மாதம் 4 ஆம் திகதி மாபெரும் பேரணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பேரணியில் காங்கிரஸ் தலைவர் சோனியா மற்றும் ராகுல் ஆகியோர் பங்கேற்று பேசவுள்ளனர்.

இந்தப் பேரணியில் இலட்சக்கணக்கானவர்கள் பங்கேற்கும் வகையில் முதல்வர் ஷீலா தீட்சித் மும்முர ஏற்பாட்டில் இறங்கியுள்ளார். புகழ்பெற்ற ராம்லீலா மைதானத்தில் மேற்படி பேரணி நடக்கவுள்ளது. (வ)



இமாச்சல பிரதேச மாநிலம் கிலாங்கில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில், பாரம்பரிய உடையுடன் காங்கிரஸ் பொதுச்செயலாளர் ராகுல்.

## காந்திக்கு 'தேசத் தந்தை' பட்டம் வழங்க முடியாது

### உள்துறை அமைச்சகம் தெரிவிப்பு



விடுதலைக்காகப் போராடிய மகாத்மா காந் திக்கு 'தேசத் தந்தை' என்ற பட்டம் அளிக்க அரசியல் சட்டத்தில் இடம் இல்லை என்று உள்துறை அமைச்சகம் தெரிவித்தது.

உத்தரப்பிரதேச மாநிலம் லக்னோவைச் சேர்ந்த 6 ஆம் வகுப்பு மாணவி ஐஸ்வர்யா, மகாத்மா காந்தி பற்றிய தகவல்களைத் தருமாறு தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் மனு அனுப்பியிருந்தார்.

அதில் மகாத்மா காந்திக்கு தேசத் தந்தை என்று பட்டம் வழங்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. பின்னர் மகாத்மாவை தேசத் தந்தை என்று முறைப்படி அறிவிக்க கோரி ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் ஐஸ்வர்யா கடிதம் எழுதினார்.

இதுதொடர்பாக மீண்டும் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் மனு தாக்கல் செய்தார். இதற்கு பதிலளித்த உள்துறை அமைச்சகம், மகாத்மா காந்தியை தேசத் தந்தை என்று ஜனாதிபதி அறிவிப்பது தொடர்பாக எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

அரசியல் சாசன சட்டம் பிரிவு 18 (1) இன்படி யாருக்கும் எந்தவிதமான பட்டத்தையும் அளிக்க இயலாது. கல்வித்துறை மற்றும் இராணுவத்தைச் சார்ந்தோருக்கு மட்டுமே பட்டங்களைக் கொடுக்க முடியும் என்று குறிப்பிட்டுள்ளது. (வ)

# சீன விமானங்கள் அத்துமீறல் இந்தியாவின் வான் பரப்பில்

### எல்லைப் படையின் அதிகாரி குற்றச்சாட்டு

டில்லி, ஒக்.27

இந்திய வான்வெளியில் சீன விமானங்கள் அத்துமீறி பறக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக இந்தியா குற்றம் சாட்டியுள்ளது.

இந்திய - திபெத்திய எல்லைப் பாதுகாப்புப் படையின் வருடாந்த கருத்தரங்கு டில்லியில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை நடைபெற்றது. இதில் இந்திய - திபெத்திய எல்லைப் பாதுகாப்புப் படையின் அதிகாரி எம்.எஸ்.புர்ஜி தெரிவித்ததாவது:- இருநாடுகளுக்கும் இடையே எல்லைப் பிரச்சினை நிலவி வருவதால் இதுபோன்ற சம்பவங்கள் அடிக்கடி நிகழ்கின்றன.

கடந்த மே மற்றும் ஜூன் மாதங்களில் மட்டும் 3 முறை இதுபோன்ற அத்து மீறல்களில் சீனா ஈடுபட்டுள்ளது. ஆனால், அந்த நாட்டின் விமானங்கள் மிகவும் உயரமாகப் பறந்ததால், எவ்வளவு தூரம் அவை எமது நாட்டு எல்லைக்குள் வந்தன என்பதை கணக்கிட முடியவில்லை. எனினும், அவர்கள் அத்து மீறி நுழைந்துள்ளனர் என் பதை ஊகிக்கிறோம் - என்றார்.

இதேவேளை இந்திய - திபெத்திய எல்லைப் பாதுகாப்புப் படையின் இயக்குநர் ஜெனரல் ரஞ்சித் சின்ஹா இது குறித்து செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

இந்திய - சீன எல்லைப் பகுதி தெளிவாக வரையறை செய்யப்படவில்லை. சில நேரங்களில் இந்திய எல்லை என்று நாம் கருதும் பகுதிக்குள் எமது விமானங்கள் பறந்து செல்வதை சீனத் தரப்பில் அத்துமீறல் என்கின்றனர். எல்லைப் பகுதியை நிர்ணயிக்காததால், சீன இராணுவத்தினர் மேற்கொள்ளும் ரோந்துப் பணிகளில் சில சமயங்களில் அத்துமீறல் இருப்பதாக நாம் கருதுகிறோம். இது தொடர்பாக மத்திய அரசுக்கு அவ் வப்போது அறிக்கை அளித்து வருகிறோம்.

இந்திய - திபெத்திய எல்லைப் பாதுகாப்புப் படைக்கு வான் பிரிவு ஒன்றை ஏற்படுத்தத் திட்டமிட் டுள்ளோம். இது தொடர்பாக அரசு பரிசீலித்து வருகிறது. தற்போதைக்கு எங்களுக்குத் தேவைப்படும்போது விமானப்படையை உதவிக்கு அழைக்கிறோம். ஏனைய படையினருடன் இணைந்து செயற்பட்டு வருகிறோம். எல்லைப் பகுதிகளில் இராணுவத்தினருடன் இணைந்து கண்காணிப் புப் பணியில் ஈடுபட்டு வருகிறோம். 1962ஆம் ஆண்டு இந்திய - சீனப் போருக்கு பின், எமது படை வலிமை பல மடங்கு அதிகரித் துள்ளது.

இந்திய - திபெத்திய எல்லைப் பாதுகாப்புப் படையை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர வேண்டும் என்ற இராணுவத்தின் கோரிக்கை தொடர் பாக மத்திய அரசு முடிவு ஏதும் எடுக்கவில்லை - என்றார். (வ)

## எங்களை எவராலும் வீழ்த்த முடியாது

### கருணாநிதி பெருமிதம்



தி.மு.க. தலைவர் கருணாநிதி, உறுதிமிக்க தொண்டர்கள் இருக்கும் வரை திராவிட இயக்கத்தை யாராலும் வீழ்த்த முடியாது என்று தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற திருமண நிகழ்வில் கலந்துகொண்டு அவர் பேசியபோது மேலும் தெரிவித்ததாவது:-

திராவிட இயக்கம் பார்புகழும் இயக்கங்களில் ஒன்றாக இருப்பதற்கு அதன் தலைவரோ, பெரும் பொறுப்புகளில் இருப்பவர்களோ காரணம் அல்ல தொண்டர்கள் தான்.

இந்த இயக்கம் பல்வேறு தோல்விகளை எதிர்கொண்ட போதும், பல பிரளயங்களை சந்திக்க நேரிட்ட போதும், புயல் பூகம்பங்களுக்கெல்லாம் ஈடுகொடுத்து நிற்க காரணம் அதன் இயக்கத்தின் கொள்கை வீரர்கள் ஆற்றிய தனித்தொண்டு தான். இத்தகைய உறுதிமிக்க தொண்டர்கள் இருக்கும் வரை திராவிட இயக்கத்தை யாராலும் வீழ்த்த முடியாது -என்றார். (வ)

## தமிழக சட்டசபை வைரவிழாவுக்கு ஜனாதிபதிக்கு அழைப்பு

டில்லி, ஒக்.27

தமிழக சட்ட சபை சபாநாயகர் தனபால் மற்றும் அமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் தலை மையிலான குழுவினர் டில்லிக்குச்சென்று ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியைச் சந்தித்து தமிழக சட்டப்பேரவையின் வைர விழாவுக்கான அழைப்பை விடுத்துள்ளனர்.

தமிழக சட்டப்பேரவையின் வைர விழா, அடுத்த மாதம் 30 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது. விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்க ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியை அழைப்பதற்காக தமிழக சட்டப்பேரவை சபாநாயகர் தனபால், அமைச்சர்கள் ஓ.பன்னீர்செல்வம், நத்தம் விஸ்வநாதன் ஆகியோர் கொண்ட குழுவினர் நேற்றுக் காலை 6.40 மணிக்கு விமானத்தில் டில்லிக்குப் புறப்பட்டனர்.

பிற்பகலில் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியை சந்தித்த மேற்படி குழுவினர், வைர விழாவில் பங்கேற்க அழைப்பு விடுத்தனர்.(வ)

## நித்தியின் பிடியில் பெண்கள் மகளிர் ஆணையம் பிடியாணை

### மீட்கக் கோரிய வழக்கை அடுத்து



பிடதி ஆசிரமத்தில் இருக்கும் பெண்களை மீட்கக் கோரிய வழக்கில் நேரில் முன்னிலையாகி விளக்கம் அளிக்க நித்தியானந் தாவுக்கு மகளிர் ஆணையம் அழைப்பாணை அனுப்பி யுள்ளது.

கும்பகோணத்தைச் சேர்ந்த புலவர் மகாதேவன் சென்னை உயர் நீதிமன் றத்தில் நித்தியானந்தா பிடியில் இருக்கும் பெண் களை மீட்கக் கோரி மனு தாக்கல் செய்தார்.

அந்த மனு மீதான விசாரணையை நீதிபதிகள் பானுமதி, சுப்பையா ஆகியோர் ஒத்திவைத்தனர். அதைத் தொடர்ந்து புலவர் மகாதேவன் சென்னையில் உள்ள தமிழ்நாடு மகளிர் ஆணையத்தில் நேற்று முன்தினம் நேரில் முன்னிலையாகி நித்தியானந்தா மீது முறைப் பாட்டு மனு சமர்ப்பித்தார். அதில், அவர் குறிப்பிட் டுள்ளதாவது:-

பிடதி ஆசிரமத்தில் நித்தியானந்தாவின் பிடியில் அதிகமான பெண்கள் உள்ளனர். அவர்களை வசியம் செய்து நித்தியானந்தா தனது ஆசிரமத்தில் வைத்துள்ளார். அங்கு தன்னை மறந்துள்ள பெண்களை மீட்கக்கோரி நான் நடவடிக்கை எடுத்து வருகிறேன். நித்தியானந் தாவின் பிடியில் உள்ள பெண்களை மீட்க வேண்டும்.

பெண்களிடம் தந்திரி பாலியல் என்ற ஒப்பந்த அடிப்படையில் உறவு வைத்து கொள்ளும் முறையைக் கையில் எடுத்துக் கொண்டு பெண்களை தனது கட்டுப் பாட்டில் வைத்துள்ளார் நித்தியானந்தா. பெண்களால் அங்கிருந்து மீளமுடியவில்லை. பாலியல் உறவு வைத்துக் கொள்ள ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளார். பெண்களை அடிமைகளாக வைத் துள்ளார்-என்றுள்ளது. (வ)

# ஜெயலலிதாவைச் சந்தித்த தே.மு.தி.க. உறுப்பினர்கள்

### அதிர்ச்சியில் அந்தக் கட்சி



தே.மு.தி.கவின் இரு சட்டசபை உறுப்பினர்கள் நேற்று தமிழக முதல்வர் ஜெயலலிதாவை தனிப்பட்ட முறையில் சந்தித்துப் பேசிய விவகாரம் அந்தக் கட்சி உள்மட்டத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தே.மு.தி.கவின் மதுரை மத்திய தொகுதி சட்டசபை உறுப்பினரான ஆர்.சுந்தர்ராஜன், திட்டக்குடி சட்டசபை உறுப்பினர் க.தமிழழகன் ஆகியோரே நேற்று தமது ஆதரவாளர்களுடன் சென்று முதல்வரை சென்னை கோட்டையில் சந்தித்தனர்.

நீண்டநாள்களாக கிடப்பில் போடப்பட்டுள்ள தங்கள் தொகுதி வளர்ச்சிப் பணிகளுக்கு தமிழக அரசு உதவி செய்ய வேண்டும் என்று கோருவதற்காகவே மேற்படி சந்திப்பு இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்ற போதும், கட்சி தலைமையின் அனுமதி பெற்றா இந்தச் சந்திப்பு நடைபெற்றது எனும் கேள்விக்கு பதில் இல்லை.

இதனால் குறித்த இரு சட்டசபை உறுப்பினர்களும் அ.தி.மு.கவில் இணையவுள்ளதாகவும், அதற்காகவே அவர்கள் முதல்வரை சந்திக்கச் சென்றதாகவும் பரபரப்பானதகவல்வெளியாகியுள்ளது. கடந்த சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.கவுடன் கூட்டணி அமைத்த தே.மு.தி.க. 29 இடங்களைப் பிடித்து எதிர்க்கட்சி எனும் அந்தஸ்தைப் பெற்றது. விஜயகாந்த் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரானார். எனினும் தற்போது அரசுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்து, ஆட்சியையும், தமிழக அரசையும் கடுமையாக விமர்சித்து வருவது குறிப்பிடத்தக்கது. (வ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஆப்கன் போர்க்களத்தில் இறந்த அமெரிக்க நாய்க்கு வீர விருது



ஆப்கானிஸ்தானில் இராணுவத்தினருடன் பணியில் ஈடுபட்டிருந்தபோது, இறந்த அமெரிக்க நாய்க்கு வீரச் செயலுக்கான பதக்கம் வழங்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா தலைமையிலான நேட்டோப் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுடன் மோப்ப நாய்களும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

ஆப்கானிஸ்தானில் ஐந்து மாத காலம் பணியில் ஈடுபட்ட 'தியோ' என்ற நாய் தலிபான்கள் வைத்த வெடி குண்டுகளையும், வெடி மருந்துப் பொருள்களையும் கண்டு பிடித்தது. இதன் மூலம் அமெரிக்கப் படையினர் பலர் உயிர் பிழைத் தனர்.

எனினும் கடந்தாண்டு மார்ச் மாதம் தலிபான்களின் தாக்குதலில் அமெரிக்கப் படையினருடன் தியோவும் உயிரிழந்தது.

வீரச் செயல் புரியும் விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் அமெரிக்காவைச் சேர்ந்த பி.டி.எஸ்.ஏ. என்ற அமைப்பு சாதனை பதக்கம் வழங்கிக் கௌரவித்துவருகிறது. இந்த வகையில் தியோவுக்கும் விருது வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை மேற்படி விருது 64 பிராணிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் 27 நாய்களும், 32 புறாக்களும், மூன்று குதிரைகளும், ஒரு பூனையும் உள்ளடங்குகின்றன.



ஜெருசலேமில் அந்நாட்டு பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு மற்றும் இத்தாலிப் பிரதமர் மரியோ மோன்டி இருவரும் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத் திட்டனர். (வ)

# ஜமைக்காவை தாக்கிய 'சான்டி' 20 பேரின் உயிரைப் பறித்தது


### கியூபாவும் பாதிப்பு; கரையோரப் பகுதிகளில் வெள்ளம்

கியூபா, ஹெய்ட்டி, ஜமைக்கா ஆகிய நாடுகள் ஊடாக வீசிய 'சான்டி' எனப்படும் சூறாவளி காரணமாக 20 பேர் உயிரிழந்தனர்.

பஹாமஸ் ஊடாக வடக்கிலுள்ள அமெரிக்கா நோக்கி இந்தச்சூறாவளி வீசியது. தென்கிழக்கு கியூபாவை சான்டி சூறாவளி 183 கிலோ மீற்றர்கள் வேகத்தில் தாக்கியுள்ளது.

ஜமைக்கா நாட்டில் 125 கி.மீ. வேகத்தில் பயங்கர சூறாவளி காற்றும், 25 செ.மீ. மழையும் பெய்ய வாய்ப்புள்ளதாக நேற்று முன்தினம் வானிலை ஆய்வு மையம் அறிவித்தது.

இதில் சிக்கி பொதுமக்கள் பாதிக்கப்படாமல் தடுக்க, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 2 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பப்பட்டனர்.



இந்தநிலையில் சக்தி வாய்ந்த புயல் நேற்று ஜமைக்காவைத் தாக்கியது. புயலில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் ஏனைய பாதிப்புகளில் இது வரை 20 பேர் உயிரிழந் துள்ளனர். ஜமைக்காவை கடந்துள்ள புயல் தற்போது கியூபாவையும் தாக்கியுள்ளது.

இதனால் கியூபாவின் இரண்டாவது பெரிய நகரமான சாண்டியோகா டி கியூபா நகரின் கரையோரப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கி உள்ளதுடன் அங்கு மின்சாரமும் துண்டிக்கப்பட்டுள்ளது.

அடுத்த சில மணித்தியாலங்களில் கியூபாவைக் கடந்து விடும் என்று எதிர்பார்க்கப்படும் இந்தப் புயல் பஹாமாஸை நோக்கி நகர்ந்து கொண் டிருப்பதாக அமெரிக்காவின் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஜமைக்காவை புயல் கடந்துவிட்ட போதும் கன மழையுடன், புயல் காற்று தொடர்ந்து வீசி வருகிறது. இதனால் அடுத்த 48 மணி நேரங்களுக்கு சர்வதேச விமான நிலையம் மூடப்பட்டுள்ளது.

மேலும் பொது மக்களை வீதிகளில் நடமாட வேண்டாம் என்று எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. (வ)

## 500 போலி பல்கலைக்கு பிரிட்டனில் மூடுவிழா

பிரிட்டனில் இயங்கி வந்த 500 இற்கும் அதிகமான போலி பல்கலைக் கழகங்களை அதிகாரிகள் அதிரடியாக மூடியுள்ளனர்.

பிரிட்டனில் உள்ள பல்கலைக்கழகங்களில் பல நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் ஆயிரக்கணக்கில் கல்வி கற்கின்றனர். வருடந்தோறும் அவர்களின் வருகை அதிகரித்து வருகிறது.

இந்தநிலையில் பிரிட்டனில் இயங்கி வரும் பல்கலைக்கழகங்களில் எல்லை பாதுகாப்பு முகவர் மற்றும் குடியேற்றத் துறை அதிகாரிகள் கடந்த 18 மாதங்களாக தீவிர ஆய்வு நடத்தி வருகின்றனர். அப்போது போலியாக இயங்கிய 500 இற்கும் அதிகமான பல்கலைக் கழகங்களை மூடுவதற்கு உத்தரவிட்டுள்ளனர்.

இதுகுறித்து பல்கலைக் கழகங்களின் தலைவர் எரிக் தோமஸ் கூறுகையில், கடந்தாண்டு ஏராளமான பல்கலைக் கழகங்கள் மூடப்பட்டு விட்டன. எனினும் வெளிநாட்டு மாணவர்களின் வருகையில் எந்த பாதிப்பும் இல்லை.

மூடப்பட்ட பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு வேறு பல்கலைக் கழகங்களில் இடம் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது-என்றார்.

## அடுத்த வருட தேர்தலில் போட்டியிடமாட்டேன்

### இத்தாலியின் முன்னாள் பிரதமர் தெரிவிப்பு



இத்தாலியில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று அந்த நாட்டின் முன்னாள் பிரதமர் சில்வியோ பெர்லஸ்கோனி தெரிவித்துள்ளார்.

அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டு தொடர்பான வழக்கு விசாரணையை அவர் எதிர்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனினும் வழிகாட்டல்களை வழங்க முடியும் என்று அவர் குறிப்பிட்டுள்ளதாக பி.பி.சி. செய்தி வெளியிட்டுள்ளது.


நாட்டின் நிதி நெருக்கடியைக் கையாண்ட முறைமை தொடர்பாக அழுத் தங்களை எதிர்நோக்கிய பெர்லஸ் கோனி, கடந்த ஆண்டு நிர்ப்பந்திக்கப்பட்ட நிலையில் பதவியை ராஜினாமாச் செய்திருந்தார்.

எனினும் பெர்லஸ் கோனியின் இந்த தீர்மானத்துக்கு இத்தாலிய அரசியலிலுள்ள சிரேஷ்ட பிரமுகர்கள், வரவேற்பையும் சந்தேகத்தையும் வெளியிட்டுள்ளனர்.

76 வயதான சில்வியோ பெர்லஸ்கோனியின் அரசியல் எதிர்காலம் குறித்து பல்வேறு வதந்திகள் வெளியாகி வந்த நிலையில், அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

### மலர்ந்து கனிந்தது காதல்

## காதலரை கரம் பிடிக்கிறார் சுவீடன் இளவரசி மேடலீன்



சுவீடன் நாட்டு இளவரசி மேடலீனுக்கும், அவரது காதலரான கிறிஸ் ஓ நீலுக்கும் நிச்சயதார்த்தம் நடை பெற்றது.

இருவரும் அடுத்த வருடம் திருமணம் செய்து கொள்ள போவதாக அறிவித்துள்ளனர்.

இதுகுறித்து மேடலீன் கூறுகையில், இம்மாத ஆரம்பத்தில் கிறிஸ் தனது காதலை என்னிடம் தெரிவித்தார்.

நானும் காதலை ஏற்றுக் கொண்டேன். அடுத்த கோடை விடுமுறையில் எங்களது திருமணம் நடைபெறும் என்று தெரிவித்தார்.

38 வயதான கிறிஸ் அமெரிக்கா மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளின் குடியுரிமையைப் பெற்றுள்ளார்.

உலக குழந்தைகள் அறக் கட்டளை என்ற தொண்டு நிறுவனத்தை நடத்தி வரும் மேடலீன், 2010ஆம் ஆண்டு சுவீடன் நாட்டு சட்டத்தரணி ஒருவருடன் நிச்சயதார்த்தம் செய்து கொண்டு, பின்னர் அவரைப் பிரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## மெக்சிகோவில் மோதல்

### 2 பெண்கள் உட்பட 7 பேர் உயிரிழப்பு

மெக்சிகோவின் வடக்கில் உள்ள ஜகாடெக்ஸ் மாகாணத்தில் கடற்படையைச் சேர்ந்த ஒரு பிரிவினருக்கும், மர்ம கும்பலுக்கும் இடையே நிகழ்ந்த துப்பாக்கிச் சண்டையில் 2 பெண்கள் உட்பட 7 பேர் உயிரிழந்தனர்.

இதுகுறித்து மாகாண அரச சட்டத்தரணியின் செய்தித் தொடர்பாளர் ஜோர்ஜ் ஃபுளோரிஸ் கூறுகையில்,

கடற்படையைச் சேர்ந்த ஒரு பிரிவினருக்கும், மர்மக் கும்பலுக்கும் இடையே 2 மணி நேரம் நடைபெற்ற மோதலில் அந்த கும்பலைச் சேர்ந்த 7 பேர் உயிரிழந்தனர். எனினும் அவர்களின் சடலங்களை அடையாளம் காண முடியவில்லை- என்றார்.

எனினும் இந்த மோதல் குறித்து தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்று அந்தநாட்டுக் கடற்படை தெரிவித்துள்ளது. ஜெட்டா இனத்தவர்கள் அதிகம் வசிக்கும் இந்தப் பகுதியில் வன்முறைச் சம்பவங்கள் அதிகமாக நிகழ்வது வழக்கம்.

கடந்த 2 வாரங்களுக்கு முன்பு அந்த இனத்தைச் சேர்ந்த முக்கிய தலைவர் ஒருவர் கடற்படையினரால் கொல்லப்பட்டார். இதற்கு பழிவாங்கும் விதத்தில் இந்தத் தாக்குதல் நடந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.(வ)

## கொலம்பியாவில் பச்சைநிற வைரம்; வதந்தியால் திரண்ட மக்கள்

கொலம்பியாவில் வீதியில் பச்சை வைரம் கிடைப்பதாக தகவல் வெளியானதால் மக்கள் கூட்டம் அலை மோதியது. தென் அமெரிக்க நாடான கொலம்பியா உலகின் 60 வீதம் விகித எமரால்ட் எனப்படும் பச்சை நிற வைரக் கற்களை ஏற்றுமதி செய்து வருகிறது.

இந்தநிலையில் நாட்டின் வடமேற்கில் உள்ள போயாக்கோ மலைப் பகுதியில் வீதிப்பணியாளர்கள் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

அவர்கள் வீதிகளை வெட்டியெடுத்தபோது பாறை மின்னியுள்ளது. இதனால் அங்கு எமரால்ட் கற்கள் எனப்படும் பச்சை வைரக்கல் பாறை இருப்பதாக தகவல் மின்னல் வேகத்தில் பரவத் தொடங்கியது. மேற்படி தகவல் அந்தப் பகுதியில் பர வவே நூற்றுக் கணக்கான மக் கள் புதையலைத் தோண்டி எடுக்க படையெடுத்துத் திரண்டு வந்தனர்

மக்கள் ஓரிடத்தில் ஒன்றாகத் திரண்டதால் அந்த மலைப்பகுதியில் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. பின்னர் அங்கு வந்த காவலர்கள் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். இருப்பினும் சிலர் அங்கிருந்து அந்த சிறிய வகை எமரால்ட் கற்களை எடுத்துச் சென்றதாகவும் கூறியுள்ளனர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடியான வேளையில் அ.மெ.– இஸ்ரேல் மிகப்பெரும் கூட்டு இராணுவப் பயிற்சி

## உலக நாடுகளின் மத்தியில் பெரும் பரபரப்பு

நெருக்கடிகள் நிலவும் இந்தவேளையில் அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து மிகப் பிரமாண்டமான கூட்டு இராணுவப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளன. இதனால் உலக நாடுகள் மத்தியில் பெரும் பரபரப்பு நிலவுகிறது.


இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையில் எல்லைப் பிரச்சினை தொடர்ந்து நீடித்து வருகிறது. இந்தப் பிரச்சினையில் இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்கா செயற்பட்டு வருகிறது. இதேபோல் ஈரான் அணு ஆயுதங்களைத் தயாரிப்பதாகக் கூறி, அந்த நாட்டின் மீது போர் தொடுப்போம் என்று இஸ்ரேலும், அமெரிக்காவும் மிரட்டி வருகின்றன. இந்தநிலையில், இதற்கு முன்பு எப்போதும் இல்லாத வகையில் மிகப்பெரிய கூட்டு இராணுவப் பயிற்சியில் அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈடுபட்டுள்ளன. ரொக்கெட்டுகளை ஏவி இரு நாட்டுப் படையினரும் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

சுமார் ஆயிரம் அமெரிக்க படையினரும் இதே எண்ணிக்கையிலான இஸ்ரேல் படையினரும் இந்தக் கூட்டு பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர். பயிற்சியில் மேலும் 2 ஆயிரத்து 500 அமெரிக்கப் படையினர் பங்கேற்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இஸ்ரேலுக்கு பல்வேறு வகையில் அச்சுறுத்தல் உள்ளது. இதை முறியடிக்கும் திறமையை வளர்த்துக் கொள்ள பயிற்சி இடம் பெறுகின்றது. 3 வாரங்களுக்கு மேற்படி பயிற்சி தொடர்ந்து நடைபெறும் என்று இருநாட்டு இராணுவ அதிகாரிகளும் தெரிவித்தனர்.

இதுகுறித்து அமெரிக்கப் படையினர் கூறுகையில்,

எதிரிகள் இரசாயன வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தினாலும் அதை முறியடிக்கும் பயிற்சியும் மேற்கொள்வோம் என்றனர். மேற்படி கூட்டுப்பயிற்சியைப் பார்வையிட ஊடகங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் அடுத்தமாதம் நடக்கவுள்ள நிலையில், இரு நாடுகளும் இராணுவப் பயிற்சியில் ஈடுபடுவது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. (வ)

## அந்தமான் தீவுப் பகுதியில் ஒதுங்கிய 40 திமிங்கிலங்கள்



போர்ட்பிளேர், ஒக்.27

வடக்கு அந்தமான் கடற்கரைப் பகுதியில் 40 ராட்சத திமிங்கிலங்கள் கூட்டமாக கரை ஒதுங்கின.

வடக்கு அந்தமான் தீவுப் பகுதியில் எலிசபெத் வளைகுடா அருகே, நான்கு நாள்களுக்கு முன் ராட்சத திமிங்கிலங்கள் கரை ஒதுங்கியதை மீனவர்கள் பார்த்தனர். மேற்படி தகவல் அறிந்ததும் அந்தப்பகுதிக்கு அந்தமான் வனத்துறை அதிகாரிகள் சென்று பார்வையிட்டனர். 40 திமிங்கிலங்கள் கரை ஒதுங்கிய நிலையில் கிடந்தன. அவற்றில் சில உயிருடன் இருந்தன.

இவை பைலட் வகை திமிங்கிலங்கள். ஒவ்வொன்றும் 6 மீற்றர் நீளமும், 3 டன் எடையும் இருக்கும். உயிருடன் காணப்பட்ட திமிங்கிலங்கள் மிகப் பெரியதாக இருப்பதால் அவற்றை மீண்டும் கடலுக்குள் அனுப்ப வாய்ப்பில்லை என்று வனத்துறை உயர் அதிகாரி அஜய் சக்சேனா தெரிவித்தார். (வ)

## ஐரோப்பாவுக்குச் சென்ற அகதிகள் படகு விபத்து 14 பேர் கடலில் மூழ்கிச் சாவு



ஐரோப்பாவுக்குள் சட்டவிரோதமாகக் குடியேறச் சென்ற மொராக்கோ நாட்டினர் 14 பேர் கடலில் மூழ்கி உயிரிழந்தனர்.

ஆபிரிக்க நாடுகளிலிருந்து மக்கள் சட்டவிரோதமாக ஐரோப்பிய நாடுகளுக்கு குடியேறி வருகின்றனர்.

வடக்கு ஆபிரிக்க நாடான மொராக்கோ நாட்டிலிருந்து 70 பேர் கொண்ட குழுவொன்று படகின் மூலம் மத்திய தரைக் கடல் வழியாக ஐரோப்பாவுக்குள் குடியேறச் சென்றுள்ளது.

மொராக்கோ கடல் எல்லையில் ஸ்பெயினுக்கு அருகே சென்றபோது, அவர்கள் சென்ற படகு விபத்துக்குள்ளானது. இதில் 14 பேர் தண்ணீருக்குள் மூழ்கி இறந்து விட்டனர்.

தகவல் அறிந்ததும் சம்பவ இடத்துக்குச் சென்ற ஸ்பெயின் கடற்படையினர் தத்தளித்துக் கொண்டிருந்த 17 பேரை உயிருடன் மீட்டுள்ளனர். எஞ்சியுள்ளவர்களை விமானப்படை மூலம் தேடும் பணி முடுக்கிவிடப்பட்டுள்ளது. இதனால் இறப்பு எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

## பிரான்ஸில் திருட்டு சம்பவங்கள் அதிகரிப்பு

பிரான்ஸில் திருட்டு சம்பவங்கள் அதிகரித்துள்ளதால் சுற்றுலா பயணிகள் அச்சமடைந்துள்ளனர்.

தங்கத்தின் விலை சர்வதேச சந்தையில் நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே செல்கிறது. இதன் காரணமாக உள்ளூர் சந்தையிலும் தங்க நகைகளின் விலை அதிகரித்து வருகிறது.

எனவே பல நகரங்களிலும் சங்கிலி பறிப்பு குற்றங்களும், பீரோவை உடைத்து தங்க நகைகளைக் கொள்ளையடிக்கும் சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன.

இது குறித்து பரிஸ் நகர பொலிஸ் அதிகாரி குறிப்பிடுகையில், கடந்த ஒன்பது மாதங்களில் சங்கிலி பறிப்பு குற்றத்துக்காக 270 பேர் கைது செய்யப்பட்டனர். ஜூன் மாதத்தில் மட்டும் தங்கச் சங்கிலி பறிப்பு மற்றும் திருட்டு தொடர்பாக 635 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டன – என்றார். தங்க சங்கிலி பறிப்பு சம்பவங்கள் பிரான்சில் அதிகரித்துள்ளமை சுற்றுலாப் பயணிகளைக் கவலையடையச் செய்துள்ளது.

## புதிய அரசியல் கட்சி அமைக்க டோக்கியோ ஆளுநர் ஏற்பாடு

ஜப்பானில் பொதுத்தேர்தல் நடைபெறுமென்று எதிர்பார்க்கப்படுகின்ற நிலையில், டோக்கியோ ஆளுநர் ஷின்தாரோ இஷிஹர, புதிய தேசிய அரசியல் கட்சியை உருவாக்குவதற்காக தனது பதவியை ராஜினாமாச் செய்கிறார்.

'டோக்கியோ ஆளுநர் பதவியை ராஜினாமாச் செய்யவுள்ளேன்' என்று அவர் ஊடகவியலாளர்கள் சந்திப்பில் தெரிவித்தார்.

80 வயதான ஷின்தாரோ இஷிஹர நான்கு தடவைகள் ஆளுநராகப் பதவி வகித்துள்ளார். நாவலாசிரியராக இருந்து அரசியலுக்கு வந்த அவர் கடந்த ஏப்ரல் மாதம் தனது நான்காவது தடவையான ஆளுநர் பதவியைப் பொறுப்பேற்றிருந்தார். சீனாவுக்கும் ஜப்பானுக்கும் இடையிலான பிரச்சினையின் மையமான சிறுதீவுக் கூட்டங்களை அரசு பணத்தைப் பயன்படுத்தி விலைக்கு வாங்கப்போவதாகக் கூறி இவ்வருட முற்பகுதியில் இவர் சர்ச்சை ஒன்றை தோற்றுவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.


**கோழிக்குஞ்சு விநியோகம்**

BAHIRA No-1
புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு.
விலை 65/=
★ றாஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
T.P - 0776090926
(24756) (45.6.7)

**காணி விற்பனைக்கு**

கோப்பாய் தெற்கு, பருத்தித்துறை வீதி, மாதா கோயிலுக்கு அருகில் பரப்பு 25 குளி 13 வெற்று குடியிருப்புக்காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் கொடுக்கப்படும்.
தொடர்பு:
077 9009 365
(24626)(45.6.7)

**31 ஆம் நாள் நினைவலைகள்**

எமது பாடசாலையில்
கடமையாற்றும்
கல்விசாரா ஊழியர்
ச. இராசேந்திரம்
அவர்களின் அன்புச் சகோதரி
அமரர்
சண்முகம் கனகாம்பிகை
அவர்கள்
கடந்த 28.09.2012 அன்று
இறைபதம் அடைந்துள்ளார்.
31 ஆம் நாளாகிய இன்று
எமது அஞ்சலியைத்
தெரிவித்துக்கொள்வதோடு,
அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும்
பிரார்த்திக்கின்றோம்.
ஆசிரியர் நலன்புரி சங்கம்
மு. பாலிநகர் ம.வி.
வவுனிக்குளம்.
(24224)(45.6.7)







50 வருடங்கள் மக்களிற்கு பரியசேவையினை இன்றுவரை வழங்கிக்கொண்டிருக்கும் அரச காப்புறுதி நிறுவனமான ஸ்ரீலங்கா இன்ஷுவரன்சின்

மாபெரும் வேலைவாய்ப்பு.....!

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, நெல்லியடி, சங்கானை, சாவகச்சேரி ஆகிய கிளைகளுக்கு குழுத்தலைவர்களுக்கான (TEAM EXECUTIVE) விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.


மேற்படி பதவிக்கான தகைமைகள்

- ✓ வயது எல்லை 20 வயதிற்கு மேல்
- ✓ காப்புறுதி துறையில் குறைந்தபட்சம் இரண்டு வருடம் அனுபவம்
- ✓ மிகச்சிறந்த சாதனைகள் ஏற்கனவே சாதித்திருப்பின் விசேட கவனம் செலுத்தப்படும்.
- ✓ குழுவைக் கட்டியெழுப்பி அதனை வழிநடத்தக்கூடிய சிறந்த தலைமைத்துவ ஆற்றல்
- ✓ குழுவில் அங்கத்துவம் வகிக்கும் அங்கத்தவர்களிற்கு பயிற்சி அளிக்கக்கூடிய ஆற்றல்.
- ✓ ஸ்ரீலங்கா இன்ஷுவரன்சின் வடபிராந்தியத்தில் பணியாற்றும் காப்புறுதி ஆலோசகர்களும் மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

நன்மைகள், பிறகொடுப்பனவுகள் தங்களின் தகுதிக்கேற்ப நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்

பதிவுத்தபாலில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்ப முடிவுத்திகதி :- 15.11.2012



விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய முகவரி:

வடபிராந்திய முகாமையாளர்,
ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸ்,
வடபிராந்திய அலுவலகம்,
ஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம்.
(24751)(6-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பும் அமைதியும் பெருகும் திருநாள்

இஸ்லாத்தின் தூண்கள் என்று வர்ணிக்கப்பட்டுள்ள கடமைகளுள் இறுதியானது ஹஜ் எனும் கடமையாகும். மக்காவிலிருந்து ஆதி இறை இல்லமாம் கஃபாவை நோக்கி மேற்கொள்ளப்படும் புனிதப் பயணமே ஹஜ். இந்தப் புனிதப் பயணத்தை வாழ்வில் ஒருமுறையாவது மேற்கொண்டிடுவது உடல் பலம், மனப்பலம், பொருள் பலம் இவற்றையுடைய முஸ்லிம்களின் கடமையாகும்.

ஹஜ் ஈமானின் வருடாந்திர மாநாடாகும். அங்கே முஸ்லிம்கள் உலகின் பல்வேறு பாகங்களிலிருந்தும் வந்து குழுமுகின்றனர். ஒருவரையொருவர் தெரிந்து கொள்கின்றார்கள்.

தங்களின் பொதுவான பிரச்சினையைச் சித்திரிக்கின்றார்கள். விவாதிக்கின்றார்கள். உலக முஸ்லிம்களின் நல்வாழ்வுக்குத் தேவையான திட்டங்களைத் தீட்டுகின்றார்கள். ஹஜ் மனித வரலாற்றில் எங்ஙனம் காணமுடியாத அளவுக்கு நடத்தப்படும் மிகப் பெரிய அமைதி மாநாடாகும்.

ஹஜ் கடமையின் போது அமைதியே மிகவும் முக்கியமானதாகும். இறைவனோடு அமைதிப்படுதல், தனது ஆன்மாவோடு அமைதிப்படுதல், சமுதாயத்தின் பிற உறுப்பினர்களோடு அமைதியாக இருத்தல், எல்லா உயிர்களுடனும் அமைதியாக இருத்தல் என்று ஹஜ் எனும் கடமை பொருள்படும். யாருடைய அமைதியை கலைப்பதும் ஹஜ் எனும் புனிதக் கடமையின் போது அனுமதிக்கப்படுவதில்லை.

இஸ்லாமெனும் இறைவனின் வழிகாட்டுதல் அகிலத்தில் வாழும் மக்கள் அனைவருக்காகவும் அருளப்பட்டதே! இதை வெளிப்படையாக எடுத்துக்காட்டும் கடமையே ஹஜ். மனிதர்கள் அனைவரும் சமமானவர்களே, அவர்களுக்குள் எந்த அடிப்படையிலேயேயும் ஏற்றத்தாழ்வுகள் இல்லை, என்பதை உலக சகோதரத்துவத்தின் விழுமிய எடுத்துக் காட்டே ஹஜ்.

பல்வேறு நிறத்தைக் கொண்ட மனிதர்கள், பல்வேறு மொழிகளைப் பேசும் மக்கள், பல்வேறு தொழில்களைச் செய்யும் மக்கள், பல்வேறு வகுப்பைச் சேர்ந்த மக்கள், உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் மக்கள், இவர்கள் அனைவரும் தங்களுக்குள் எந்த வேறுபாடுகளும் இல்லை என்பதை எடுத்துக் காட்டுகின்ற உலக மாநாடே ஹஜ்.



இந்த மக்கள் அனைவரும் அல்லாஹ்வின் கட்டளைக்குப் பணிந்து, ஒரே நோக்கத்தோடு, ஒரே இலட்சியத்தோடு, ஒரே முழக்கத்தோடு, ஒரே விதமான உடையோடு, ஒரே செயல்முறைகளைப் பின்பற்றி ஏக இறைவன் முன் நிற்கும் அற்புதச் செயலே ஹஜ். அவர்கள் அனைவரும் ஏக இறைவனைத் தவிர வேறு யாருக்கும் பணிந்திட மாட்டோம் என முழங்குகின்றனர். அங்கு அத்துமீறிய செயல்களுக்கு இடமில்லை.

அன்பு, பணிவு, அடக்கம், இறையச்சம் இவைகள் நிறைந்த ஒப்பற்ற மாநாடே ஹஜ்.

முஸ்லிம்கள், இறைவனுக்காக எந்தத் தியாகத்தையும் செய்யத் தயங்கிட மாட்டார்கள் என்ற உறுதியை வருடந்தோறும் புதுப்பித்து, புத்துயிர் அளித்திடும் மாநாடே ஹஜ். முஸ்லிம்கள் இறைபணியில் வரும் இழப்புகளைப் பொருட்படுத்தமாட்டார்கள் என்பதைப் பாரறிய பறையறிவித்து விடும் நாளே ஹஜ் நிறைவேறும் நாள்.

இந்தப் புனித கடமையை நிறைவேற்றிடும் முஸ்லிம்கள் இறைவனின் இறுதித்தூதராம் முஹம்மத் (ஸல்) அவர்கள் வாழ்ந்த ஆன்மிகச் சூழ்நிலையோடும், வரலாற்றுச் சூழ்நிலையோடும் தங்களைப் பழக்கப் படுத்திக் கொள்கின்றனர்.

இது அவர்கள் புத்துணர்வு பெற்றிடவும் தங்களது நம்பிக்கையைப் பலப்படுத்திக் கொள்ளவும் கிடைத்த அரிய வாய்ப்பேயாகும். இதிலிருந்து அவர்கள் தாங்கள் மேற்கொண்ட இறைவனின் திருப்பணிகளுக்குத் தேவையான ஊக்கத்தைப் பெறுகின்றார்கள்.

நபி இப்றாஹீம் இஸ்மாயீல் அன்று நிறைவேற்றி நிறைவடைந்த இறை சடங்குகளை நினைவு கூர்ந்து அதே சடங்குகளை நிறைவேற்றிக் களித்திடும் பெருவிழாவாக விளங்குகின்றது ஹஜ். இவர்கள் ஏக இறைவனின் ஆதி இறை இல்லத்திற்கு புனித பயணம் மேற்கொண்ட முதல் மனிதராவார். இறுதித் தீர்ப்பு நாளில் இறைவன் முன் இப்படித்தான் மனிதர்கள் அனைவரும் எந்தப் பாகுபாடுமின்றி ஏற்றத் தாழ்வுகளின்றி தங்களது தீர்ப்புகளுக்காகக் காத்திருப்பார்கள் என்பதை நினைவுறுத்தும் செயலாக விளங்குகிறது ஹஜ்.

# எங்கே போகிறது யாழ்ப்பாணம்?

இரா.துரைரட்ணம்

(நேற்றைய தொடர்ச்சி)






வன்னி, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களில் உள்ள தமிழர்கள் கடந்த பொதுத்தேர்தலில் தங்களை அழித்த சிங்களப் பேரினவாதக் கட்சியில் போட்டியிட்ட எந்த ஒரு தமிழரையும் தெரிவு செய்யவில்லை. ஆனால், தமிழ் உணர்வும் வீரமும் இருப்பதாகச் சொல்லிக் கொள்ளும் யாழ்ப்பாணம் சிங்களப் பேரினவாத கட்சியிலிருந்து மூன்று தமிழர்களைத் தெரிவு செய்து அனுப்பியிருக்கிறது. உள்ளூராட்சித் தேர்தலில் மூன்று பிரதேச சபைகளை சிங்களப் பேரினவாதக் கட்சியிடம் ஒப்படைத்திருந்தார்கள். இது யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு குறிப்பாக தீவுப்பகுதி மக்களுக்குப் பெருத்த அவமானமாகும்.

தமிழ் மக்களின் ஒப்பற்ற தலைவனாகக் கருதப்படும் பிரபாகரனுக்கு பெண்ணை கொடுத்த பெருமை எங்களுடையது என புங்குடுதீவைச் சேர்ந்த பலர் பேசியதைக் கேட்டிருக்கிறேன். முக்கியமாக வெளிநாடுகளில் உள்ளவர்கள் இதை அடிக்கடி சொல்வார்கள். விடுதலைப் போராட்டத்திற்கு பெரும்பங்களிப்பைச் செய்திருக்கிறோம் எனப் பெருமைப்பட்டு கொள்வார்கள். அதில் நியாயமும் இருக்கலாம். ஆனால், அதே பெண்ணையும் குடும்பத்தையும் அழித்த சிங்கள பேரினவாத அரசிடம் புங்குடுதீவு உட்பட தீவுப்பகுதி பிரதேச சபைகள் அனைத்தையும் அந்த மக்கள் ஒப்படைத்திருக்கிறார்களே?

இவைகளுக்கு மேலாக அண்மைக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் நடந்த அரசுக்கு ஆதரவாக நடந்த ஊர்வலம் ஒன்று யாழ்ப்பாண மக்கள் எங்கே போய் கொண்டிருக்கிறார்கள் என்ற ஆதங்கத்தை எழுப்பியிருக்கிறது.

தாம் இழந்து விட்ட ஆட்சி, அரசியல், வாழ்வியல் உரிமைகளை மீட்டு சுயகௌரவத்துடன் வாழ வேண்டும் எனப் போராட்டத்தை ஆரம்பித்து இழப்புகளையும் சந்தித்த யாழ்ப்பாண மக்கள் தமிழ் மக்களின் உரிமைகளை தட்டிப்பறித்து அடிமைகளாக வைத்திருக்க நினைக்கும் பேரினவாத சக்திகளின் பின்னால் எப்படி செல்ல முடிகிறது?

திவிநெகும என்ற சட்ட மூலம் மாகாணங்களுக்கு இருக்கும் அதிகாரங்களைப் பறித்து மத்திய அரசிடம் ஒப்படைக்கும் சட்ட மூலமாகும்.

சமுர்த்தி அதிகாரிகளுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் நன்மை செய்ய விரும்பினால் சமுர்த்தி அதிகாரசபையை திணைக்களமாக மாற்றியிருக்கலாம். சமுர்த்தி அதிகாரசபையை திணைக்களமாக மாற்றுவது என்ற போர்வையில் மாகாணசபைகளுக்கு இருக்கும் அதிகாரங்களை பறித்தெடுப்பதற்கு மஹிந்த அரசு தீட்டிய சதித்திட்டம் என்பதையும், அதிகாரப் பரவலாக்கலை இல்லாது ஒழிப்பது வடக்கு, கிழக்கில்வாழும் இனங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதையும் கல்வி கற்ற சமூகம் எனக் கருதப்படும் யாழ். சமூகத்தில் உள்ள சமுர்த்தி அதிகாரிகள் ஏன் உணர்ந்து கொள்ளவில்லை.

தமிழ் மக்களின் காணிகளை இராணுவம் ஆக்கிரமிப்பதற்கு எதிராகவும், காணி அபகரிப்புக்கு எதிராக செயற்பட்ட நல்லூர் பிரதேசசபைத் தலைவர் தாக்கப்பட்டதைக் கண்டித்தும் யாழ். நகரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்பாடு செய்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த அதேவேளையில் அதற்கு எதிராக ஈ.பி.டி.பியினாலும், பஸில் ராஜபக்ஷவின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினாலும், சமுர்த்தி அதிகாரிகள் உத்தியோகத்தர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டம் யாழ். நகரில் நடைபெற்றிருக்கிறது.

தமிழ் மக்களின் உரிமையை மீட்பதற்காக தமிழ் மக்களின் காணிகளை இராணுவம் அபகரிப்பதற்கு எதிராகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் எண்ணக் கூடிய சொற்ப தொகையினரே கலந்துகொண்டிருந்த நிலையில் சிங்களப் பேரினவாத அரசிற்கு ஆதரவாக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் பெருந்தொகையானவர்கள் கலந்து கொண்டனர்.

அங்கு சமுகமளித்த பொதுமக்கள் அனைவரும் சில சலுகைகளைக் காட்டி அழைத்து வரப்பட்டிருந்தாலும், அவர்களை அழைத்து வருவதற்காகச் செயற்பட்ட அதிகாரிகள் ஊழியர்கள் அனைவரும் யாழ். மண்ணில் பிறந்த தமிழர்கள்தான்.

மாகாணசபையோ அல்லது 13ஆவது அரசமைப்பின் ஊடாக வழங்கப்பட்ட அதிகாரப் பரவலாக்கலோ தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு முழுமையான தீர்வு அல்ல. தமிழ் மக்களின் இழப்புக்கு அது ஈடாகாது. ஆனாலும் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக 13ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட மாகாணசபை தமிழ் மக்களின் இரத்தம் சிந்திய போராட்டத்தினால் கிடைத்த ஒன்றாகும்.

தமிழ் மக்கள் இரத்தம் சிந்தி பெற்ற அதிகாரப் பரவலாக்கலை பறித்தெடுக்கும் சட்டமான திவிநெகுமவை நடைமுறைப்படுத்துமாறு யாழ்ப்பாண மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்துகிறார்கள் என்றால் இவர்களுக்காகவா தங்கள் உயிர்களை இளைய தலைமுறையினர் தியாகம் செய்தனர்?

சாதாரண மக்கள் மட்டுமன்றி, யாழ்ப்பாணத்தில் உள்ள அரச அதிகாரிகள், கல்விமான்கள் என தங்களைச் சொல்லிக்கொள்பவர்கள், கூட இன்று வெறும் சலுகைகளுக்காக சுயநலப்போக்கில் செயற்படுவதையே அவதானிக்க முடிக்கிறது.

இன்னுமொரு கசப்பான உண்மை. ஆயுதப்போராட்டம் முடிந்த பின்னர் இராணுவத்தினரிடம் சரணடைந்த போராளிகள் வன்னி, திருகோணமலை மட்டக்களப்பு எனப் பரந்து பட்டு வாழ்கிறார்கள். அவர்கள் அன்றாட உணவுக்கே வழியின்றி மிகுந்த கஷ்டத்தோடுதான் வாழ்கிறார்கள். விடுதலை பெற்று வந்த பின்னர் கஷ்டங்களை அனுபவித்து கொண்டு தங்கள் குடும்பத்தோடு வாழ்கிறார்கள். எதிரியோடு போய் சேர்ந்து விடவில்லை.

ஆனால்வன்னியில்விடுதலைப் போராட்டத்தின் முக்கிய தூண்கள் எனத் தங்களைச் சொல்லிக் கொண்டிருந்தவர்கள் தற்போது ஈ.பி.டி.பியின் யாழ். ஸ்ரீதர் தியேட்டர்தான் தஞ்சம் என்று கிடப்பது தான் மிகப்பெரிய அவமானமும் வேதனையுமான விடயமாகும்.


யாழ்ப்பாண மக்கள் சுயநலம் மிக்கவர்கள் என்பதை அந்த மண்ணில் பிறந்து வளர்ந்தவன் என்ற முறையில் நான் அறிவேன். ஆனால் அந்த சுயநலங்களுக்காக பொது எதிரியின் காலடியில் விழுந்து கிடக்கும் அளவிற்கு தன்மானம் இல்லாத அளவுக்கு யாழ்ப்பாணச் சமூகம் சென்று கொண்டிருக்கிறதே என்பது தான் ஒட்டு மொத்த தமிழ் சமூகத்துக்கும் வேதனை தரும் விடயமாகும்.

ஏனெனில் பேராசிரியர் சிவத்தம்பி குறிப்பிட்டது போல யாழ்ப்பாண சமூகமே முழுத் தமிழ் மக்களையும் பிரதிநிதித்துவம் செய்வதான ஒரு தோற்றப்பாட்டினை நடைமுறையில் கொண்டிருக்கிறது. யாழ்ப்பாண சமூகம் சிங்கள அரசை ஏற்றுக் கொண்டு விட்டது என்றால் அதிகாரப்பரவலாக்கல் தேவை இல்லை, சிங்கள அரசின் கீழ் வாழ முடியும் என எண்ணினால் அது ஒட்டுமொத்த தமிழ் சமூகத்திற்கும் ஒரு சாபக்கேடாகும். ஏனெனில் ஒட்டுமொத்த ஈழத் தமிழினத்தின் குறியீடாக யாழ்ப்பாணச் சமூகத்தைத் தான் சர்வதேசம் பார்க்கிறது.

அந்தச் சாபக்கேட்டை நோக்கியே யாழ்ப்பாணம் இன்று சென்று கொண்டிருக்கிறது. பரிதாபத்துக்குரியவர்கள் வன்னியிலும் கிழக்கிலும் உள்ள தமிழ் மக்கள்தான். யாழ். மக்கள் ஆரம்பித்த ஆயுதப் போராட்டத்தை அவர்கள் இடைநடுவில் கைவிட்டுச் சென்ற போது அதை நடத்தியவர்கள், இழப்புகளைச் சந்தித்தவர்கள் பெரும்பாலும் வன்னியிலும் கிழக்கிலும் உள்ள மக்கள்தான்.

வன்னி மற்றும் கிழக்கு மக்கள் தங்கள் வாழ்வை, உறவுகள் என அத்தனையையும் இழந்த போதிலும் பொது எதிரியின் காலடியில் வீழ்ந்து விடாது இன்றும் தன்மானத்துடன் வாழ்ந்து வருகிறார்கள். ஆனால் பரிதாபம் என்னவெனில் அவர்களை ஈழத்தமிழர்களின் குறியீடாக இந்த உலகம் பார்ப்பதில்லை. யாழ்ப்பாண சமூகத்தைத்தான் ஒட்டு மொத்த ஈழத்தமிழினத்தின் குறியீடாகப் பார்க்கிறார்கள். நான் நினைக்கிறேன் தமிழ் இனத்தின் சாபக் கேடும் அதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Our Dear Founder.
Pierre Bienvenue
Noailles

# திருக்குடும்ப சபை யாழ்

# 150 ஆவது ஆண்டு நிறைவின் “

## “இறைவனுக்கு ந

## Message from Apostolic Nuncio



I am happy to join the prayer of praise and thanks giving which the Holy Family Sisters, Jaffna Province, are elevating to God, our loving and merciful Father, for all the heavenly blessings they have received during the One Hundred and Fifty Years of their presence in Sri Lanka. Our thoughts go to the first six Holy Family Sisters who arrived in Jaffna on 2nd November 1862, the very first women religious to come to the Island. Following the example of their Founder Fr. Pierre Bienvenue Noailles, they dedicated themselves to serve Christ, Our Lord, in all their brothers and sisters without distinction of ethnicity, language, social status or religion.

We ask the Lord to reward the dedicated work of all the Sisters of the Holy Family who have served in Sri Lanka during the past One Hundred and Fifty years and to continue to bless the Congrega-tion with new vocations. I gladly bestow on all the Sisters of the Holy Family, through the intercession of Our Lady and of St. Joseph, the Apostolic Blessing in the name of the Holy Father Pope Benedict XVI, as a pledge of joy and peace in our Lord Jesus Christ.

**Archbishop Joseph Spiteri**

## Message from Archbishop of Colombo



It is my great pleasure to pen a few words of felicitation on the occasion of the Holy Family Sisters of Jaffna Province completing 150 years of their presence and service in Sri Lanka. It is very significant that you will have your triple golden Jubilee celebration at St. Mary's Cathedral, Jaffna, the same venue where the six Sisters were received by the people of Jaffna in 1862. I recall with a sense of nostalgia how the Holy Family sisters starting from Jaffna spread out to the Western, North Western and the other Provinces of Sri Lanka serving specially the rural folk. God will bless you more and more for preserving the simplicity and the commitment you have always had to serve the poor and the simple people of good will. May God bless and reward you.

**Malcolm Cardinal Ranjith**



## Message from Colombo Provincial



It gives me immense joy to write a message for the souvenir of the 150th Anniversary of the arrival of the Holy Family missionaries to Sri Lanka. This memorable day evokes in us feelings of great joy and gratitude to our pioneer missiona ries who courage and missionary zeal led them to Sri Lanka in 1862. The greatest gift our founder received was to bear witness to the 'Church as Family. Therefore it is fitting as members of the PBN Family to revitalize our Charism according to the changing times. We lovingly remember all the members of our Family, who kept the flame of the Holy Family burning alive in this land, discerning the right directions in the changing expanding times of our past. Now as we step into the future while celebrating the land marks of our history, let us open our eyes wide, to the new world view to be led by compassionate love, into new spiritual depths. Let us read the signs of the present time, and make a unified effort to heal our hurting land and sustain the wellbeing of the entire universe.

**- Sr. Francisca Perera**

## யாழ் ஆயரின் செய்தி



"நற்செய்தியை அறிவிக்கவும், நல்வாழ்வைப் பலப்படுத்தவும், நலம்தரும் செய்தியை உரைக்கவும், விடுதலையை பறை சாற்றவும் வருவோனின் பாதங்கள் மலைமேல் எத்துணை அழகாய் இருக்கின்றன" (எசா. 52: 7).

ஒறாசியோ பெற்றக்கினி ஆண்டகை ஆங்கிலக் கல்வியை ஆரம்பிக்கவேண்டுமென ஆசித்து, ஆங்கில செமினறியை பெண்களுக்கும் ஆண்களுக்குமென தனித்தனியாக ஆரம்பித் தார். அவரைத் தொடர்ந்து அமலமரி தியாகிகள் சபையைச் சேர்ந்த ஆயர் சமேரியா, ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவத்தினை உணர்ந்து, பிரான்சி லிருந்த திருக்குடும்ப சபை முதல்வரின் அனுமதியுடன், ஆறு சகோதரிகளை இலங்கைக்கு அழைத்துவந்தார். இவர்கள் ஆங்கிலக் கல்வியை யாழ். மண் ணில் தொடர்ந்தார்கள். கல்வி நிறுவனங்கள், விடுதிச் சாலைகள், ஏழைப் பிள்ளைகளின் பராமரிப்பு நிலையங்கள் என்பவற்றின் வழியாக பெண் களின் கல்வித் தேவையைப் பூர்த்திசெய்தனர். ஐரோப்பிய சகோதரிகள் சுதேச அழைத்தல்களையும் ஊக்குவித்து, தங்கள் கல்விப் பணிமூலம் நல்ல விழுமியங்களிலும், தலைமைத்துவத்திலும், விசுவாசத்திலும் இவர்களை உருவாக்கி இருக்கின்றார்கள். திருக்குடும்பக் கன்னியர்கள் தனியே ஆங் கிலக் கல்வியுடன் நின்றுவிடாது, சுதேசக் கல்வியை வளப்படுத்தும் நோக் குடன், ஆயர் சமேரியா 1865 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் திகதி சென். பீற்றர்ஸ் சகோதரிகளை உருவாக்கினார். பின் இவர்கள் 1908ஆம் ஆண்டு திருக்குடும்பச் சபையினருடன் இணைக்கப்பட்டனர். அத்துடன் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையையும் நிறுவினார். தற்போது இலங்கையிலுள்ள 12 மறைமாவட்டங்களிலும் திருக்குடும்ப சகோதரிகள் பணிபுரிகின்றார்கள். வேதபோதகப் பணிகளுக்காக பல்வேறு நாடுகளுக்கும் செல்லுகின்றார்கள். விசுவாச ஒளியை இம்மண்ணில் பரப்பியதற்காகவும், பெண்கள் கல்வியை வளப்படுத்தியதற்காகவும், எம் மறைமாவட்டங்களிலும், நாட்டிலும் செய்த நன்மைகளுக்காகவும் நாம் அவர்களோடு இணைந்து மகிழ்கின்றோம்.

**- ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம்.**

## நல்லை ஆதீன குருமுதல்வரின் அருளாசிச் செய்தி



அன்புள்ளவர்களுக்கு, யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர் சபை தனது 150ஆவது ஆண்டை அடைந்திருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின் றோம். கல்வி, ஒழுக்கம், பண்பாடு, தெளிந்த சிந்தனை, நிறைவான சிந்தனை, துறவற வாழ்கையில் நின்று சமுதாயப் பணியை நிறைவாகச் செய்து, மகிழ்ச்சியடைகின்ற சகோதரி களை உருவாக்குகின்ற நிறுவனம் 150 ஆண்டுகள் நிறை வாகப் பணியாற்றியிருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது. இப்பணியைத் தொடர்வதற்கு இறைவன் ஆசீர்வதிப்பாராக. இப்புனிதமான பணியில் அர்ப்பணம் செய்து சேவையாற்றிய அனைத்து அன்புள் ளங்களையும் இறைவன் ஆசீர்வதிப்பாராக.

*"என்றும் வேண்டும் இன்ப அன்பு".*

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்.**

## Message from Bishop of Kandy

It is with great joy and gratitude to God Almighty that I send this message to the souvenir being published to mark the 150th Annive -rsary of the arrival of the Sisters of the Holy Family of Bordeaux to our country. We, in the diocese of Kandy, have been blessed by the presence and ministry of the Holy Family sisters of the Jaffna Province for the past fifty years. It is significant therefore, that in this year, we are also celebrating the Golden Jubilee of the Convent in Talawakelle, which is the first found ation in our diocese.



We are grateful the Lord and His servants, the Sisters, for their dedicated missionary labours in St. Patrick's School and the Parish of Talawakelle, and their loving service to the faithful in the parishes of Mattakelle and Ragala. The Bishop, Clergy, Religious and faithful of our diocese join Sr. Provincial and the Sisters of the Jaffna Province on this grace-filled occasion to thank and praise God, Our Father and His Blessed Son, Jesus, Our Saviour, for all the blessings they have received and through their life and ministry numerous others over the past 150 years.

**- Bishop Vianney Fernando**

## மன்னார் ஆயரின் செய்தி



இன்று திருக்குடும்பக் கன்னியரின் முதல் பெண் துறவிகள் யாழ். மண்ணில் காலடி பதித்த 150 ஆண்டின் நிறைவை நினைவுகூர்ந்து, தங்களை அதிசயமாக வழிநடத்திய இறை பராமரிப்புக்கு நன்றிப் பண் பாடுகின்றனர். இவர்களுடைய வருகையும் ஆற்றிய பணிகளும் இலங்கைத் திருச்சபையின் வரலாற்றில் சிறப்பாக வடபிராந்தியத்தில் பின்னிப் பிணைந்திருக்கின்றன. வடபகுதியில் இவர்கள் இளம்பெண்களின் கல்விப் பொறுப்பை ஏற்று இறைவன் மாத்திரமே என்ற ஆன்மீக வாஞ்சையுடனும், பற்றற்ற மனப்போக்குடனும் தாராள மனத்துடனும், விதவைகளை. அநாதைகளைப் பராமரித்தனர். மன்னாரின் பங்குத்தந்தை, அருட்திரு குக்ரின் ஆயர் பொன்ஜீனிடம் கேட்டதற்கிணங்க, 1894ஆம் ஆண்டு, அருட்சகோதரி பெனடிக்ராவின் தலைமையில் ஒரு குழு மன்னாருக்குச் சென்று நல்லாயன் ஆரம்பப் பாடசாலையில் தம் கல்விப் பணியைத் தொடங்கினர்.

மன்னார் மறைமாவட்டத்தில் விசுவாசம், கல்வி, தலைமைத்துவம் தளைத்தோங்கி வளர்ந்து நிற்பதற்கு அடிநாதமாக இருந்தவைகள் கத்தோலிக்க நிறுவனங்கள், மிஷனறிமார்கள், ஆசாரத் துக்குரிய யோசப்வாஸ் அடிகள். வேதசாட்சிகளின் தூய இரத்தத்தால் தோய்க்கப்பட்ட மன்னார் மறைமாவட் டம் இன்று பல குருத்துவ, இறை அழைத்தலை வளர்க்கும் தொட்டிலாக அமைந்திருக்கின்றது. மன்னார் மறைமாவட்ட ஆயர், குருக்கள், துறவிகள், இறைமக்கள் சார்பில் திருக்குடும்ப சகோதரிகளுக்கு எம் நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவிக்கின்றோம். முன்னென் றும் இல்லாதவாறு இன்று இவர்களின் அருங்கொடையான ஐக்கியத்தை வாழ்ந்து, அன்பான குடும்பங்களை எம்நாட்டில் கட்டியெழுப்புவது அவசிய தேவையாக உணரப்படுகின்றது. இச்சிறப்பான நாளில் ஒவ்வொரு திருக்குடும்ப சகோதரிகளையும் இறைவன் தன் விசேஷ ஆசியால் நிரப்புவாராக.

**ஆயர் இராயப்பு யோசப்**

## திருகோணமலை ஆயரின் செய்தி



ஆசாரத்துக்குரிய பிதா பீற்றர் பியன்வெனு நோஆய் நிறுவிய திருக்குடும்ப சபை 1862இல் அமலமரி தியாகிகளுடன் இலங்கைக்கு வந்தமைக்கு நாம் நன்றியாக இருக் கின்றோம். தூர தேசமாகிய இலங்கைக்கு இவர்கள் அனுப்பப்பட்டது இறை பராமரிப்பின் செயலே. செபத்திலும் தியானத்திலும் தங்களை ஆயத்தம்செய்து வேகரமான ஆன்மீக வாஞ்சையுடன் தங்களைக் காத்திருக்கும் புதிய முகங்களான விதவைகள், தாய்மார்கள், இளம் பெண்களைச் சந்திக்க ஆவலாய் இருந்தனர். 150 ஆண்டுகளுக்கு முன்னரே புதிய வேதபோதக உந்து தலானது மேய்ப்புப் பணி சார்ந்த சமூகப் பார்வையைக் கொண்டிருந்ததுடன், வருகை தந்த மிஷனறி மார்கள் ஆசியாக் கண்டத்தில் வாழும் மக்கள் மட்டில் ஆன்மீக வாஞ்சையும் அன்பும் கொண்டு அழைத்தல்களை ஊக்குவித்தார்கள். வேதபோதகப் பணிக்கென பிரான் சிலுள்ள திருப்பாலத்துவ சபை நிதியுதவி செய்தது இங்கு குறிப்பிடத்தக்கது. குழந்தைப் பருவத்தில் எனது சகோதரியுடன் திருக்குடும்ப கன்னியர் நடத்தும் ஆரம்பப் பாடசாலைக்கு கல்வி கற்க காலடி எடுத்து வைத்தபோது இக்கன்னியர்கள் காட்டிய அன்பு, கரிசனை என்னைக் கவர்ந்தது. அவர்கள் மட்டில் ஒரு நம்பிக்கையையும் ஊட்டியது. திருக்குடும்பக் கன் னியர் மட பாடசாலையே எனது ஆரம்பக் கல்வியின் தொட்டில் என்பதையிட்டு நான் பெருமைப்படு கின்றேன்.

*ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக! உங்கள்* [illegible]

[illegible]

## திருச்சிலுவை கன்னியர் மாகாணத் தலைவியின் செய்தி



திருக்குடும்பச் சகோதரிகளின் முப்பொன் விழாவிற்கு எனது நல் வாழ்த்துச் செய்தியை அனுப்புவதில் நான் பெருமகிழ்ச்சியடை கின்றேன். இச்சகோதரிகள் முறைசார், முறைசாரா கல்வி வழியாக தம் தனிப்பட்ட அன்பையும் கரிசனையையும் பகிர்ந்துகொண் [illegible] அதை அனுபவித்த அனைவரும் அப்பசுமையான எண்ணங்களை தம் உள்ளத்தில் வைத்து புரட்டிப்பார்த்து மகிழ்கின்றனர். நான் வேறோர் துறவற சபையிலிருந்து பணியாற்ற, இச்சகோதரிகளின் முன்மாதிரிகையான வாழ்க்கையே எனக்கு பெரிதும் உதவியது. சபையின் மூத்த தலைமுறையினரின் பாரம்பரியங்களையும் பண்பாட்டுப் பரிமாற்றங்களையும் வாழ்க்கையில் அனுபவிக்கும் நாம் இவைகளுக்காக இறைவனுக்கு என்றும் நன்றி கூறுவோம்.

நீண்ட இப்பயணத்திலே தம்மிடமுள்ள சிறந்தவைகளைப் பகிர்ந்து நல்ல குடும்பங்களையும் சமுதாயங்களையும் உருவாக்க அயராது உழைக்கும் திருக் குடும்ப சகோதரிகளின் வாழ்வுக்கும் பணிக்கும் நன்றி கூறுவோம். இச்சகோ தரிகள் அனைவருக்கும் எமது செபமும் பாராட்டுகளும் உரித்தாகுக. உங்கள் அருங்கொடையை நிறைவாகவும் தைரியமாகவும் வாழ வாழ்த்துகின்றேன்.

**- அருட்சகோதரி விக்ர[illegible] ஜேம்ஸ்**

## திருக்குடும்பச் சகோதரிகள் ஆற்றிவரும் அப்போஸ்தலிக்க பணிகள்

கல்விப்பணி, பங்குத்தளப்பணிகள், மறைக்கல்விப் பணி, இளைஞ[illegible] தலைமைத்துவப்பயிற்சி, முன்பள்ளி, சிறுவர் இல்லங்கள், விடுதிக்கழகம் தொழுநோயாளர் பராமரிப்பு, இளம்விதவைகளின் வாழ்வாதாரம் உளவளத்துணை, வைத்தியசாலைச் சந்திப்பு, அரச சார்பற்ற நிறுவனங் களுடன் பணி, ஜெய்ப்பூர், மாற்றாற்றல்பணி. கிராமிய சுகநலப்பணி பெண்கள் முன்னேற்றப்பணி, அகதிமுகாங்கள், குடும்ப நலப்பணிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# .மண்ணில் தடம் பதித்த
# மூப் பொன் விழா”
# மாத்திரமே மகிமை”




1862 - 2012

## Message from Superior General



It is with joy and deep gratitude that I write these few words for the souvenir booklet celebrating 150 years of Holy Family presence in Sri Lanka. As we celebrate this jubilee we do so with appreciation for the great and diverse contribution made by so many during these years. These first missionaries came with a happy and generous spirit, open to responding to the needs of the people at that time. They were filled with the spirit of our Founder who was inspired to found a Family, open to all vocations, called to build a 'new society' where all are recognised as equals, children of God and brothers and sisters of one another. He described his vision in the form of a dream. He said: "In my dream the Holy Family appeared to me a gigantic tree. On it were flowers and fruits of all seasons, birds of all colours from all countries. Each bird had its own special song but at all times they formed on single voice in perfect harmony they seemed to sing: **Glory to God alone"**.

A journey back to our origins and forward to today helps us to be more aware of where we came from and how we need to go forward in fidelity our Charism and the need to responds to the new calls of today. May all who are part of the celebration of this jubilee be inspired to promote a just society where unity in diversity is valued and where equality and the dignity of every person is respected.

**- Sr. Margaret Muldoon**

## மட்டக்களப்பு ஆயரின் செய்தி



யாழ். மாகாண திருக்குடும்ப கன்னியரின் 150ஆவது ஆண்டின் நிறைவில் இப்பாராட்டுச்செய்தியை அனுப்புவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இலங்கைத் திருச்சபை வரலாற்றில் இச்சகோதரிகளின் பங்கு உயிரூட்டமுள்ளதாகவும் சிறப்பாகவும் அமைந்துள்ளது. கடந்து வந்த 150 ஆண்டுகளில் இவர்களின் வளர்ச்சியை நோக்கும்போது இயேசு கூறிய உவமையின் கருத்து நிறைவடைகின்றது. பீற்றர் பியன்வெனு நோஆய் என்பவரால் விதைக்கப்பட்ட இச்சிறிய விதை மெதுவாகவும், நிதானமாகவும், அதிசய மாகவும் வளர்ச்சியடைந்திருப்பதைக் காண்கின்றோம். இக்கன்னியர்களின் வளர்ச்சியின் இரகசியம் இயேசு மரி சூசையில் இவர்கள் கொண்ட ஆழமான பக்தியும் அர்ப்பணமுமே யாகும். ஆரம்ப காலங்களில் யாழ். மண்ணில் தம் கால்களை ஆழப்பதித்த ஐரோப்பிய சகோதரிகளுக்கும் உங்கள் அனைவருக்கும் சிறப்பாக மாகாணத் தலைவிக்கும் அவருடைய ஆலோசகர்களுக்கும் எனது பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவிக்கின்றேன். இலங் கையிலும், குறிப்பாக எனது புதிய மறைமாவட்டத்திலும் அவர்கள் கையேற்கும் எல் லாப் புது முயற்சிகளுக்கும் எனது முழு ஒத்துழைப்பையும் அளிக்கின்றேன். திருக்குடும்பம் உங் களைத் தமது பாதுகாப்பில் வைத்திருந்து நவீன யுகத்தின் புதிய சவால்களை நீங்கள் எதிர் கொண்டு இயேசுக்கிறிஸ்துவின் சாந்த குணத்தின் நறுமணமாகத் திகழ அருள்புரிவார்களாக.

-ஆயர் யோசப் பொன்னையா.

## திருக்குடும்ப சபை சகோதரிகள் உலக நாடுகளில்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. பிரான்ஸ் | - | 1820 | 13. போலாந்து | - | 1934 |
| ஸ்பெயின் | - | 1843 | 14. சயீர் | - | 1948 |
| 3. பெல்ஜியம் | - | 1854 | 15. கமறூன் | - | 1949 |
| 4. இலங்கை | - | 1862 | 16. பரகுவே | - | 1965 |
| 5. தென் ஆபிரிக்கா | - | 1864 | 17. சாட் | - | 1965 |
| 6. லெசெத்தோ | - | 1865 | 18. ஆர்ஜென்ரீனா | - | 1971 |
| 7. இங்கிலாந்து | - | 1868 | 19. பாகிஸ்தான் | - | 1975 |
| 8. அயர்லாந்து | - | 1868 | 20. பெரு | - | 1977 |
| 9. ஸ்கொட்லாந்து | - | 1868 | 21. இந்தியா | - | 1978 |
| 10. இத்தாலி | - | 1870 | 22. பிலிப்பைன்ஸ் | - | 1985 |
| 11. கனடா | - | 1901 | 23. பொட்ஸ்வானா | - | 2003 |
| 12. பிறேசில் | - | 1908 | 24. உகண்டா | - | 2003 |
| | | | 25. றுவென்டா | - | 2003 |

## திருக்குடும்பச் சபையின் நோக்கம்

~ எல்லா சூழல்களிலும் விசுவாசத்தைப் பரப்பி உறுதிப்படுத்துவது.

~ ஒரே உள்ளமும், ஒரே ஆன்மாவும் கொண்டுவிளங்கிய ஆதிக்கிறிஸ்தவர்களின் சாட்சியத்தைப் புதுப்பிப்பது.

| | | |
|---|---|---|
| சபையின் ஆன்மீகம் | - | இறைவனுக்கு மாத்திரமே மகிமை |
| சபையின் மாதிரிகை | - | திருக்குடும்பம் ஆதிக்கிறிஸ்தவர்கள் |
| சபையின் அருங்கொடை | - | ஐக்கியத்தை உருவாக்கல் |

### நல்ல பிதாவின் பொன்மொழிகள்

★ நீங்கள் இவ்வுலக பற்றுக்கள் அனைத்திலும் இருந்து விடுபடுவதன் மூலம் ஏழ்மையைத் தழுவ வேண்டும். உங்கள் ஏழ்மையின் தரத்திற்கேற்ப அவர் உங்களை ஆசீர்வதிப்பார்.

★ அன்பான பிள்ளைகளே! அடிக்கடி நசரேத்துக்குச் செல்லுங்கள். எப்பொழுதும் இயேசு மரி, சூசை உங்கள் மத்தியில் இருக்கிறார்களென நினைத்துக்கொள்ளுங்கள்.

★ திருக்குடும்ப உறுப்பினர்கள் தங்கள் செயல்கள் அனைத்தையும் கருணை, பரிவு என்னும் ஆடை [illegible] வேண்டும்.

## திருக்குடும்ப யாழ்.மாகாணத் தலைவியின் செய்தி



இந்த ஆண்டு அருளின் ஆண்டு. எம் நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள நண்பர்கள், குடும்பங்கள், நலன் விரும்பிகள் எம்மிடம் நன்மை பெறுபவர்களுடன் இணைந்து நாம் இந்த அருளின் ஆண்டை மகிழ்வாகக் கொண்டாடுகின்றோம்.

1862 இல் நமது நாட்டில் காலடி எடுத்து வைத்த ஐரோப்பிய திருக்குடும்பக் கன்னியர்கள் பேரார்வமும், வாய்மையும், ஆன்மவாஞ்சையும், பரிவிரக்கமும் கொண்டவர்களாக நாம் பின்பற்றவேண்டிய ஒரு வாழ்க்கை முறையை நமக்கு விட்டுச் சென்றுள்ளனர். எமது கடந்த காலத்தை பெறுமதியுள்ளதாக உள்வாங்கி, எல்லைகளைக் கடந்து செயற்பட்டு எமது எதிர் காலத்தை நோக்கிப் பயணிக்கின்றோம். எமது சபையில் உள்ள ஐந்து அழைத்தல்கள் அப்போஸ்தலிக்க துறவிகள், தியான யோக சகோதரிகள், திருமட சார்பற்ற அங்கத்தவர், துணைக் குருக்கள், பொது நிலையினர். வாழ்வளிக்கும் புதிய கருவூலங்களை ஏற்று, அவை எமக்கு சவால் விடுக்கவும், கேள்வி எழுப்பவும் விட்டு விடுகின்றோம். பூமித் தாயுடனும், சூழமைவுடனும் நாமும் ஒரு பங்குதாரர்கள் என்பதை உணர்கின்றோம். மேற்கூறப்பட்டவைகள் மட்டில் எமக்கோர் பணி உண்டு என்பதை உணர்ந்து, வாழ்வை வளப்படுத்தும் வழிகளில் காலத்திற்கேற்ற சவால்களை எதிர்கொண்டு செயற்படும் தகைமையுடையவர்கள் ஆகின்றோம். எமது அருங்கொடையை பலவிதமான குழுக்களுடனும் மாறுபட்ட கலாசாரங்களுடனும் பகிரவும் புதிய முன்னெடுப்புகளை அரவணைக்கவும் துணிகின்றோம். தொடர்ச்சியான போரின் தாக்கங்களையும் அதன் வடுக்களையும் எம்மில் தாங்கி, பாதிக்கப்பட்டவர்களுக்கும் இடம் பெயர்ந்தவர்களுக்கும் ஆற்றுப்படுத்தல் செய்கின்றோம்.

இந்த நீண்ட ஆண்டுகளிலே இறைவன் நமக்களித்த அருள் வளங்கள், ஆசீர்வாதங்களுக்கு நன்றி கூறுகின்றோம். "இறைவன் படைத்த நாள் இதுவே: அகமகிழ்வோம், அக்களிப்போம்". 'அறுவடையோ மிகுதி, வேலையாள்களோ குறைவு' என்ற ஆண்டவரின் வார்த்தையை உணர்ந்து, இளந்தலைமுறையினர் தம்மை இறை சேவைக்கு அர்ப்பணிப்பார்கள் என்பது எமது நம்பிக்கையும் செபமும் ஆகும்.

- அருட்சகோதரி. போலின்ட் மத்தியாஸ்.


## செபமாலைத்தாசர் கன்னியர் சபைத் தலைவி



இலங்கைக்குத் திருக்குடும்பக் கன்னியர்கள் வருகைதந்த 150 ஆண்டின் நிறைவு நாளுக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். எமது சபை நிறுவனர் பி. ஏ. தோமஸ். அமதி, செபமாலைத் தாசர் சபையை நிறுவ பல தடவைகள் முயற்சித்தபோது, பல தடைகளைத் தாண்டியே ஈற்றில் எமது சபையை நிறுவினார். அக்கால மறைமாவட்ட ஆயீராக இருந்த, கியோமார் ஆண்டகையுடன் ஆலோசித்து, திருக்குடும்ப சபைக் கன்னியர்களின் உதவியை அவர் நாடினார். 1948ஆம் ஆண்டு திருக்குடும்பச் சபையைச் சேர்ந்த அருட்சகோதரி ஜான் மாறி செபமாலைத் தாசர் கன்னியரின் உருவாக்கத்திற்கு உதவிசெய்ய அனுப்பப்பட்டார். இலங்கையிலும், இந்தியாவிலும் செபமாலைத் தாசர் சபை வளர திருக்குடும்பச் சபை உறுதுணையாக இருந்துள்ளது. இந்நன்நாளில் உங்கள் அனைவருக்கும் எம் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவிக்கின்றோம். தினமும் எமது மாலைச் செபத்தில் உங்களுக்காகச் செபிக்கின்றோம். இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

- அருட்சகோதரி மேரி கெலன் ஜெயந்தி.

## சபையின் அழைப்புக்கள் ஐந்து




இவ் அழைப்பை ஏற்று வாழ விரும்புவோர் வாருங்கள், வந்து பாருங்கள்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
திருக்குடும்ப மாகாண இல்லம்
121 பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 2460


## திருக்குடும்ப சபை பிரதிநிதித்துவ தலைவி - இந்தியா



யாழ்.மாகாணத்திற்கு திருக்குடும்ப சகோதரிகள் வருகைதந்த 150 ஆவது முப்பொன் விழாவில் இந்திய சகோதரிகளாகிய நாம் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவிக்கின்றோம். இலங்கைக்கு வருகை தந்த ஆதித் தாய்மார்கள் சமூக அரசியல் சவால்களுக்கு முகம்கொடுத்து வாழ்ந்ததைப்போன்று யாழ். மாகாணத்திலிருந்து இந்தியாவுக்கு வருகை தந்த சகோதரிகளும் இவ்வாறு வாழ்ந்த தன்மையை நாம் பாராட்டுகின்றோம். உலகம் முழுவதும் எமது ஆன்மீகத்தையும் அருங்கொடையையும் பரப்புவதற்கு அவர்கள் சாட்சிகளாக இருக்கின்றார்கள். இந்திய பிரதிநிதித்துவமும் அவர்களின் பெருமுயற்சியின் முதற்கனியே. யாழ்ப்பாணத்திலிருந்து வருகை தந்த சகோதரிகள் ஆன்மீக வாஞ்சையுடனும், அப்போஸ்தலிக்க ஆர்வத்துடனும் ஏழைகளை உயர்த்த பல வழிகளைத் தேடி, தாராள குணத்துடன் தங்களைக் கையளித்து இறை குடும்பத்தை இந்தியாவில் கட்டியெழுப்ப தம் வாழ்வையே அர்ப்பணித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தியாவில் சபையை ஆரம்பித்த சகோதரிகளின் அர்ப்பணம், திறந்த மனம், தன்னலமற்ற சேவை என்பவற்றை நாம் என்றும் நன்றியுடன் நினைவு கூருகின்றோம். இறைவனுடைய நிறைவான ஆசீர்வாதங்கள் என்றும் உங்களோடு இருப்பதாக.

- அருட்சகோதரி. லீதா லோறன்ஸ்

## யாழ். அரசாங்க அதிபரின் செய்தி



கடந்த 150 ஆண்டுகளில் பெரிய மாற்றங்களின் ஊடாகப் பயணித்த திருக்குடும்பக் கன்னியர் இன்று பெண்களின் கல்வியில் முதன்மையான நிலைக்கு வந்து கொண்டிருக்கின்றனர். வருங்காலத்தில் வரக்கூடிய சவால்களை துணிவோடு சந்திக்கத் தயாராக இருந்ததன் வெளிப்பாடே இதுவாகும். பின்தங்கிய கிராமங்களில் வாழ்ந்த ஏழைப் பிள்ளைகளுக்கு விசுவாசத்தையும், அன்பையும் பராமரிப்பையும் கல்வியையும் வழங்குவதே இவர்களின் நோக்கமாக இருந்தது. இந்நோக்கத்தை நிறைவேற்ற துணிவும், விடாமுயற்சியும் இவர்களுக்கு அவசியமாக இருந்தது. முகாமைத்துவ நுட்பத்துடனும், வினைத்திறனுள்ள பணியாளர்களுடனும், பொறுப்பான தலைமைத்துவத்துடனும் சவால்களையும் சிக்கல்களையும் எதிர்கொண்டனர். இக்கன்னியர்கள் பல தியாகங்கள் வழியாகவே சமுதாயத்தின் விளிம்புகளுக்கு தள்ளப்பட்ட எல்லோருக்கும் கல்வியின் மூலமாக நல்ல குடும்பங்களை உருவாக்கினார்கள். பிரமாணிக்கமும் அர்ப்பணமுமே அவர்களின் வாழ்கையின் அடிநாதமாக விளங்கியது. இறைவனின் ஆசீர்வாதங்களை இக்கன்னியர்கள் நிறைவாகப் பெறுவார்களாக.

சுந்தரம் அருமைநாயகம்.

## யாழ்.மாநகரசபை முதல்வரின் செய்தி



இற்றைக்கு 150 வருடங்களுக்கு முன் திருக்குடும்பக் கன்னியர்கள் இலங்கையில் கால்பதித்தனர். அத்துடன் கல்வித்துறையில் அதிசயிக்கத்தக்க பெரிய வளர்ச்சியை ஏற்படுத்தினர். இலங்கையில் கால்பதித்த முதல் பெண் துறவிகள் இவர்களே. அத்துடன் இவர்கள் கல்வியிலும் ஏழைகளைப் பராமரிப்பதிலும் ஈடுபாட்டுடன் உழைத்தனர். யாழ். மண்ணில் ஆரம்பித்த பணி இலங்கை முழுவதிலும் படிப்படியாக பரவியது. இக்கன்னியர்கள் மக்களின் எல்லா இன்ப துன்பங்களிலும், குறிப்பாக கொள்ளை நோய்கள், புயல் காற்று, வெள்ளப்பெருக்கு, சுனாமி, இடப்பெயர்வுகள், தொடர்ச்சியான போர் போன்ற இன்னோரன்ன துன்பியல் நிகழ்வுகளில் மக்களோடு ஒன்றித்து இருந்தார்கள். வருங்காலத்தில் இத்திருக்குடும்ப கன்னியர்களின் வாழ்வு சிறக்க வாழ்த்துகிறேன்.

- திருமதி. யோ. பற்குணராஜா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டு பதினொன்றானது அப்பா!



தோற்றம்
28.03.1951

மறைவு
29.10.2001

அமரர் **சண்முகராசா ஸ்ரீஸ்கந்தராஜா**
(போட்டோ ஸ்ரீ , குரும்பசிட்டி)
திதி: திரயோதஷி

ஆண்டு பதினொன்று முடிந்தது அப்பா!
உங்கள் உறவுக்காக காத்து இருக்கிறோம்
நித்தம் உங்களை நினைத்து வாழுகிறோம்
இன்னும் உங்கள் பிரிவின் துயரம் குறையவில்லை
உங்கள் கள்ளமில்லா சிரிப்பும் அமைதியான
உள்ளமும் உங்களிடம் இருப்பதால்
இன்னும் உங்களைத் தேடி நாடுகிறார்கள் படக்காட்சி எடுக்க
ஆனாலும் எட்டாத் தூரத்தில் நீங்கள் இருக்க
உங்கள் நினைவால் வாடுகிறோம்.

போட்டோ ஸ்ரீ
கே.கே.எஸ். றோட்,
கோண்டாவில். (24700) (45-6-7)

மனைவி,
பிள்ளைகள்.

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
18.10.1943

மறைவு
20.10.2010

திருமதி
**கந்தசாமி கமலாதேவி**

(சி/4311) (2-6-7)

அம்மா எம்மை ஈன்றவளே
கவிதைகளில் உமை வடிக்க வார்த்தைகள் இல்லை எம்மிடம்
எம் உயிரின் மூலமே; உம் பெருமை சொல்ல
இன்னொரு யுகமும் சேர்ந்து பிறக்க வேண்டும் நாம்
பாஷைகளின் அழியாத மொழியாக
அன்பு என்னும் வார்த்தையில் அர்ச்சனை மந்திரமாக
இருந்திருக்க வேண்டியவளே
எம்மைத் தவிக்க விட்டுச் சென்றதேனம்மா!



நீ இல்லாத இவ்வுலகில்
நாம் படும் அவஸ்தைகள் அறியாயோ?
உங்கள் அன்புக்கு ஈடு இணை யார் இவ்வுலகில்...
எம்மை அரவணைத்துக் கொள்ளுங்கள்
சொர்க்கமான உங்களுடன்; சொர்க்கத்திலாவது ஒன்றாக
வாழ்வோம் நிரந்தரமாக....
ஆண்டுகள் இரண்டென்ன... இரு யுகம் கடந்தாலும்
மறவாது உம் பாசம்; மாறாது எம் சோகம்

உங்கள் நினைவலைகள்
நீங்காத
-குடும்பத்தினர்-

ஆறுமுகம் வீதி, கந்தரோடை, சுன்னாகம்.

# மரண அறிவித்தல்

## திருமதி முத்து இராசேந்திரம் அன்னம்மா



அச்சுவேலி பத்தமேனியைப் பிறப்பிடமாகவும் பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்து இராசேந்திரம் அன்னம்மா 21.10. 2012 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசை-சூசானம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான முத்து-கமலம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றமுத்து இராசேந்திரத்தின் (குருசு) அன்பு மனைவியும், யேசுதாசன், யூலியற், றாணி(சீனத்தி), தர்மநாயகம் (துரை),அஞ்சலா(குட்டி), லில்லிபுஸ்பம்(செல்லா), புனிதசீலி (சாந்தா), ஞானசீலி(காந்தா) ஆகியோரின் அன்புத் தாயும், பிலேந்திரன்,மணி ஆகியோரின் சிறியதாயும், யசிந்தா,கொர்னேலியஸ் (ஓய்வு பெற்ற யாழ் மாநகர சபை சுகாதார மேற்பார்வையாளர், தற்போதைய மாநகர சபை உறுப்பினர்), திருச்செல்வம், சந்திரா, தோமஸ், காலஞ்சென்ற கனகலிங்கம் மற்றும் காந்தராஜா, கணேசலிங்கம், செபஸ்ரியாம்பிள்ளை (பாதர்), ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்றவர்களான மடுத்தீன், அந்தோனிப்பிள்ளை, சின்னன்,மாணிக்கம், எலிசபேத், ஞானம், செல்லத்தம்பி ஆகியோரின் அன்பு சகோதரியும், யக்சன், ஜோண்சன்,மேரி ஆன்யூடி, லிண்டா,கிளௌடியா, டனிலா, டெல்சா, கனியா, அல்விஸ், றூபினி, அசோக், துசி, குறுஷாந், டிலுக், துர்க்கா, லக்ஸ்ஷியா,நந்தினி, சாளினி, வினிஷா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அவரின் பூதவுடல் இன்று (27.10.2012) சனிக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் இல.158, பாங்ஷால் வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு யாழ். மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**158, பாங்ஷால் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி/4327)(5-6-7)

தகவல்:
அருளப்பு கொர்னேலியஸ்
(யாழ். மாநகரசபை மற்றும் உறுப்பினர்)
பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விகாராதிபதி கொலை மிரட்டல் தமிழ்ப் பொலிஸ் அதிகாரிக்கு

## பிக்கு தலைமையில் சென்ற ஆயுதபாணிகள் அடித்து நொறுக்கினர் வீட்டையும் மதிலையும்

மட்டக்களப்பு,ஒக்.27

மட்டக்களப்பு, மங்களராமய விகாரைக்கு அருகில் இருந்த தமிழ் பொலிஸ் அதிகாரி ஒருவரை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஆயுதங்களுடன் சென்ற குறித்த விகாரையின் விகாராதிபதி கொலை மிரட்டல் விடுத்துள்ளார்.

அவரது வீட்டையும் உடைத்து சேதப்படுத்தியதன் காரணமாக குறித்த பொலிஸ் அதிகாரி வேறு இடத்தில் தங்கியுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-



மட்டு.நகரில் காவி உடையில் அக்கிரமம்

மட்டக்களப்பு நகரில் மங்களராமய விகாரை உள்ளது. அதன் விகாராதிபதியாக அம்பிட்டியே சுமங்கல தேரர் உள்ளார். இந்த விகாரைக்கு அருகில் தமிழ் பொலிஸ் அதிகாரி ஒருவரின் வீடு உட்பட பல வீடுகள் உள்ளன. எனினும் அவர் மட்டுமே தமிழர்.

குறித்த பொலிஸ் அதிகாரி காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் உப பொலிஸ் பரிசோதகராகக் கடமையாற்றுகிறார். அவரது மனைவி மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் உப பொலிஸ் பரிசோதகராகக் கடமையாற்றி வருகின்றார்.

கடந்த சில மாதங்களாக குறித்த விகாரையின் விகாராதிபதி, குறித்த பொலிஸ் அதிகாரியின் வீட்டின் மதில்களை அகற்றக்கோரியிருந்தார்.

இதுதொடர்பில் பல்வேறு தடவைகள் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டபோதும், அவர்கள் பிக்கு மீது நடவடிக்கை எடுக்காமல் குறித்த பொலிஸ் அதிகாரி, அவரது மனைவி ஆகியோர் மீதே நடவடிக்கை எடுத்துள்ளனர்.

பிக்குவுக்கு எதிராக செயற்பட்டதன் காரணமாக இருவரும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து உயர் அதிகாரிகளிடம் கேள்வியெழுப்பியபோதும் பிக்குவுக்கு எதிராக செயற்பட்டதன் காரணமாகவே இடமாற்றம் செய்யப்பட்டதாகக் கூறினர்.

நேற்றுமுன்தினம் பிக்குவின் தலைமையில் கத்திகள், அலவாங்கு, பொல்லுகளுடன் சென்ற சுமார் 6 பேர் கொண்ட குழுவினர், குளியல் அறை மற்றும் மதில், சமையலறை பகுதிகளை உடைத்து சேதப்படுத்தியுள்ளனர்.

இதனால் குறித்த பொலிஸ் அதிகாரி அவசர பொலிஸ் சேவைக்கு அழைப்பு விடுத்துள்ளார். இதனையடுத்து அப்பகுதிக்கு வந்த பொலிஸார் எதுவித நடவடிக்கையும் எடுக்காமல் பார்த்துக் கொண்டு நின்றுள்ளனர்.

உடனடியாக அருகில் உள்ள மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்துக்குச் சென்று தம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் குறித்த முறைப்பாட்டை ஏற்றுக்கொள்ளுமாறும் குறித்த தமிழ் பொலிஸ் அதிகாரி கோரியுள்ளார். எனினும் உயரதிகாரி இல்லை என்று கூறி குறித்த முறைப்பாட்டை ஏற்க பொலிஸார் மறுத்துள்ளனர்.

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதியிடம் சென்று தனது நிலைமை தொடர்பில் வாக்குமூலம் அளித்த நிலையில், பாதுகாப்புக் கருதி வேறு இடத்துக்கு செல்ல தீர்மானித்ததாக தமிழ் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

தமிழன் என்ற காரணத்தினால் உதவ பொலிஸார் முன்வராதது அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. தனக்கு நேர்ந்துள்ள கொடுமைக்கு எதிராக தமிழ் மக்கள் குரல் கொடுக்க வேண்டும் என்று குறித்த பொலிஸ் அதிகாரி கோரிக்கை விடுத்துள்ளார். (ச)

## மூதூர் அங்காடி வியாபாரிகளுக்கு கடைத் தொகுதி

திருகோணமலை,ஒக்.27

மூதூர் பிரதேச அங்காடி வியாபாரிகளுக்காக மின்சார நிலைய வீதியில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் கடைத் தொகுதிகள் நிறைவு பெற்றதும், இந்த வியாபார நிலையங்கள் புதிய இடத்துக்கு மாற்றப்படவுள்ளன.

மூதூர் பிரதேசத்தில் பல வருட காலமாக பல்வேறு தொழில்களை நிரந்தர இடவசதி இல்லாத நிலையில் நடத்திவந்த இந்த வியாபாரிகளுக்கு புதிய கட்டடத் தொகுதி தனியான கடைகளாகவும் மற்றும் பாதுகாப்பு உடையதாகவும் அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-40)

## பொதுக்கூட்டம்

அம்பாறை,ஒக்.27

அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர்கள் சங்க ஐந்தாவது வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை சாய்ந்தமருது பரடைஸ் வரவேற்பு மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

இந்த வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தபால் அதிபர் டி.எல்.பி.ரோஹண அபயரத்ன பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ச-30)

## கைகலப்பு; மாணவர்கள் கைது

நான்கு மாணவர்கள் சேர்ந்து தாக்கியதில் சக மாணவனின் கண் பாதிக்கப் பட்டுள்ளது.

கண்டி,ஒக்.27

ஹற்றன் ஸ்ரீபாத கல்லூரியின் உயர்தர மாணவர்களுக்கு இடையில் ஏற்பட்ட கைகலப்பு சம்பவம் தொடர்பில் குறித்த கல்லூரி மாணவர்கள் நால்வரை ஹற்றன் பொலிஸார் நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை கைது செய்துள்ளனர்.

தாக்குதலுக்கு இலக்கானார் எனக் கூறப்படும் சக மாணவன் ஒருவன் மேலதிக சிகிச்சைக்காக கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

நான்கு மாணவர்கள் கிரிக்கெட் மட்டையினால் தாக்கியதில் குறித்த மாணவனின் கண்ணொன்று பாதிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் கூறினர். (ச)

## பசளை பாவனை குறித்து விழிப்புணர்வு

மட்டக்களப்பு,ஒக்.27

பசளை பாவனை தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு மட்டக்களப்பு, ஆரையம்பதி சுமநல கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பசளை பாவனை தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்குகள் கமநலகேந்திர நிலையங்களினால் நடத்தப்பட்டு வருகின்றன.

இயற்கைப் பசளையை ஊக்குவிக்கும் பொருட்டு அதற்கான விவசாய உபகரணங்களும் இதன்போது விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

இந்தநிகழ்வில் மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி வாசுகி அருள்ராஜ், மட்டக்களப்பு மாவட்ட தென்னை ஆராய்ச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.ஜெகன், ஆரையம்பதி கமநல கேந்திர பெரும்போக உத்தியோகத்தர் திருமதி பிரதீப் இனோக்கா நிசாந்தி, விவசாய போதனாசிரியைகள், கமநல அமைப்புக்களின் தலைவர்கள் , விவசாயிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச)



திருகோணமலை மாவட்டத்துக்குச் சென்ற இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ. மஜீத்தை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சந்தித்துள்ளார். இந்தச் சந்திப்பில் கிழக்கு முதலமைச்சரின் செயலாளர் யூ.எல்.அஸீஸ், கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## பாசிக்குடா கடற்கரையை வலம் வந்தார் பிள்ளையான்



மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பாசிக்குடா கடற்கரையை முன்னாள் முதல்வரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் நேற்று வியாழக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டார். கடற்கரையின் முகாமை மற்றும் சுகாதாரம், பாதுகாப்பு உள்ளிட்ட பிற வசதிகள் குறித்தும் அவர் கவனம் செலுத்தினார். பாசிக்குடா கடற்கரை கடந்த 30 வருடங்களாக பயன்படுத்தப்படாது காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-31)

## தமிழ்-முஸ்லிம் உறவை எவராலும் பிரிக்க முடியாது

### கூட்டமைப்பு-மு.கா. ஒற்றுமை பிளவுபடக்கூடாது என்கிறார் கபூர்

இலங்கையில் இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் மக்களை அரவணைத்தே பங்கெடுக்கும் என்பதில் எமக்கு நம்பிக்கை உண்டு. எனவே, தீர்வு முயற்சியில் தமிழ்க் கூட்டமைப்பு - முஸ்லிம் காங்கிரஸின் ஒற்றுமை பிளவு படக் கூடாது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி யின் ஸ்தாபகச் செயலாளர் எஸ். [illegible] தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை சம்மாந்துறையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எல்.தவம் தமிழ் - முஸ்லிம் உறவை சீர்குலைக்கும் வகையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாணத்தில் [illegible] இன்று வரைக்கும் தமிழ் - முஸ்லிம் உறவு பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இடையிடையே சில அசம்பாவிதங்கள் இடம்பெற்றாலும் தமிழ், முஸ்லிம் மக்கள் ஒற்றுமையுடன் வாழ்கின்றார்கள். எமது கட்சியின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் அஷ்ரப்பின் வழியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் பயணிக்கவேண்டும்.

அரசுடன் சேர்ந்து நாம் கிழக்கு மாகாணத்தில் ஆட்சியமைத்தாலும் தமிழ் மக்களின் அமோக ஆதரவைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நல்ல உறவை தொடர்ந்து வைத்திருக்கவேண்டும்.

எமது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர்கள் கருத்து வெளியிடும்போது மிக அவதானத்துடன் இருக்க வேண்டும். முஸ்லிம் மக்கள் தமிழ் மக்களையோ அல்லது தமிழ் மக்கள் முஸ்லிம்களையோ வெறுக்கும் விதத்தில் நாம் கருத்து வெளியிடக்கூடாது.

எமது கட்சி உறுப்பினர்களோ அல்லது வேறு எவரோ எந்தக் கருத்துக்களை முன்வைத்தாலும் தமிழ் - முஸ்லிம் உறவை பிளவுபடுத்த முஸ்லிம் மக்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்கள். - என்றார். (ச-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது
வித்தியா

## இன்றைய நாள்
### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உங்கள் செயலில் சத்தியம், நேர்மை என்பவற்றை அதிகம் பின்பற்றுவீர்கள். குடும்ப உறுப்பினர் உதவி கரமாக நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி இனிதாக நிறைவேறும். உத்தியோகத்தர்களுக்கு பாராட்டு, வெகுமதி கிடைக்கும்.

**இடபம்:** நல்லோரின் ஆலோசனையை மதித்து நடப்பீர்கள். மனதில் உற்சாகமும், செயல்களில் திறமையும் அதிகரிக்கும். புதிய யுத்தியைப் பயன்படுத்தி, தொழில், வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் பெறுவீர்கள். லாபவிகிதம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** நண்பருக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்படும். உங்களின் சூழ்நிலையை இதமாகச் சொல்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சி நிலை படிப்படியாக முன்னேறும். எதிர்பார்த்த பணவரவு சீராக கிடைக்கும். போக்குவரத்தில் கவனம் தேவை.

**கடகம்:** உங்கள் உடல் நலம் சீராக தகுந்த அக்கறை கொள்வீர்கள். அதுபோல செயல்களிலும் அதிக கவனம் கொள்வது சிரமத்தைத் தவிர்க்க உதவும். தொழில், வியாபாரத்தில் சிறு குளறுபடி வந்து பின்னர் சரியாகும். அளவான பணவரவு கிடைக்கும்.

**சிங்கம்:** உங்களின் வாழ்வியல் அனுபவத்தை நண்பரிடம் சொல்வீர்கள். மனதில் இருந்த சஞ்சலம் மிகவும் குறையும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் வளர்ச்சி பெறத் தேவையான பணி புரிவீர்கள். பணியாளர்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்பு தகுந்த வெகுமதி கிடைக்கும்.

**கன்னி:** சமூக நடப்பில் புதிய அனுபவம் பெறுவீர்கள். படிப்பினைகளைக் கவனத்தில் நிறுத்தி, செயல்களில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி பெருமளவு குறையும். சராசரி பணவரவுடன் நிலுவைப் பணமும் வசூலாகும். விவகாரங்களில் சாதகமான தீர்வு கிடைக்கும்.

**நாளை**

ஐப்பசி -12 ஞாயிற்றுக்கிழமை 28.10.2012
திதி: சதுர்த்தசி பி.இ.12.14 வரை
நட்சத்திரம்: ரேவதி, பி.இ 01.22 வரை
சுபநேரம்: 09.03-10.33 வரை
ராகுகாலம்: 04.33- 06.03 வரை

**துலாம்:** உங்கள் செயல்களில் சிறு குளறுபடி ஏற்படலாம். அனுபவம் ஞானம் உணர்ந்து செயற்படுவதால் பணிகள் சிறப்பாகும். தொழில், வியாபாரம் வளர கூடுதல் நேரம் பணிபுரிவீர்கள். சராசரி பணவரவு கிடைக்கும்.

**விருச்சிகம்:** சிலர் உங்களை தமக்கு சாதகமாகச் செயற்பட விரும்புவர். விலகி வருவதால் சிரமத்தைத் தவிர்க்கலாம். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் பணிபுரிவது அவசியம். இயந்திரத் தொழிற்சாலைப் பணியாளர்கள் பாதுகாப்பு நடைமுறை தவறாமல் பின்பற்ற வேண்டும்.

**தனுசு:** உங்கள் மனதில் அன்பும், கருணையும் அதிகரிக்கும். இயலாதவர்களுக்கு உதவி புரிந்து சமூகத்தில் நற்பெயர் பெறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் கூடுதல் பரிமாணம் ஏற்படும். ஆதாய பணவரவு கிடைக்கும்.

**மகரம்:** உங்கள் நண்பர் ஒருவர் தேவையான உதவி கேட்பார். இயன்றளவில் உதவி செய்து அன்பை வளர்ப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் அமைந்து உரிய பணவரவை பெற்றுத்தரும்.

**கும்பம்:** உங்கள் மனதிலும், உடலிலும் புத்துணர்வு ஏற்படும். நிலுவைப் பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சிநிலை திருப்திகரமாகும். உபரி பணவருமானம் கிடைக்கும்.

**மீனம்:** சிலரது பேச்சு உங்களைச் சங்கடத்துக்கு உள்ளாக்கும். நீங்கள் அவர்களிடம் விலகி, சொந்தப்பணியில் ஆர்வம் கொள்வது நல்லது. தொழில், வியாபாரத்தில் நிறைவேற்ற வேண்டிய முக்கிய பணி நிறைவேறும். திருப்திகரமான அளவில் பணவரவு கிடைக்கும்.


## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 8 | 9 | 3 | | |
| 2 | | 9 | | | 3 | | 8 | |
| 4 | | 8 | | | | | 5 | 1 |
| | | 1 | 9 | 6 | | 8 | | |
| | 2 | | | 3 | | | 7 | |
| | | 4 | | 7 | 1 | 5 | | |
| 7 | 9 | | | | | 6 | | 5 |
| | 1 | | 6 | | | 7 | | 8 |
| | | 6 | 1 | 5 | | | | 9 |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 8 | 5 | 4 | 3 | 9 | 7 | 6 | 2 |
| 4 | 7 | 6 | 5 | 8 | 2 | 3 | 9 | 1 |
| 9 | 3 | 2 | 1 | 6 | 7 | 8 | 4 | 5 |
| 7 | 9 | 1 | 3 | 2 | 5 | 6 | 8 | 4 |
| 8 | 5 | 3 | 6 | 7 | 4 | 1 | 2 | 9 |
| 6 | 2 | 4 | 9 | 1 | 8 | 5 | 3 | 7 |
| 3 | 1 | 9 | 7 | 4 | 6 | 2 | 5 | 8 |
| 2 | 4 | 7 | 8 | 5 | 3 | 9 | 1 | 6 |
| 5 | 6 | 8 | 2 | 9 | 1 | 4 | 7 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசிய அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபை பிரதிநிதிகள் அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தனர்.

## டெங்கு ஆய்வுக்குச் சென்ற அதிகாரி நீரில் மூழ்கி மாயம்

கொழும்பு,ஒக்.27

டெங்கு நுளம்பு ஒழிப்பு தொடர்பான ஆய்வுக்குச் சென்ற உயிரியல் பிரிவு உதவி அதிகாரி ஒருவர் மகாஓயா வில் விழுந்து காணாமற் போயுள்ளார்.

வரக்காபொல, கோதாபா லுவ பகுதியிலுள்ள மகா ஓயாவில் நேற்றுமுன்தினம் மாலை குறித்த நபர் நீராடச் சென்றுள்ளார்.

அதன்போது அவர் நீரில் மூழ்கி காணாமற் போயுள்ளார் என்று வரக்காபொல பொலி ஸார் தெரிவித்தனர்.

கேகாலை மாவட்ட சுகா தார வைத்திய அதிகாரிகள் அலுவலகத்தில் கடமைபுரியும் ஒருவரே இவ்வாறு காணா மல் போயுள்ளார். (ச)

# ‘13’ பறிபோனால் மீண்டும் மோதல்

### எச்சரிக்கிறார் பிள்ளையான்

கொழும்பு,ஒக்.27

13 ஆவது அரசமைப்புத் திருத்தம் ரத்துச் செய்யப் பட்டால் நாட்டில் மீண்டும் மோதல்கள் ஏற்படும் என்று ஜனாதிபதியின் ஆலோச கரும், முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.



13 ஆவது அரசமைப்புத் திருத்தம் ரத்துச் செய்யப் படுவதை நான் கடுமையாக எதிர்ப்பேன் என்று அவர் கூறினார்.

இந்த அரசமைப்புத் திருத்தத்தை நடைமுறைப் படுத்தி, மாகாண சபைக ளுக்கு அதிகளவிலான அதி காரங்களை வழங்க வேண் டும் என்று அவர் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

தமிழ் மக்கள் உட்பட நாட் டில் வாழும் சிறுபான்மையின மக்கள் 13 ஆவது அரசமைப் புத்திருத்தம் தொடர்பாக கடும் நம்பிக்கை கொண்டுள்ளனர். இதன் மூலம் அந்த மக்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுப்பது முக்கியமானது என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த அரசமைப்புத் திருத்தத்தை ரத்துச் செய்ய வேண்டும் என்று கூறுப வர்கள் அரசில் அங்கம் வகிக்கும் ஒரு சிலரே அன்றி அரசு அல்ல என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## உயர்தரப் பரீட்சை பெறுபேறு ஜனவரி 30ஆம் திகதிக்கு முன்

### பரீட்சை ஆணையாளர் அறிவிப்பு

கொழும்பு,ஒக்.27

2013 ஆம் ஆண்டு ஜன வரி மாதம் 30 ஆம் திகதிக்கு முன்பு ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளி யிடப்படும் என்று பரீட்சை ஆணையாளர் என்.ஜே. புஸ்பகுமார தெரிவித்தார்.

உயர்தரப் பரீட்சை விடைத் தாள் மதிப்பீட்டுப் பணிகள் உரிய முறையில் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன என்று அவர் கூறினார்.

பல்கலைக்கழக விரிவு ரையாளர்களினால் முன்னெ டுக்கப்பட்ட தொழிற்சங்கப் போராட்டத்தினால் விடைத் தாள் மதிப்பீட்டு நடவடிக் கைகள் காலதாமதமடைந் திருந்தன.

எனினும், தற்போது இந் தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## பிரிட்டன் விசா பெறுவதற்கு இனிமேல் புதிய நடைமுறை

கொழும்பு,ஒக் 26

கொழும்பில் கையளிக் கப்படும் விசா விண்ணப் பங்களை சென்னை பிரிட் டன் பிரதித் தூதரகத்தில் உள்ள ஐக்கிய இராச்சிய எல்லை முகவரகம் எதிர் வரும் முதலாம் திகதி வியா ழக்கிழமை முதல் கையாளும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் விசா விண்ணப்பங்களில் அநேக மானவை 2008இலிருந்து சென்னையிலேயே பரி சீலனை செய்யப்பட்டன. இலங்கையிலுள்ள பிரிட்டன் தூதரகத்தின் விசா பிரிவு ஒக்ரோபர் 31ஆம் திகதியுடன் மூடப்படும்.

விசா விண்ணப்பங் களை முன்னர் போலவே விசா விண்ணப்ப நிலையத் திலேயே ஒப்படைக்கலாம். 90 சதவீத விசா விண்ணப் பங்கள் 15 நாள்களுக்குள் பரிசீலிக்கப்படும்.

கடவுச்சீட்டை இலங் கைக்கு வெளியே கொண்டு செல்வதற்காக இலங்கை அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணம் ஆயிரம் ரூபாவை விசா விண்ணப்ப நிலை யத்தில் செலுத்த முடியும். விசா விண்ணப்ப நிலைய நிர்வாகச் செலவாக 200 ரூபா அறவிடப்படும்.

மேலதிக விவரங்களுக்கு, தொலைபேசியூடாக - 331 (டயலொக் பாவனையாளர் களுக்கு) 0094 773908011 உடன் தொடர்புகொள்ளவும். அல்லது, Chennai.visa en quiryfco.gov.uk என்ற மின் னஞ்சல் முகவரிக்கு மின் னஞ்சல்களை அனுப்பியோ அல்லது www.ukba. home office.gov.uk, www.ukba. homeoffice.gov.uk/coun tries/ srilanka என்ற இணை யத்தளங்களினூடாகவோ தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும். (த)

## ஆபாச இணையத் தளங்களை முடக்குமாறு வேண்டுகோள்

51 ஆபாச இணையத் தளங்கள் பற்றிய தகவல்கள் சேகரிக் கப்பட்டுள்ளன.

கொழும்பு,ஒக்.27

51 ஆபாச இணையத் தளங்களை முடக்குமாறு சிறு வர் பாதுகாப்பு அதிகார சபை நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

51 ஆபாச இணையத் தளங்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

இந்த இணையத் தளங் களை முடக்கி விடுமாறு பத்தரமுல்லவில் அமைந் துள்ள விசேட சிறுவர் நீதி மன்றில் கோரிக்கை விடுக் கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர் பில் விசாரணை நடத்தப்பட் டுள்ளது என்று நீதிமன்றம் அறிவித்துள்ளது. குறித்த இணைய தளங்களை முடக் குவது தொடர்பில் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனை பெற்றுக் கொள்ளப்பட உள்ளது என்று நீதிமன்றம் அறிவித் துள்ளது.

சட்ட மா அதிபர் திணைக் களத்தின் ஆலோசனைக்கு அமைவாக அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று விசேட சிறுவர் நீதி மன்றம் கூறியுள்ளது. (ச)

## கஞ்சா கடத்தியவர் சிக்கினார்

கொழும்பு,ஒக்.27

தமிழ்நாட்டில் இருந்து இலங்கைக்கு வந்த விமானமொன்றில் கஞ்சா கடத்தி வந்த நப ரொருவர் கட்டுநாயக்க விமான நிலை யத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் நேற்றுமுன்தினம் இரவு 8.15 மணிக்கு கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இந்தியாவில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்த விமானத்தின் பயணிகளை கட்டுநாயக்க விமான நிலைய போதைப் பொருள் ஒழிப்பு பிரிவினர் சோதனையிட்டனர். அதன்போதே ஒரு நபரின் பயணப் பையில் இருந்து 1 கிலோ 912 கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. (ச)

## எரிபொருள் விலை எகிறலாம்

கொழும்பு,ஒக் 26

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகளை எதிர்வரும் 15 தினங்களுக்கு முன்னெடுக்க முடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் எதிர்வரும் நாள்களில், எரிபொருள்கள், எரிவாயுவின் விலைகள் அதிகரிக்கப் படலாம் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.

ஈரான் லைட் என்ற மசகு எண்ணெய் கிடைக்கப் பெறாமையே இதற்கான காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் இந்த நிலையில் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது. (த)

## ஏற்படுத்தப்பட்ட உடன்பாடு நவம்பர் 1 இல் செயற்பாடு

### உயர்கல்வி அமைச்சு தகவல்

கொழும்பு,ஒக்.27

பல்கலைக்கழக விரிவு ரையாளர்கள் சங்க சம்மேள னத்துடன் ஏற்படுத்திக் கொள் ளப்பட்ட உடன்பாடுகள் எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைப் படுத்தப்படும் என்று உயர் கல்வி அமைச்சு தெரிவித் துள்ளது.

குறித்த இணக்கப்பாடு களை செயற்படுத்த அரசு தயங்கி வருவதாக பல் கலைக்கழக விரிவுரையாளர் கள் சங்க சம்மேளனம் முன் வைத்த குற்றச்சாட்டில் உண்மை இல்லை என்று உயர்கல்வி அமைச்சு குறிப் பிட்டுள்ளது.

எனினும் எதிர்வரும் 30 ஆம் திகதி பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனத்துடன் பேச்சு நடத்தப்படும் என்று உயர் கல்வி அமைச்சு தெரிவித் துள்ளது.

நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை இடம்பெற்ற செயற் குழு கூட்டத்தில் இணக்கப் பாடுகள் குறித்து கூடிய கவனம் செலுத்தப்பட்டதாக பல்கலைக்கழக விரிவு ரையாளர்கள் சங்க சம்மேள னத்தின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி மஹிம் மெண்டிஸ் தெரிவித்தார். (ச)

## ரூ.8 லட்சம் கப்பம் பெற முயன்ற படை அதிகாரி கைது

### மாட்டிக் கொண்டார் வசமாக

8 லட்சம் ரூபா கப்பம் பெற்றுக்கொள்ள முயற்சித்த முன் னாள் சிவில் பாதுகாப்பு படையதிகாரி ஒருவரை பொலி ஸார் கைது செய்துள்ளனர். பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஒருவரைப் போன்று தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி அனுராதபுரம் மாநகரசபையின் ஆளும் கட்சி உறுப்பினரை குறித்த சிவில் பாதுகாப்புப் படையதிகாரி மிரட்டியுள்ளார்.

மாநகரசபை உறுப்பினர் சுசில் திலகரட்ன என்ப வரிடமே இவ்வாறு எட்டு லட்சம் ரூபா கப்பம் கோரப் பட்டுள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்துடன் சுசில் திலகரட்ண தொடர்பு பட்டிருப்பதாகவும், அந்தத் தகவல்களை தொடர்ந்தும் இரகசியமாக பேண கப்பம் வழங்குமாறும் குறித்த நபர் தொலைபேசி மூலம் அச்சுறுத்தியுள்ளார்.

கப்பப் பணம் வழங்கப்படாவிட்டால் தகவல்களை அம்பலப் படுத்தி சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாக குறித்த சிவில் பாதுகாப்புப் படையதிகாரி எச்சரிக்கை விடுத்துள்ளார். கப்பப் பணத்தை வழங்குவதனைப் போன்று போலிப் பணப் பொதி ஒன்றை வழங்கி குறித்த சிவில் பாதுகாப்புப் படைய திகாரியைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் நளினி கிருபானந்தன் அவர்களின் பாசமிகு தந்தை

**மனுவேற்பிள்ளை ரீற்றர் பெவடிக்ற்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆணையாளரும் சக ஊழியர்களும், மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம், வட மாகாணம்.

(24768) (2-6-7)


## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
## The Jaffna Education Center
(சீயோன் தேவாலயத்துக்கு அருகில்)

★Spoken English with Grammar ★Short Hand Typing ★"சிங்களம்" ★
* ESOL பரீட்சைக்குத் தயார் செய்து விடல் ஆகிய வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
புதிய பிரிவு ஆரம்பம் இன்று 27.10.2012
பாட முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
ஆசிரியை - இ. லோகநாயகி. தொடர்பு: 0776779340

(24783) (2.6.7)


# 10 ஆம் ஆண்டு நினைவலைகள்



அன்னையின் மடியில்
10.11.1937

ஆண்டவன் அடியில்
18.10.2002

**அமரர்**
**சேதுராமலிங்கம்**
**திலகவதியம்மா**

திதி:- திரயோதசி (27.10.2012)

நிஜங்கள் நிழல்கள் ஆனாலும்
வரும் நினைவுகள் மாறுவதில்லை
உங்கள் உடல் எம்மை விட்டுப் பிரிந்தாலும் நினைவுகள்
எம்மை விட்டு அகலவில்லை
அவனியில் உங்கள் நினைவால்
அனுதினமும் நாம் வாடுகின்றோம்.

என்றும் உங்கள் நினைவில்...

வியாபாரி மூலை,
பருத்தித்துறை.

- குடும்பத்தினர்.

(23564) (2-6-7)

## நவராத்திரி பூசை

மாவிட்டபுரம் பிருந்தகான லயாப் அறநெறிப் பாடசாலையினரால் கடந்த புதன் கிழமை நவராத்திரி பூஜையின் இறுதி நாள் நிகழ்வு மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலில் சிறப்பாக நடைபெற்றது.

மாவை ஆதீன கர்த்தா இரத்தின சபா பதி குருக்கள் தலைமையில் பூசைகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (3)

## பால் காய்ச்சும் நிகழ்வு

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை புதிய கட்டடத்துக்கான பால் காய்ச்சும் நிகழ்வு இன்று மு.ப. 10 மணிக்கு பிரதேச சபைத் தலைவர் என்.ஜெபநேசன் தலைமையில் நடைபெறும். (3-100)

## விழிப்புணர்வு கருத்தரங்கு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் சுகாதாரக் குழு உறுப்பினர்கள் மற்றும் பொறுப்பாசிரியர்களுக்கான இரு நாள் விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

நவம்பர் முதலாம் இரண்டாம் திகதிகளில் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மண்டபத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (39)

# பரத நாட்டிய அரங்கேற்றம்



திரு.திருமதி
**ஜெயதீஸ்வரன் புஸ்பலீலா**
தம்பதியரின் செல்வப் புதல்வியும்
"நடனவாரிதி"
ஸ்ரீமதி
**பத்மினி செல்வேந்திரகுமார்**
அதிபர், கலைக்கோயில், ஆசிரிய ஆலோசகர் - யாழ். கல்விவலயம் (நடனம்)
அவர்களின் மாணவியுமான

**செல்வி நர்மதா**

அவர்களின் நடன அரங்கேற்ற நிகழ்வு இன்று(27.10.2012) சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ்ப்பாணம், வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற இருப்பதனால் தாங்களும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*தலைவர்:*
**திரு.ரி.ராஜலிங்கம்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர், யாழ்.கல்வி வலயம்.

*பிரதம விருந்தினர்:*
**வி.பி.சிவநாதன்**
பேராசிரியர், பீடாதிபதி, கலைப்பீடம்.

*கௌரவ விருந்தினர்:*
**கலைஞர் வேல் ஆனந்தன்**
**கலாகீர்த்தி**
**ஸ்ரீமதி சாந்தினி சிவநேசன்**

*சிறப்பு விருந்தினர்:*
**யோகேஸ்வரி பற்குணராஜா**
யாழ்.மாநகரசபை முதல்வர்.
"நாட்டிய வாரிதி"
**லீலாம்பிகை செல்வராஜா.**

*தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்*

திரு.திருமதி ஜெயதீஸ்வரன் புஸ்பலீலா
**குடும்பத்தினர்.**
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

(சி/4326)(2-6-7)


## நாய்க்குட்டி விற்பனைக்கு

45 நாள் நிரம்பிய ஜேர்மன் செப்பேட் அல்செசன் குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு
0776156807, 021 226 3846

(23872) (2.6.7)

## விற்பனைக்கு

ஹோட்டலுக்குரிய கதிரை (சில்வர்), மேசை, ஹொட்கபேட்(சாப்பாடு போட்டு வைக்க சிறிது,பெரிது), ரீபட்டறை, டீபிறீஷர், பெரிய கவுண்டர், போட் இன்னும் பல ஹோட்டல் பொருள்கள்.
தொடர்பு:
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 9942

(24735)(3-6-7)

## அறைகள் வாடகைக்கு உண்டு

யாழ்.பல்கலைக்கழகத்துக்கு அருகில் அறைகள் வாடகைக்கு உண்டு.
(பல்கலைக்கழக மாணவர்களுக்கு - பெண்கள் மட்டும்)
தொடர்பு: 0778766145

(24745) (2.6.7)

## மணமகள் தேவை

* 85 இல் பிறந்த RC வேதமுடைய சொவ்ற்வெயர் இஞ்சினியருக்கு படித்த RC வேதமுடைய மணமகள் தேவை.
* 79 இல் பிறந்த 7 இல் செவ்வாய் 99 பாவம் உடைய நோர்வேயால் வந்துள்ள மண மகனுக்கு படித்த மண மகள் தேவை.
* 83 இல் பிறந்த 1 இல் செவ்வாய் 21 ¼ பாவம் உடைய சொவ்ற்வெயர் இஞ்சினியராக சிங்கப்பூரில் பணிபுரியும் மணமகனுக்குப் படித்த மணமக்கள் தேவை.
* 81 இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 31 பாவம் உடைய வங்கியில் பணிபுரியும் மண மகனுக்கு படித்த மணமகள் தேவை.
* 79 இல் பிறந்த 4 இல் சூரியனும் செவ்வாயும் 33 ¼ பாவம் உடைய வங்கியில் பணிபுரியும் மணமகனுக்குப் படித்த மணமகள் தேவை.

தொடர்பு:கமலக்கண்ணன் திருமண சேவை, இல.435/3, கோயில்வீதி, நல்லூர். T.P.0776070862

(24786) (2-7-6)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

45 நாள் நிரம்பிய ஆண், பெண் பொமேரியன் குட்டிகள், அல்சேசியன்கள், சினைப்பட்ட அல்சேசியன் (பெண்), 1½ வயது நிரம்பிய ஆண் அல்சேசியன், பொமேரியன் ஆண், பெண் நாய்கள் என்பன விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: இல.06, மதவடி ஒழுங்கை, திருநெல்வேலி,
தொ.பே.077101 6407

(24787) (2.6.7)



யாழ்.நகரில் வெகு விரைவில்
ராசி சில்க்ஸ்,
நல்லி சில்க்ஸ்
ஆதரவுடன்
யாழ்.நகரில் முற்றிலும்
நவீனமயப்படுத்தப்பட்ட
ஜவுளிமாளிகை

# ராசி கலெக்ஷன்ஸ்

விரைவில் எதிர்பாருங்கள்....



(சி/4330)(2.6.7)


# மரண அறிவித்தல்

## தவராசா தவராணி(தேவி)



யாழ். கலட்டி, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் இல. 115/02, ஆலடி வீதி, தோணிக்கல் வவுனியாவை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட தவராசா தவராணி (தேவி) 25.10.2012 அன்று வவுனியாவில் காலமானார்.

அன்னார் தவராசாவின்(கட்டட ஒப்பந்தகாரர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-அன்னம்மா (கலட்டி, கொக்குவில்) தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான குட்டி-வள்ளி (நல்லூர்) தம்பதியரின் அன்பு மருமகளும், சுபீர்குமார்(சுபீர்), சுபாஷினி, சுசிர்தரன்(தரன்), சுகிர்னா (யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட 3ஆம் ஆண்டு மாணவி), சுபீஸ்கரன் ஆகியோரின் பாசமிகு தாயும், சுரேஸ் குமார்(சுரேஸ்), அனுஷா, ரஜிதா ஆகியோரின் மாமியும், டிலக்ஷிகா, சனுஜிதன், டிலோஜிதன், சலோஷிசா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (28.10.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக தோணிக்கல் பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

115/02, ஆலடி வீதி,
தோணிக்கல்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எல்லா மாவட்டங்களிலும் மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

## நாள் மாற்றம்

தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெற இருந்த ஆரம்பக் கல்வி நிகழ்வுகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

தரம்-1 வாய்ப்பாட்டு மனனம் எதிர்வரும் நவம்பர் மாதம் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு மூன்று மத்திய நிலையங்களில் நடைபெறவுள்ளது என வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (3)

# யாழ். மாவட்டத்தில் 'பம்பாய்' வெங்காயம் நல்ல விளைச்சல் தருகிறது

**"தம்புள்ளை றெட்" இனத்தின் மூலம் ஒரு ஹெக்ரேயருக்கு 22 தொடக்கம் 25 வரையான மெற்றிக்தொன்னாக இருப்பதோடு அதனை 30 மெற்றிக்தொன்னாக அதிகரிக்கக் கூடிய சாத்தியம் உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.**

அச்சுவேலி, ஒக்.27

யாழ். மாவட்ட பம்பாய் வெங்காயச் செய்கையில் ''தம்புள்ளறெட்'' நல்ல விளைச்சலைக்கொடுத்து வருவதால் விவசாயிகள் பம்பாய் வெங்காயச் செய்கையில் ஆர்வம் கொண்டுள்ளனர்.

யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களம் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளது.

யாழ். மாவட்ட விவசாயிகள் கணிசமான அளவு பம்பாய் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டு வந்தனர்.

இதுவரை காலமும் யாழ். மாவட்டத்தில் பம்பாய் வெங்காயச் செய்கையாளர்கள் இந்தியாவை தளமாகக் கொண்ட ''ரம்பூர்றெட்'', ''ராசிர்றெட்'' இன விதைகளையே பயன்படுத்திவந்தனர்.

இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட பம்பாய் வெங்காய விதைகளின் நாற்றுகள் மூலம் பெறப்படும் விளைச்சலிலும் மிக அதிகரித்த விளைச்சலை "தம்புள்ள றெட்" விதை மூலம் யாழ். மாவட்டத்தில் பெறக்கூடியதாக உள்ளது.

யாழ். மாவட்டத்தில் கடந்த காலத்தில் பெறப்பட்ட அதி உச்ச விளைச்சல் ஒரு ஹெக்ரேயருக்கு 15 மெற்றிக்தொன்னாக இருந்தது. "தம்புள்ளை றெட்" இனத்தின் மூலம் ஒரு ஹெக்ரேயருக்கு 22 தொடக்கம் 25 வரையான மெற்றிக்தொன்னாக இருப்பதோடு அதனை 30 மெற்றிக்தொன்னாக அதிகரிக்கக்கூடிய சாத்தியம் உள்ளது என்று மேலும் கூறப்பட்டது.

கடந்த காலங்களில் பெரிய வெங்காயச் செய்கை நவாலி, தொல்புரம் உள்ளிட்ட வலிகாமம் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுவந்தது.

தற்பொழுது குடாநாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதற்கு விவசாயிகள் ஆர்வம் கொண்டுள்ளனர்.

தற்பொழுது பம்பாய் வெங்காயத்தில் இறக்குமதி வரி அதிகரிக்கப்பட்டதை அடுத்து விற்பனை விலை கிலோ 60 ரூபாவில் இருந்து 80 ரூபா வரையில் உள்ளது.

விலைத்தளம்பல் இல்லாத நிலையும் யாழ். மாவட்டத்தில் பம்பாய் வெங்காயத்தின் பாவனை வீதம் அதிகரித்திருப்பதும் பம்பாய் வெங்காயச் செய்கையில் விவசாயிகளை ஆர்வம் கொள்ளச் செய்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட பம்பாய் வெங்காயச் செய்கை தொடர்பாக மாவட்ட விவசாயத் திணைக்கள பாட விதான அபிவிருத்தி அதிகாரி இராமலிங்கம் சௌந்தரராசன் தகவல் தெரிவிக்கையில்:-

யாழ். மாவட்டத்தில் பம்பாய் வெங்காயச் செய்கை நெல் அறுவடையை அடுத்து வயல் வெளிகளில் மறு பயிராக செய்கை பண்ணப்படுகின்றது.

இந்தப் பருவத்தில் 45 ஹெக்ரேயர் வரையில் செய்கை பண்ணப்பட்டது. பெரும்போகத்தில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் 05 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இந்த அளவு எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்கும் எனத் தெரிவித்தார். (ம-11)

## ஆலோசனைக் குழுத் தெரிவுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.27

வலி. வடக்கு பிரதேச சபைக்கான புதிய ஆலோசனைக்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. எனவே ஆலோசனைக்குழுவில் உறுப்பினர் களாக உள்ளவர்கள், பிரதேச மற்றும் சமூக நலன் விரும்பிகள், சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகளையும் பங்குபற்றுமாறு பிரதேச சபைத் தலைவர் அறிவித்துள்ளார். (16)

## பூர்த்தியாகவுள்ள அஞ்சல் சேவை வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.27

ஒருங்கிணைந்த அஞ்சல் சேவை உத்தியோகத்தர்களுக்கான நேர்முகப் பரீட்சை மூலம் அஞ்சல் அதிபர்களுக்கான வெற்றிடங்கள் பூர்த்தியாக்கப் படவுள்ளன.

இந்த நேர்முகப் பரீட்சையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்கள் தோற்றியுள்ளனர்.

இலங்கை முழுவதும் ஆயிரத்து 80 அஞ்சல் அதிபர்களுக்கான வெற்றிடங்கள் உண்டு. வடமாகாணத்தில், யாழ். மாவட்டத்தில் 50 வெற்றிடங்களும், மன்னார் மாவட்டத்தில் 15 வெற்றிடங்களும், வவுனியா மாவட்டத்தில் 8 வெற்றிடங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 10 வெற்றிடங்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 11 வெற்றிடங்களும் உண்டு.

மேற்படி வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்காகவே நேர்முகப் பரீட்சை நடைபெற்றுள்ளது என வடமாகாண பிரதி அஞ்சல் மாஅதிபர் என். ரட்ணசிங்கம் தெரிவித்துள்ளார். (3-13)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஒக்.27

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ வித்தக விநாயகர், முடிமன்னர் வைரவர் ஆலய மஹாகும்பாபிஷேக பெருவிழா நேற்று ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாள்கள் நடைபெறவுள்ளது.

இன்று காலை 9 மணி முதல் 4மணிவரை எண்ணெய்க்காப்பு நிகழ்வும், நாளை ஞாயிற்றுக்கிழமை மஹாகும்பாபிஷேக நிகழ்வும் நடைபெறும்.

* * *

சுழிபுரம், ஒக்.27


வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் கௌரிக்காப்பு விரத வழிபாடு கடந்த புதன்கிழமை ஆரம்மாகியுள்ளது. தினமும் சிவலிங்கப் பெருமானுக்கு அபிஷேக பூசை வழிபாடுகள், தோத்திரப் பாடல்கள் இடம்பெற்று இருபத்தொராவது நாள் நிறைவு செய்து விரதம் இருந்தவர்களுக்கு கௌரிக்காப்பு அணிதல் இடம்பெறும்.(3-28)

* * *

அராலி மத்தி உலோலை சிட்டி பிள்ளையார் ஆலய கும்பாபிஷேகப் பெருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.45 மணிக்கு நடைபெறவுள்ளது. இன்று எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

மணிவிழா வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்

27.10.2012



திரு. வல்லிபுரம் கருணானந்தன்

பாணர் வாழ்ந்துயர்ந்த யாழ் மண்ணுதித்து
உற்றார் உறவு போற்ற உத்தமனாய்
கடமையில் கருத்தாக கருணையில்
கருணாவாக பெருமைகொள் வாழ்வு
கண்டு சிறப்புற்றீர்- நீவிர்
முப்பது ஆண்டு காலம் பணி செய்து
மணிவிழாக் காணும் மகத்தான இந்நாளில்
தேனினிய தமிழ்போல் தங்கள்
துணையுடன்
சீராய் சிறப்பாய் இந்நாளும் எந்நாளும்
வாழ மனதார வாழ்த்துகிறோம்
வாழ்க நீவிர் பல்லாண்டு!!

நண்பர்கள், வீதி அபிவிருத்தி அதிகார சபை,
யாழ்ப்பாணம்.

(24762)(5-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென்கோவை

## கற்பகப் பிள்ளையார் தேவஸ்தானம் மகா இராஜ கோபுர அடிக்கல் இடும் விஞ்ஞாபனம்

கற்பகன் மெய்யடியார்களே!

தென்கோவையில் எழுந்தருளியிருந்து வேண்டுவோர்க்கு வேண்டும் அருள் வழங்கும் எம்பெருமான் திருக்கோயிலில் திரிதள மகாராஜ கோபுரம் அமைப்பதற்கு எம்பெருமான் திருவருள் கைகூடியுள்ளது. இதற்கான அடிக்கல் இடும் வைபவம், மங்களகரமான நந்தன வருடம் ஐப்பசித் திங்கள் 12 ஆம் நாள் (28.10.2012) ஞாயிற்றுக்கிழமை ரேவதி நட்சத்திரமும் சதுர்த்தசித் திதியும் அமிர்த சித்த யோகமும் கூடிய காலை 9.45 மணி முதல் 10.45 மணி வரையுள்ள தனு லக்கின சுபவேளையில் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

''கோபுர தரிசனம் கோடி புண்ணியம்'' கோபுரத்துக்கு அடிக்கல் இடுவது அருந்தவப் பேறு. அப் பேற்றைப் பெறத் தாங்கள் ஆலயத்துக்கு வருகை தந்து இந் நிகழ்வில் கலந்து கொண்டு எம் பெருமான் திருவருளைப் பெற்றுய்வீர்களாக!

- திருப்பணிச் சபையினர்.

இருபாலை, கோப்பாய்,
www.irupalaikatpakapillaiyarkovil.blogspot.com

(24773) (2.6.7)

## பணியாளர் தேவை

சரவணா ரெக்ஸ் வியாபார நிலையத்துக்கு புடைவை வியாபாரத்தில் அனுபவம் உள்ள ஆண் பணியாளர்கள் உடன் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

**சரவணா ரெக்ஸ்**

770, கே.கே.எஸ். வீதி,
(தட்டாதெருச் சந்தி), யாழ்ப்பாணம்.

### பாரவூர்தி வாடகை சேவைக்கான கூறுவிலை கோரல் தொடர்பானது கரைச்சி தெற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து), கிளிநொச்சி

மேற்படி சங்கத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் கொக்கக்கோலா மென்பான விநியோக நடவடிக்கைக்காக பாரவூர்தி, கன்ரர் (709 ரக கூடாரம் பொருத்தப்பட்ட) வாகன உரிமையாளர்களிடமிருந்து கூறுவிலை கோரப்படுகின்றது. ஆகவே கீழ்க்குறிப்பிடப்படும் விவரப்படி சேவையிலீடுபடுவதற்கு விரும்புவோர் சாரதி, எரிபொருள் உள்ளடங்கலாக நாள் ஒன்றுக்கான கூலியினையும் மாதம் ஒன்றுக்கான கூலியினையும் தனித்தனியாக 01.11.2012 ஆம் திகதிக்கு முன் மேற்படி முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

01. மாங்குளம் களஞ்சியத்திலிருந்து பாண்டியன்குளம், துணுக்காய், ஓமந்தை, கரிப்பட்ட முறிப்பு, ஒலுமடு வரையான சகல பகுதிக்குமான வாகன சேவை.
02. கிளிநொச்சி களஞ்சியத்திலிருந்து உருத்திரபுரம் ஊடாக வலைப்பாடு, கிராஞ்சி, முழங்காவில், பூநகரி, ஜெயபுரம், அக்கராயன், ஸ்கந்தபுரம் வரையான சகல பகுதிகளுக்குமான வாகன சேவை.
03. கிளிநொச்சி களஞ்சியத்திலிருந்து கிளிநகரம், பளை, முகமாலை, செம்பியன்பற்று, கட்டைக்காடு, தாளையடி வரைக்குமான சகல பகுதிகளுக்குமான வாகன சேவை.
04. கிளிநொச்சி களஞ்சியத்திலிருந்து டிப்போ வீதி ஊடாக கோணாவில், முருகண்டி, திருவையாறு, வட்டக்கச்சி, பாரதிபுரம் வரையான சகல பகுதிகளுக்குமான சேவை.

**பொது முகாமையாளர்,**
கரைச்சி தெற்கு பல நோ.கூ.சங்கம்,
கிளிநொச்சி.

(இ/4334) (2-6-7)

கிளிநொச்சி நகரில்.. Little Aid CHARITY NR 1129695
பிரித்தானியாவைத் தளமாக கொண்டு இயங்கும் "லிட்டில் ஏய்ட்" நிறுவனம் கிளிநொச்சியில் நடாத்தும்
இலவச கணனிப்பயிற்சி கல்லூரி
● வயது வேறுபாடின்றி அனைவரும் பங்குபற்றலாம்
பிரிவு 01 - மாணவர்கள் மற்றும் இளைஞர் யுவதிகளுக்கானது
பிரிவு 02 - இலத்தரசிகள், விதவைகள், பாதிப்புற்றோருக்கானது
முற்றிலும் இலவச கணனி பயிற்சி நெறி / இலவச பாட புத்தகங்கள்
பிரித்தானியாவிலிருந்து பெறுமதி வாய்ந்த சான்றிதழ்கள்
முக்கிய குறிப்பு - வகுப்புக்கள் கிளிநொச்சி நகரில் மட்டுமே நடைபெறும்
விண்ணபதாரிகள் தங்கள் முழு விபரங்கள் அடங்கிய சுயவிபரக்கோவையை எதிர்வரும் 12.10.2012 க்கு முன்னர் கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பவும்
பணிநிலை வேண்டுகை - கணனி விரிவுரையாளர் (பெண்) (முழுநேரம்)
Ms Office பாடப்பரப்புக்களில் 2 வருடம் கற்பித்தல் அனுபவம் | முடிவுத்திகதி- 02.11.2012 சுயவிபரக்கோவையை அனுப்பவும்.
"லிட்டில் ஏய்ட்"
323, பலாலி வீதி, (பரமேஸ்வராச்சந்தி), யாழ்ப்பாணம்.
மேலதிக விபரங்களுக்கு - 0755062806
(சி/4328) (2.6.7)

### ஞாயிறும் வர்த்தக நிலையங்கள்

தென்மராட்சி, ஒக். 27

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்கள் தீபாவளி வியாபாரத்துக்காக நாளையும் நவம்பர் 4 ஞாயிற்றுக் கிழமையும் திறந்திருக்குமென வ.ஸ்ரீபிரகாஸ் அறிவித்துள்ளார்.

(ங-16-9)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

### செல்லையா நவரத்தினம் (பெரியம்பி)



முள்ளானை, இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா நவரத்தினம் 24.10.2012 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து-ஆச்சிமுத்து தம்பதிகள், காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் சுந்தரம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கனகம்மா மற்றும் பத்மாவதி ஆகியோரின் அன்புக் கணவரும், தவமலர் (ஜேர்மனி), தவராணி (இலங்கை), விக்னேஸ்வரன் (ஜேர்மனி), கணேச மூர்த்தி (கனடா), கணேஸ்வரன் (ஜேர்மனி), தர்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகேஸ் வரன் (வரதன்), ஜெயக்குமார்,நங்கினி,ரோகினி ஆகியோரின் அன்பு மாமனாரும்,நாகேஸ்வரி,செல்லம்மா, சீவரத்தினம், மகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான ராசரத்தினம், குணரத்தினம், ராஜதுரை ஆகியோரின் அன்புச் சகோதரனும், நிந்துயா-சுதன்,நிருயா, பிரசன்னா-ஆஞ்சலோ, பிரவீணா,பிரணவன், பிரியந்தன், கபிசன், திலீபன், அனுசா ஆகியோரின் பேரனும், இலக்கியாவின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை(28.10.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு டச்சுறோட், பெரியவிளான் என்னும் முகவரியில் நடைபெற்று,பூதவுடல் முள்ளானை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி,பிள்ளைகள், மருமக்கள்

டச்சு றோட், பெரியவிளான். (24771)(5-6-7)

### அச்சுவேலி பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (ம-து)

## மீதிகளை உறுதிப்படுத்துதல்

தற்போது சங்கத்தின் 2010/2011 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு நடைபெற்றுக்கொண்டிருப்பதால், தலைமை அலுவலகம் மற்றும் கிராமிய வங்கி வாடிக்கையாளர்கள் தங்கள் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன். எதிர்வரும் 02/11/2012, 03/11/2012 ஆகிய இரு நாள்களிலும் அலுவலக நேரத்தில் பாஸ் புத்தகத்துடன் வந்து உறுதிப்படுத்த முடியும்.

**- பொதுமுகாமையாளர்.**

## விற்பனைக்கு

லவ்போட்ஸ் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:- 0779757531

(20939) (2-7)

## தேவை

உடுவிலில் உள்ள மருத்துவ நிலையத்துக்கு பரிசோதனைக்காக இரத்தம் எடுப்பதில் அனுபவமுள்ள ஒருவர் தேவை.


தொடர்புகளுக்கு : 077 3715670

(24716)(6.7.8)

## மரண அறிவித்தல்

### மனுவேற்பிள்ளை பீற்றர்பெனடிக்ற்

(யாழ். கான்லூம் எம்போறியம்,
பளை உதயம்ஸ் ரெக்ரைல்ஸ் முன்னாள் உரிமையாளர்)



ஊர்காவற்றுறை, கரம்பொன்னைப் பிறப் பிடமாகவும், கைதடி, நாவற்குழியை வசிப் பிடமாகவும் தற்போது அரியாலையில் வசித்தவருமாகிய பீற்றர் பெனடிக்ற் கடந்த 24.10.2012 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றர்களான கரம்பொன் மனுவேற்பிள்ளை - றோசமுத்து தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான உரும்பிராய் கனகரத்தினம் - நாகம்மா தம்பதியரின் மருமகனும், தனலட்சுமியின் (ஓய்வுபெற்ற நெசவாசிரியர்) அன்புக் கணவரும், காலஞ் சென்ற இராஜசிங்கம் மற்றும் அல்போன்ஸ் அல்பிறட் (ஓய்வுபெற்ற அதிபர்), லில்லி பவுலின் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், லதா (இந்தியா), நளினி (முகாமைத்துவ உதவியாளர், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் வ.மா), தேவகுமார் (V.T. Carts, நீர்கொழும்பு), தேவானந்தன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், குகதாஸ் (இந்தியா), கிருபானந்தன் (ஆசிரியர், மு/அமதிபுரம் தமிழ் வி.), அனற் ஜென்ற்றா (நீர்கொழும்பு), சுமதி (கனடா) ஆகியோரின் மாமனும், கஸ்தூரி, மகிழ்ராஜ், மகிளினி, கீர்த்தனன், கிரிபரன், வனற்டனிலா, சேவோன் அபினாஸ் ஆகியோரின் பேரனும், ரெஜினா, காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ் சேவியர், பரமேஸ்வரி, அரியமணி, தனேஷ்வரி, புஸ்பராணி மற்றும் றஞ்சினி, நவமணி - செல்லையா, வள்ளியம்மை - பாலசுந்தரம், பரமாதிபதி ஆகியோரின் மைத்துனரும், றொமோல்ட், அன்ரன், லின்ரன் (கனடா) ஆகியோரின் மாமனும், சாந்தன், பிரபா (லண்டன்), பிரியா ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (28.10.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் யாழ். கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

240, A.V.றோட்,
அரியாலை.

தகவல்:
குடும்பத்தினர்.
தொ.பே. 021 3737 936, 077 5419 057

(24769) (45.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியப் பேரவையின் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக்.27

யாழ். இலக்கிய வட்டம் - இலங்கை இலக்கியப் பேரவையின்2010 -2011 ஆம் ஆண்டுகளின் சிறந்த இலக்கிய நூல்களுக்கான பரிசளிப்பு விழா எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன் அருட் சகோதரி ம.சயந்தி ஆகியோர் ஆசியுரையும் யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா வாழ்த்துரையும் யாழ்.இந்து மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி கணேஸ்வரி தனமூர்த்தி சிறப்புரையும் பரிசளிப்புத் தொடக்கவுரையை யாழ்.இலக்கிய வட்டத் தலைவர் கலாநிதி க.குணராசாவும் செங்கை ஆழியான் விருதுரையை யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கனும் விதந்துரையை ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகேஸும் நிகழ்த்துவார்கள். நிகழ்வுக்கு ஆஸ்க் மீடியா பணிப்பாளர் எஸ்.குகநாதன் தலைமைவகிப்பார்.

பேரவை செயலாளர் சி.சிவதாசன் வரவேற்புரை நிகழ்த்துவார்.

இலங்கை இலக்கியப் பேரவையின்2010 ஆம் ஆண்டு 2011 ஆம் ஆண்டுகளுக்கான சிறந்த நூல்களாக பல்வேறு துறைசார்ந்த 24 நூல்களுக்குப் பரிசில்களும் 18 நூல்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

யாழ். இலக்கிய வட்டம் வழங்கும் மூதறிஞர் கவிஞர் ஐயாத்துரை ஞாபகார்த்த சிறந்த கவிதை நூலுக்கான விருது முல்லைத்தீவைச் சேர்ந்த சி.நிதுன் பெறுகின்றார். விழாவில் முதுநிலை ஊடகவியலாளரும் உதயன் ஆசிரிய பீடத்தில் பணிபுரிபவருமான எஸ். பெருமாள் இலக்கிய பேரவையினால் கௌரவிக்கப்படவிருக்கின்றார். (ப-7)

# இலங்கை படையுடன் இணைந்து பயிற்சிகள்

## இருதரப்பு செயற்பாட்டை வலுப்படுத்தும் என்கிறார் அமெரிக்கத் தூதர்

திருகோணமலை,ஒக்.27

இலங்கை கரையோர காவற்படையினருடன் இணைந்து பயிற்சிகளை நடத்துவது வரவேற்கத் தக்கது என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் மிசேல் ஜே சிசன் தெரிவித்தார்.

திருகோணமலையில் இடம்பெற்ற ஏற்றுமதிக் கட்டுப்பாடு மற்றும் எல்லைப்பாதுகாப்பு தொடர்பான நிகழ்ச்சித் திட்டத்தின் இறுதி நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த முன்முயற்சியானது கடற்பாதுகாப்பை முன்னேற்றுகின்ற இருதரப்பு செயற்பாடுகளை வலுப்படுத்தும் வகையில் விருத்தி செய்யப்பட்டது.

நான்கு அமெரிக்க இராணுவ பயிற்றுவிப்பாளர்களும் இலங்கையைச் சேர்ந்த 14 கரையோரப் பாதுகாப்பு படை அதிகாரிகளும் 10 தேர்ந்தெடுக்கப்பட்ட பயிலுநர்களும் இதில் பங்கேற்றிருந்தனர்.

இந்த நிகழ்ச்சித்திட்டமானது ஏனைய நாடுகள் தமது ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு முறைமைகளை மேம்



படுத்திக் கொள்ள உதவுவதை நோக்காகக் கொண்டு அமெரிக்க அரசால் முன்னெடுக்கப்படுகின்ற பிரதான முன்முயற்சியாகும்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம், உள்நாட்டுப் பாதுகாப்பு, வர்த்தகம், சக்தி வளம் மற்றும் பாதுகாப்பு திணைக்களம் ஆகியவற்றிலிருந்து பெறப்படும் நிபுணத்துவத்தின் மூலமாக உலகெங்குமுள்ள நாடுகளுக்கு சட்டம், மற்றும் உபகரணங்களை இந்தத் திட்டம் வழங்குகின்றது.

இந்தப் பயிற்சிச் செயற்பாடுகள் கடந்த ஒக்ரோபர் ஆரம்பமாகியதுடன், இலங்கையில் கரையோர காவல் படையினருக்காக நடத்தப்பட்ட முதலாவது அலுவலர் பாடநெறியாகவும் அமைந்தது.- என்றார். (ச)

# லண்டன் நாடாளுமன்றில் ஈழத்தமிழர்கள் குறித்த விவாதத்தில் திருமாவளவன் பேச்சு

ஈழத் தமிழர்கள் குறித்து லண்டன் நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ள விவாதத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் உரையாற்றவுள்ளார்.

இது குறித்து ராசிபுரத்தில் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:-

அடுத்த மாதம் 5 ஆம் திகதி தொடக்கம் 9 ஆம் திகதி வரை லண்டன் நாடாளுமன்றத்தில் ஈழத் தமிழர்களுக்காக சமத்துவம், சம உரிமை குறித்து விவாதம் நடைபெறவுள்ளது. இதில் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மேற்படி உறுப்பினர் அல்லாதவர்களும் நானும் கலந்து கொள்கிறோம்.

நாடாளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத் தொடரில் கூடங்குளம் அணு உலை, இலங்கை தமிழர் பிரச்சினை போன்றவைகள் குறித்து விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் பேசுவேன்- என்றார். (வ)



வடமராட்சிப் பிரதேச செயலகம் நடத்திய சர்வதேச முதியோர், சிறுவர், மாற்றுவலுவுடையோர் தின நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் மற்றும் விருந்தினர்கள் அழைத்து வரப்படுகின்றனர். (வ-17)

# பஸ்ஸின் சில்லுக்குள் மாணவி சிக்கி சாவு

கொழும்பு,ஒக்.27

கட்டுகஸ்தோட்டை, இனிகல வித்தியாலயத்துக்கு தனியார் பஸ் ஒன்றில் வந்த மாணவி அந்த பஸ்ஸின் சில்லுக்குள் நசுங்குண்டு உயிரிழந்துள்ளார்.

16 வயதுடைய பாடசாலை மாணவியே நேற்று வியாழக்கிழமை காலை இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மாணவி பஸ்ஸில் இருந்து இறங்கி முன்னோக்கிச் சென்ற வேளை இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தை அடுத்து பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

மாணவியின் சடலம் கட்டுகஸ்தோட்டை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து இடம்பெற்றதையடுத்து கோபமடைந்த அயலவர்கள் பஸ்ஸுக்குச் சேதம் ஏற்படுத்தியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# பொலிஸ் நடமாடும் சேவை

யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தின் ஜே-78 அத்தியடி கிராம சேவகர் பிரிவினால் நடத்தப்படும் பொலிஸ் நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

இன்று காலை 9 மணி முதல் 1 மணி வரை ஜோன் பொஸ்கோ பாடசாலையில் இந்த நடமாடும் சேவை நடைபெறவுள்ளது என ஜே-78 சிவில் பாதுகாப்பு அமைப்பினர் தெரிவித்துள்ளனர். (3)

# இடமாற்றப் பட்டியல் வெளியாகின

தென்மராட்சி,ஒக்.27

நீதிமன்ற எழுதுநர்கள், சுருக்கெழுத்தாளர்கள் ஆகியோருக்கான வருடாந்த இடமாற்றப் பட்டியல் வெளியாகியுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள நீதிமன்றங்களிலிருந்து பெரும் எண்ணிக்கையான உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரினால் இந்தப் பட்டியல் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (3-9)

# கனவு பலித்திட வேண்டும்

பாசம் வைத்த நெஞ்சமது
பரிதவித்து துடிக்குதையா
துப்பாக்கி தூக்கியவன் கூட
இன்று துணிந்து நடமாடுகின்றான்
துணை போன உங்களுக்கோ
சந்தேகத்தின் பேரில் தடுப்புக்காவல்
போர் ஓய்ந்த பின்பும்- ஏன்
இந்த அவலம்
ஆண்டு ஐந்து ஆனதையா
ஆனாலும் ஒரு சேதி இல்லை
அன்று முதல் இன்றுவரை
நானும் முறையிடாத இடமும் இல்லை
கடவுளிடமும் முறையிட்டேன்
கண்டபலன் ஏதுமில்லை
கண்ணீரோடு தூங்கும் வேளை
கனவினிலே உன் வரவு
கனமான என் இதயத்தை
காற்றாக மாற்றுதையா
உன் வரவை தினம் பார்த்து
என் கண்கள் பூத்திருக்கும்
உன் நினைவு தினம் சுமந்து
என் இதயம் கனக்குதையா?
என் கனவு பலித்திட வேண்டும்
உன் வரவு மெய்ப்பட வேண்டும்.

5 வருடங்களாக காணாமற் போயுள்ள கணவனின் பிறந்த நாளான இன்று மனைவி மு.சிவநிதியின் உணர்வின் வரிகள்

# வயோதிப நோயாளருக்கு சிகிச்சை விரைவில் பயிற்சித் திட்டம்

கொழும்பு,ஒக்.27

வயோதிப நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பது தொடர்பாக பயிற்சித் திட்டம் ஒன்றை சுகாதார அமைச்சு மேற்கொள்ள தீர்மானித்துள்ளது.

இலங்கையின் தற்போதைய சனத்தொகையில் 8 - 10 வீதமானவர்கள் வயோதிபர்கள். 2025ஆம் ஆண்டளவில் இந்த வீதம் 22 ஆக உயர்வடையும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தெற்காசியாவிலேயே அதிக முதியவர்களைக் கொண்டுள்ள நாடு இலங்கை ஆகும்.

நாட்டில் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ள சிறந்த மருத்துவ வசதிகள் இதற்கான காரணம் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதிகரித்து வரும் முதியவர் சனத்தொகைக்கு ஏற்ப அவர்களுக்கான விசேட சுகாதார சேவைகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. இதற்கமைய முதியவர்களுக்காக தனிப்பட்ட வைத்தியசாலைகளை அமைப்பதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. (ச)

# நல்லூர் பிரதேச சபைப் பகுதியில் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக சபையின் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மேற்படி பிரதேசத்தில் டெங்கு நோய் இனங்காணப்பட்ட பகுதிகளுக்கு புகை அடித்து நுளம்புகளைக் கட்டுப்படுத்தும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

சுகாதாரப் பகுதியினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் மேற்படி டெங்கு ஒழிப்பு செயற்திட்டத்துக்கான உதவியை எமது சபை வழங்கி வருகின்றது. அதனைவிட சபைக்கு உட்பட்ட பகுதியில் தேங்கிக் காணப்படும் குப்பைகள் மற்றும் கழிவுப் பொருள்கள் என்பனவும் தற்போது வாகனங்கள் மூலம் அகற்றப்பட்டு வருகின்றன.

மக்கள் குடியிருப்புப் பகுதிகள் மற்றும் பொது இடங்களில் சேகரிக்கப்படும் கழிவுப் பொருள்கள் இதற்கென ஏற்பாடு செய்யப்பட்ட வாகனங்கள் மூலம் அகற்றப்படுகின்றன.

கழிவுப் பொருள்களை அகற்றும் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படவுள்ளதால் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்-என்றார். (வ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சண்டிலிப்பாய் கோட்ட உதைபந்து ஆட்டங்கள் சிலவற்றின் முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.27

சண்டிலிப்பாய் கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 14 வயதுப் பிரிவு, 16 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான குழு நிலைப் போட்டிகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.

14 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான போட்டியில் புனித ஹென்றியரசர் கல்லூரியும் பண்டத்தரிப்பு ஜசிந்தா றோமன் தமிழ் கலவன் பாடசாலையும் மோதிக் கொண்டன. இந்த ஆட்டத்தில் புனித ஹென்றியரசர் கல்லூரி அணி 8:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

மாதகல் சென்.ஜோசப் மகாவித்தியாலய அணியை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதிக்கொண்ட ஆட்டத்தில் சென்.ஜோசப் மகாவித்தியாலய அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணிக்கும், பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி அணிக்கும் இடையில் இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

16 வயது அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணியை எதிர்த்து சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலய அணி மோதிக் கொண்டன. இதில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

இன்னொரு ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து மாதகல் சென்.ஜோசப் அணி மோதிக் கொண்டது. ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் தலா ஒரு கோல்களைப் பெற்றதினால் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

எனவே ஆட்டத்தின் வெற்றி, தோல்வி சமநிலை தவிர்ப்பு உதைகள் மூலம் தீர்மானிக்கப்பட்டது. இதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 4:3 என்ற கோல் அடிப்படையில் வெற்றியீட்டியது. (ங-23)

## இன்றைய ஆட்டம்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஆதிசக்தி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு -

பி.ப 3.30 மணி

மணற்காடு சென்.அன்ரனிஸ் வி.க எதிர் பொலிகை பாரதி வி.க.

## ஹஜ் பண்டிகையை முன்னிட்டு வவுனியாவில் நாளை போட்டிகள்

வவுனியா பட்டாணிச்சூர் 786 விளையாட்டுக்கழகம் ஹஜ் பண்டிகையை முன்னிட்டு நடத்தும் ஆண்களுக்கான மரதனோட்டம், சைக்கிள் ஓட்டம் மற்றும் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் என்பன நாளை ஞாயிற்றுக்கிழமை பட்டாணிச்சூர் அசோக் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

நாளை காலை 6 மணிக்கு ஆண்களுக்கான 60 கிலோமீற்றர் மரதன் ஓட்டமும் காலை 7 மணிக்கு ஆண்களுக்கான 12 கிலோமீற்றர் சைக்கிள் ஓட்டப் போட்டியும் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து வவுனியா பட்டாணிச்சூர் 786 விளையாட்டுக் கழகத்தின் தலைவர் பி.எஸ்.அப்துல்லா தலைமையில் அசோக் விளையாட்டுக் கழக மைதானத்தில் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் இடம்பெறவுள்ளன. (ங-23)

## விபுலானந்தன் ஞாபகார்த்த கூடைப்பந்தில் கொக்குவில் இந்து, உடுவில் மகளிர் வெற்றி

யாழ்ப்பாணம்,ஒக்.27

யாழ். மத்திய கல்லூரி மாணவர் முதல்வர் சபை, முன்னாள் மாணவ முதல்வன் அமரர் பொன். விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக பாடசாலைகளுக்கிடையே நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று வெள்ளிக்கிழமை யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம் பெற்ற ஆட்டங்களில் ஆண்கள் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் பெண்கள் பிரிவில் உடுவில் மகளிர் கல்லூரியும் வெற்றி பெற்றுள்ளன.

ஆண்களுக்கான ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை அணி மோதிக்கொண்டது. இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 49:14 என்ற புள்ளிகள் அடிப்படையில் இலகுவாக வெற்றி பெற்றது.

பெண்களுக்கான ஆட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணி மோதிக்கொண்டது. இதில் உடுவில் மகளிர் கல்லூரி அணி 44:35 என்ற புள்ளிகள் அடிப்படையில் யாழ். இந்து மகளிரை வீழ்த்தி வெற்றி வாகைசூடியது. (ங-23)

## புனிதர்களின் போர் பற்றிக்ஸ் ஆதிக்கம்



யாழ்ப்பாணம்,ஒக்.27

புனிதர்களின் போர் என வர்ணிக்கப்படும் சென்.ஹென்றிஸ் கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி என்பவற்றுக்கு இடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டிகள் நேற்று வெள்ளிக்கிழமை சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.

இதில் 14 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் இரு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

16 வயதுப்பிரிவினருக்கான ஆட்டத்தில் இரு அணியினரும் தலா ஒரு கோல்களைப் பெற்றனர். எனவே இந்த ஆட்டமும் சமநிலையில் முடிவடைந்தது.

18 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

18 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் சென்.ஹென்றிஸை தோற்கடித்தது. (ங-23)

## தெல்லிப்பழை கோட்டமட்ட உதைபந்தாட்ட முடிவுகள் சில

யாழ்ப்பாணம்,ஒக்.27

தெல்லிப்பழை கல்வி கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 14 வயது, 16 வயது ஆகிய பிரிவு அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் குழு நிலை ஆட்டங்கள் சிலவற்றின் முடிவுகள் வருமாறு-


மல்லாகம் மகாவித்தியாலய அணிக்கும் வயவிளான் மத்திய மகாவித்தியாலய அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் வயவிளான் மத்திய மகா வித்தியாலய அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

யூனியன் கல்லூரிக்கும், காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரிக்கும் இடையிலான ஆட்டத்தில் யூனியன் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

16 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் வயவிளான் மகாவித்தியாலய அணிக்கும் மகாஜனக் கல்லூரி அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரு அணிகளும் எதுவித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. எனவே சமநிலை தவிர்ப்பு உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் வயவிளான் மகாவித்தியாய அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

மல்லாகம் மகாவித்தியாலய அணிக்கும் கட்டுவன் புலம் மகாவித்தியாலய அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் மல்லாகம் மகாவித்தியாலய அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டிது. (ங-23)

## கரம் போட்டி இன்று ஆரம்பம்



யாழ்ப்பாணம்,ஒக்.27

யாழ்.மாவட்டக் கரம் சங்கம் நடத்தும் திறந்த பிரிவினருக்கான கரம் சுற்றுப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மத்தியகல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் ஆரம்பமாகவுள்ளது.

எனவே போட்டியாளர்களை நேரகாலத்துடன் போட்டி நடைபெறுமிடத்துக்கு சமுகம் தருமாறு யாழ்.மாவட்ட கரம் சங்க செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (ங-23)

## யாழ். கோட்ட உதைபந்தில் இறுதிக்குள் சென். ஜேம்ஸ்

யாழ்ப்பாணம்,ஒக்.27

யாழ். கோட்ட மட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 16 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான அரையிறுதியாட்டத்தில் குருநகர் சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

சென்.ஜோன்ஸ் கல்லூரியில் இடம்பெற்ற இந்த அரையிறுதியாட்டத்தில் குருநகர் சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி மோதிக் கொண்டது.

ஆட்ட நேர முடிவில் இரு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாததினால்ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

எனவே ஆட்டத்தின் வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் குருநகர் சென். ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை அணி 4:2 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றியீட்டி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ங-23)

## சிநேகபூர்வ உதைபந்தாட்டத்தில் சென்.ஜோன்ஸ் அபாரம்



யாழ்ப்பாணம்,ஒக்.27

சென்.ஜோன்ஸ் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவற்றின் 14 வயதுப் பிரிவு, 16 வயதுப் பிரிவு, 18 வயதுப் பிரிவு , 21 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டி நேற்று வெள்ளிக்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் 14 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

16 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் யாழ்ப்பாணக் கல்லூரியைத் தோற்கடித்தது.

18 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் இரு அணியினரும் எந்தவொரு கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

21 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வாகைசூடியது (ங-23)

## மத்தியகல்லூரி- மானிப்பாய் இந்து பரபரப்பான சிநேகபூர்வ உதைபந்து

யாழ்ப்பாணம்,ஒக்.27

16 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் மானிப்பாய் இந்துவை வீழ்த்தியது

யாழ்.மத்திய கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் 14 வயதுப் பிரிவு, 16 வயதுப் பிரிவு, 18 வயதுப் பிரிவு,21 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டி நேற்று வெள்ளிக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் 14 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

16 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் மானிப்பாய் இந்துவை வீழ்த்தியது.

18 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் மத்திய கல்லூரியை தோற்கடித்தது.

21 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. (ங-23)

## அசத்தியது றோயல்


பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது.

ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணிக்கும் வல்வை விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி கோல் மழை பொழிந்தது. இறுதியில் அந்த அணி 5:0 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெல்லி அணியும் 'அவுட்' இறுதிக்குள் லயன்ஸ்






தென்னாபிரிக்காவில் நடைபெற்றுவரும் சம்பியன்ஸ் லீக் '20/20' தொடரின் இறுதிப் போட்டிக்கு தென்னாபிரிக்க உள்ளூர் அணியான ஹைவெல்ட் லயன்ஸ் தகுதிபெற்றுள்ளது.

டெல்லி டேர்டெவில்ஸ் அணிக்கும், ஹைவெல்ட் லயன்ஸ் அணிக்குமிடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அரையிறுதிப் போட்டியில் வெற்றிபெற்றதையடுத்தே ஹைவெல்ட் லயன்ஸ் அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

கிங்ஸ்மீட், டேர்பனில் இடம்பெற்ற இந்த அரையிறுதிப் போட்டியில் டெல்லி அணி அதன் தலைவர் மஹேல ஜெயவர்த்தன இல்லாத நிலையிலேயே களமிறங்கியது. அந்த அணியின் தலைமைப் பொறுப்பை பீற்றர்சன் ஏற்றிருந்தார். நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற டெல்லி டேர்டெவில்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய லயன்ஸ் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 139 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

முதலாவது இலக்கை 34 ஓட்டங்களுக்கு இழந்த அந்த அணி, ஒரு கட்டத்தில் 10.4 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 63 ஓட்டங்களையே பெற்று மந்தமான துடுப்பாட்டத்தையே வெளிப்படுத்தியிருந்தது.

எனினும் நீல் மெக்கன்ஸி, குலாம் போட் இருவரும் 59 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியைத் திடப்படுத்தினர்.

துடுப்பாட்டத்தில் ஹைவெல்ட் லயன்ஸ் அணி சார்பாக குலாம் போட் 49 பந்துகளில் 50 ஓட்டங்களையும், நீல் மெக்கன்ஸி 28 பந்துகளில் 46 ஓட்டங்களையும், அல்விரோ பீற்றர்சன் 19 பந்துகளில் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் டெல்லி டேர்டெவில்ஸ் அணி சார்பாக உமேஷ் யாதவ் 4 பந்துப் பரிமாற்றங்களில் 20 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் அஜித் அகர்கர், மோர்னி மோர்கல், பவான் நெகி ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கினையும் கைப்பற்றினர்.

140 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய டெல்லி டேர்டெவில்ஸ் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 117 ஓட்டங்களைப் பெற்று 22 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

முதலாவது பந்துப் பரிமாற்றத்திலேயே அதிரடி வீரர் வீரேந்தர் சேவாக்கை இழந்த அந்தஅணி, அதன் பின்னர் 35 ஓட்டங்களை இரண்டாவது இலக்குக்காகவும், 26 ஓட்டங்களை மூன்றாவது இலக்குக்காகவும் பகிர்ந்த போதிலும், அதன் பின்னர் இலக்குகளைத் தொடர்ச்சியாக இழந்ததோடு, ஓட்டங்களையும் வேகமாகப் பெறத் தவறியிருந்தது.

துடுப்பாட்டத்தில் டெல்லி டேர்டெவில்ஸ் அணி சார்பாக கெவின் பீற்றர்சன் 44 பந்துகளில் 50 ஓட்டங்களையும், டேவிட் வோர்ணர் 21 ஓட்டங்களையும், மோர்னி மோர்கல் 16 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 18 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஏனைய எல்லா வீரர்களும் ஒற்றை இலக்க ஓட்டங்களுக்குள்ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் ஹைவெல்ட் லயன்ஸ் அணி சார்பாக கிறிஸ் மொறிஸ் 4 பந்துப் பரிமாற்றங்களில் 7 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் ஆரோன் ஃபங்கிசோ 4 பந்துப் பரிமாற்றங்களில் 18 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் டேர்க் நனீஸ் 4 பந்துப் பரிமாற்றங்களில்34 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் சொஹைல் தன்வீர், ஜீன் சைம்ஸ், டுவைன் பிறீரோறியஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கினையும் கைப்பற்றினர்.

ஆட்ட நாயகனாக ஹைவெல்ட் லயன்ஸ் அணியின் நீல் மெக்கன்ஸி தெரிவானார். (ங)

## புறப்பட்டது இங்கிலாந்து

இந்திய அணிக்கெதிராக 4 டெஸ்ட் போட்டிகள், இரண்டு 20/20 போட்டிகள் மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட நீண்ட தொடரில் பங்கேற்பதற்காக இங்கிலாந்து அணி நேற்று இந்தியாவுக்குப் பயணமானது.

இந்தத்தொடரில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளுக்கான இங்கிலாந்து அணிக்கு அலஸ்டயர் குக்கும், 20/20 போட்டிகளுக்கு ஸ்ருவட் புரோட்டும் தலைமை தாங்கவுள்ளனர்.

சக வீரர்களுடனான சர்ச்சை காரணமாக கடந்த சில தொடர்களுக்கான இங்கிலாந்து அணியில் சேர்க்கப்படாமல், புறக்கணிக்கப்பட்டு வந்த அந்த அணியின் முன்னாள் தலைவரும் சகலதுறை வீரருமான கெவின் பீற்றர்சன், இந்திய தொடருக்கான இங்கிலாந்து அணியில் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்திய- இங்கிலாந்து அணிகளுக்கிடையேயான முதல் டெஸ்ட் போட்டி நவம்பர் 15ஆம் திகதி அகமதாபாத்தில் தொடங்க உள்ளது. அதற்கு முன்னர் 30ஆம் திகதி 4 நாள் பயிற்சி ஆட்டத்தில் இங்கிலாந்து அணி, இந்தியா 'ஏ' அணியுடன் மோதவுள்ளது.

1985ஆம் ஆண்டுக்குப் பின்பு இங்கிலாந்து அணி இந்திய மண்ணில் ஒரே ஒரு டெஸ்ட் போட்டியில் மட்டுமே வெற்றி பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. (ங)





## மோதி வெல்லுங்கள் மோசடி வேண்டாம்

இந்தியாவில் 4 டெஸ்ட் கொண்ட தொடரில் விளையாட உள்ள இங்கிலாந்து கிரிக்கெட் அணி அதற்கு முன்பாக இந்திய 'ஏ ' அணிக்கெதிராக மூன்று நாள் பயிற்சி ஆட்டத்தில் மோதுகிறது.

இந்த ஆட்டம் மும்பையில் இந்தமாதம் 30ஆம் திகதி தொடங்குகிறது. இங்கிலாந்து பதினொருவர் அணியை எதிர்த்து மோதும் இந்திய 'ஏ' அணிக்கு சுரேஷ் ரெய்னா அணித்தலைவராக நியமிக்கப்பட்டு உள்ளார். ஆனால் இந்திய 'ஏ' அணியில் ஒரு சுழற்பந்து வீச்சாளர் கூட சேர்க்கப்படவில்லை. "இது இந்தியாவின் அழுகுனியாட்டமே. இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர்கள் சுழற்பந்து வீச்சை எதிர்கொள்வதில் பலவீனமானவர்கள்.எனவே அவர்கள் இந்தியச் சூழலுக்கு ஏற்ப சுழற்பந்தை எதிர்கொண்டு அனுபவத்தைப் பெற்றுவிடக் கூடாது என்பதற்காகவே இவ்வாறு திட்டமிட்டு இந்திய அணி செயற்பட்டுள்ளது. வெற்றியை நேரடியாக மோதிப் பெற்றுக்கொள்ளுங்கள். இப்படி சிறுபிள்ளைத் தனமான செயல்கள் மூலம் குறுக்குவழியில் இங்கிலாந்தை வீழ்த்த நினைக்காதீர்கள்" இவ்வாறு இந்திய அணிக்கு சாட்டையடி கொடுத்துள்ளார் இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் மைக்கல் வோகன்.

"இது ஒரு பரிதாபமான யுக்தி. இது போன்ற யுக்திகள் உண்மையான விளையாட்டு உத்வேகத்துக்கு எதிரானவை. சுழற்பந்து வீச்சுக்கு ஒத்துழைக்கும் ஆடுகளத்தை தயார் செய்யும் போது, அதற்கு ஏற்ற வீரர்களையும் தெரிவு செய்வதே விளையாட்டு உணர்வுக்கு ஏற்றது. அதைவிடுத்து குறுக்குவழியில் வெற்றியைப் பறிப்பதற்காக மேற்கொள்ளப்படும் இதுபோன்ற யுக்திகள் கிரிக்கெட்டுக்கு [illegible] உள்ளூர்ச் சூழலை சாதகமாக எடுத்துக் கொள்வதில் இது புதிய அணுகுமுறையாக இருக்கிறது. இந்தியாவைப் போன்று ஏனைய அணிகளும் இதுபோன்ற அழுகுணி ஆட்டங்களை வரும் காலங்களில் பின்பற்றும் ஆபத்து உள்ளது" எனவும் அவர் கூறியுள்ளார்.(ங)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாய்னா சாதிப்பாரா?

பிரெஞ்ச் பகிரங்க பட்மின்ரன் தொடரில் இந்தியாவின் நட்சத்திர வீராங்கனை சாய்னா நெஹ்வால், காலிறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

பிரான்ஸ் தலைநகர் பரிஸில் பிரெஞ்ச் பகிரங்க பட்மின்ரன் தொடர் நடைபெற்று வருகிறது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது சுற்று ஆட்டத்தில் சாய்னா, தாய்லாந்தின் சாப்சிரீ டேரட்டன்சாயை எதிர்கொண்டார். இந்தப்போட்டியில் அபாரமாக ஆடிய சாய்னா 21-16, 21-13 என்ற நேர் செற்களில் சாப்சிரீயை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார்.

சாய்னா காலிறுதி ஆட்டத்தில் மற்றொரு தாய்லாந்து வீராங்கனையான ரட்சனாக் இன்டனானை எதிர்கொள்ளவுள்ளார்.

இதேவேளை, சர்வதேச பட்மின்ரன் கழகம் வெளியிட்ட தரவரிசையின்படி, இதுவரை 4வது இடத்திலிருந்த சாய்னா தற்போது 3வது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

லண்டன் ஒலிம்பிக்கில் வெண்கலப்பதக்கம் வென்ற சாய்னா, கடந்த வாரம் டென்மார்க் பகிரங்க பட்மின்ரன் பட்டத்தைக் கைப்பற்றியிருந்தார். அதே வேகத்தில் அவர் பிரெஞ்ச் பகிரங்க பட்மின்ரன் பட்டத்தையும் வெல்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ங)


உடன் விற்பனைக்கு

88 sri -xxxx Road master- 200 உடன் விற்பனைக்கு

(Price Negotiable)

Rs 295000/=

தொடர்பு: 0772378736, 0771913930

(34785)(3.14)



கணினி மலிவு விற்பனை

Intel 3.2 GHZ D/ Core, Full System

160GB Hard Disk, 2GB DDR 3 Ram, 19" LED Monitor, DVD writter

Free: WebCam/ 8GB Pen/Cover/ Head Phone

3 வருட உத்தரவாதம்

41,500/= மட்டுமே.

St.Antony's.com

187,K.K.S. Road Jaffna.

0212221417 / 0750698608

(அன்னைநாகா பூட்சிற்றி அருகில்)

(சி/4144)(3.14)



## புத்தக விற்பனையாளர் தேவை

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்குச் சென்று, அதிபர்கள், ஆசிரியர்களைச் சந்தித்து, காந்தளகம் யாழ்ப்பாணம் வெளியிட்ட

1. பள்ளி மாணவர்களுக்கான நிலவரை - இலங்கை,
2. பள்ளி மாணவர்களுக்கான நிலவரை - உலகம்,
3. உலகெங்கும் தமிழர்,
4. பொன் முத்துக்குமாரன் இயற்றிய தமிழ் மரபு.

ஆகிய நூல்களையும் பிற நூல்களையும் மாணவர்களுக்கு விற்பனை செய்வதில் ஆர்வமுள்ள, மின்னஞ்சலில் தொடர்பாக இருக்கும் திறமையுள்ளோர் தங்களது வாழ்க்கைக் குறிப்புடன்

தொடர்புகொள்க: tamilnool@gmail.com

அல்லது 0094772754864

தகுதிக்கேற்ற சம்பளமும் விற்பனைத் தொகையில் கழிவும்.

(உ1657)(2)



## மாபெரும் இரசாயனவியல் கருத்தரங்கு

By:- அன்பு

புதிய பாடத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட விடயங்களை உள்ளடக்கியது.

ஆரம்பம்:- 29.10.2012 திங்கள் மு.ப 11 மணி

25 இற்கு மேற்பட்ட விடயத் தலைப்புக்களில் விடுமுறை நாள்களில் இடம் பெறும்.

ORGANIC

ஆரம்பம்: 29.10.2012 திங்கள் 3.00 pm

(Mon - 3.00 pm, Wed- 5.00pm)

NEW SCIENCE CENTRE

வெலிங்டன் சந்தி அருகில், யாழ். நகர்

(24781)(3.14)



## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் கிளைகளைக் கொண்டியங்கும் பிரபல நிறுவனத்துக்கு பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்கள் உண்டு.

01. விரிவுரையாளர்கள்

Lecturers (male/female)- English medium

02. அலுவலக சுத்திகரிப்பாளர்/ உதவியாளர்

தொடர்புகளுக்கு:

British College Of Higher Studies

N0 15, Sirampiyady Lane,
Off Stanley Road
Jaffna.
021 222 4550,
077 773 0074

No.3,6th Lane,
Vairavar Kovil Vcethy,
Vairavapuliyamkulam,
Vavuniya.
024 324 5287,
077 7585 913




## நடாலுக்கு இறங்குமுகம்

பிரான்ஸில் நடைபெறவுள்ள பரிஸ் மாஸ்ரர்ஸ் ரென்னிஸ் தொடரில் இருந்து தான் விலகிவிட்டதாக பிரபல ரென்னிஸ் வீரர் ரபேல் நடால் அறிவித்துள்ளார்.

உலகின் 4ம் நிலை ரென்னிஸ் வீரரான ஸ்பெயினின் ரபெல் நடால், இடது கால் முட்டி காயம் காரணமாக விம்பிள்டன் ரென்னிஸ் போட்டிக்கு பின்பு இதுவரை களமிறங்கவில்லை.

இந்த நிலையில் காயத்தில் இருந்து இன்னும் மீளாததால், அடுத்த வாரம் தொடங்கும் பரிஸ் மாஸ்ரர்ஸ் ரென்னிஸ் மற்றும், லண்டனில் நடைபெறும் முதன் நிலையான 8 வீரர்கள் மட்டுமே பங்கேற்கும் போட்டியில் இருந்தும் விலகுவதாக நடால் அறிவித்துள்ளார்.

உலகின் முதல் நிலை வீரராகவும் களிமண் ராஜாவாகவும் வலம் வந்த ரபேல் நடால் காயம் காரணமாக அண்மைக் காலமாக தொடர்ச்சியாக தோல்விகளைச் சந்தித்து வந்தார். தற்போது காயத்தால் அவர் போட்டிகளில் இருந்து விலகியுள்ளதால் தரவரிசையில் இருந்து இன்னும் கீழ் இறங்கக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. (ங)


## வீடு / கட்டடம் குத்தகைக்குத் தேவை

கொழும்பைத் தலைமையகமாகக் கொண்ட கணினிப் பயிற்சி நிறுவன யாழ். மாவட்ட கிளையின் செயற்பாடுகளை விஸ்தரிப்பதற்காக வீடு அல்லது கட்டடம் ஒன்று தேவை.

ஆகக்குறைந்தது 1500 சதுர அடி பரப்பளவும், வாகனத்தரிப்பிட வசதியும் எதிர்பார்க்கப்படுகின்றது. நீண்ட கால குத்தகைக்கு முன்னுரிமை தரப்படும்.

வாடகை, முற்பணம் மற்றும் விபரங்களுடன் எமது இணைப்பாளரைத் தொடர்புகொள்ளுங்கள் : usaidcs@gmail.com அல்லது.

விளம்பரதாரர் இல : 4412
மே / பா "உதயன்",
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்



## மரண அறிவித்தல்

### கந்தப்பிள்ளை இரத்தினம்

(கார்க்கார இரத்தினண்ணை CN - 3757, EY - 404, EN - 1)



பொல்வத்தை, இளவாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பிள்ளை இரத்தினம் நேற்று (26.10.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தப்பிள்ளை - பொன்னு தம்பதியரின் இளையமகனும், காலஞ்சென்ற வல்லிபுரம் - செல்லம் தம்பதியரின் மருமகனும், வள்ளியம்மை, காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி, ராணி மற்றும் சுதாமதி, யோகமதி, நிலாமதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பொன்னம்மாவின் பாசமிகு கணவரும், கலைவாணி (ஆசிரியை, யா/இளவாலை கன்னியர்மடம் ம.வி), கஜமுகன், காலஞ்சென்ற நாராயணி ஆகியோரின் அன்புத் தந்தையும், கெங்காதரகீர்த்தியின் (ஆசிரியர், யா/அருணோதயக்கல்லூரி, அளவெட்டி) பாசமிகு மாமனும், சதுர்ஷனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.10.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முள்ளானை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
தொ.பே: 0243243610
0775384664

பொல்வத்தை,
இளவாலை.

(சி/4344)(3.14)



## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் புதிய கற்கை நெறிகள்

**Spoken English With Grammar - Quick Learning Course** (1 1/2 Months)

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல். சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.

A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.

வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

**Diploma In English** (2 Months)

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**IELTS** Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam

< We gurantee minimum 6.0 band and above >

Duration: 2 1/2 Months

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

**A1 Exm - Sponsor / Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை

- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

**Young Learners for English (YLE)** (வயதெல்லை : 7 - 12)

இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்

புதிய வகுப்புக்கள் Batch I - 29-10-2012 | Batch II - 31-10-2012 | Batch III - 03-11-2012

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel: 024 324 5287

Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074



## விற்பனைக்கு

பொடியுடன் கூடிய மகேந்திரா மக்சி றக் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0217201296

(24788)(3.14)



## விற்பனைக்கு

M.F.240 பேகுசன் புத்தம் புதிய 5 கியர் வசதியுடனான ரைக்டர் திருகோணமலையில் விற்பனைக்குண்டு.

விவரங்களுக்கு தொடர்பு கொள்ள: 0713991049

(சி/4307)(3.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.10.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

மனிதன் பழக்கத்துக்கு அடிமை. -சாமர்செட் மாம்

வார வசந்தம் 01

உதயன் 27 ஒக்டோபர் 2012 சனிக்கிழமை பக்கங்கள்: எட்டு

# பாடசாலை சமூக உறவும் கல்வி முகாமைத்துவமும்

நடேசு தயாளன்
அதிபர், யாழ்.கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்.

பாடசாலையானது தனியே மாணவர்களைச் சமூகத்துக்குப் பொருத்தமான வளர்ந்தோராக மாற்றமுடியாது என்பது கல்வித்துறை சார்ந்தவர்களது கருத்தாகவுள்ளது. இதுவொன்றே பாடசாலையும்சமூகமும்இணைந்து செயற்படவேண்டும் என்பதற்கு போதுமான ஆதாரமாயுள்ளது. இதன் மூலமே அவர்களது இலக்குகளை அடைய முடியும்.

இதன் மூலம் பாடசாலை சார்ந்தவர்களிடம் நெருக்கம் அதிகரிக்கும். பொருத்தமானதும் வினைத்திறனானதுமான இயைபாக்கம் மூலம் சமூக அபிவிருத்தியையும் ஏற்படுத்த முடியும்.

பாடசாலையின் வினைத்திறன் மற்றும் வெற்றிகரமான பாடசாலைகள் தொடர்பான ஆய்வுகள் பின்வரும் விடயங்களை வலியுறுத்துவதாயுள்ளது.

1.சமூக உறவு

2.பெற்றோர் ஈடுபாடு

சமூகம் என்பது ஒரு குழுவான மக்கள் தொகுதி, சமூகப் பொருளாதாரக் கலாசார ரீதியிலான பரிமாற்றத்துடன், ஒவ்வொருவரும் மற்றவர்களுக்கு சமூக ரீதியில் உதவுவதோடு பொதுவான விழுமியங்களைக் கொண்டவர்களாக மற்றவர்களை இனங்காண்பவர்களாகவும் இருக்கும் நிலையினைக் குறிப்பதாக அமைந்துள்ளது. இங்கு ஒரு தொடர்பாடற் கோலத்தினைக் கொண்ட மக்கள் கூட்டமானது தொடர் தேர்ச்சியான தொடர்புகளைக் கொண்டிருத்தலோடு சார்ந்தியங்கும் உணர்வுகளுடன்செயற்படுவதாயும் இருக்கும்.

பாடசாலையும், சமூகமும் இணையும் போது வளப்பரிமாற்றம் அதிகரிக்கும். உபகரணப் பயன்பாடு அதிகரிக்கும். தொண்டடிப்படையிலான உதவியைப் பெற்றுக்கொள்ள முடியும். விசேடமாகத் துறை சார்ந்தவர்களின் உதவியையும் சகோதர ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ள முடியும். தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப வலைப்பின்னலால் அங்கீகாரமும் பொதுமக்கள் உறவும் வலுப்பெறும். திட்டமிடல், அமுலாக்கல், மதிப்பீடு செய்தலாகிய நிலைகளில் சந்தர்ப்பங்கள் ஏற்படும். உள்ளகப் பயற்சி நிலை, தொழில் திருப்தி, சமூகத் திறன் என்பனவும் வளர்ச்சியடைய முடியும்.

பாடசாலை சமூக உறவானது, பாடசாலைகளை வலுவுள்ள சமூகக் கட்டமைப்புகளாக மாற்றியமைக்க பங்காற்றுவதாக இருக்கும். பாடசாலைகளின் இயலுமைகள் வலுப்பெறுவதோடு இளவயதினர் தொடர்பிலான பல்வேறு பிரச்சினைகள் இடம்பெறுவதும் தவிர்க்கப்படும். இத்தகைய உறவு, ஆக்கபூர்வமான தலைமைத்துவம் கட்டியெழுப்புவதற்கு தூரநோக்கு, தந்திரோபாயத் திட்டமிடல், ஆக்கபூர்வமான தலைமைத்துவம், புதிய பல்பரிமாண நடிபாகம் உடைய வாண்மையாளர்கள் சமூகத்திலும் பாடசாலையிலும் இருத்தல் அவசியமாகும்.

இன்று பாடசாலையுடன் பல்வேறுபட்ட சமூக நிறுவனங்கள் பங்குதாரராகவுள்ளனர். நாட்டிலுள்ள பல்வேறுபட்ட சேவை வழங்கும் நிறுவனங்கள், உள்ளூராட்சி அமைப்புகள்., சேவை மன்றங்கள், இளைஞர் மன்றங்கள், விளையாட்டுக் கழகங்கள், சமூக அடிப்படையிலான நிறுவனங்கள், கலை கலாசார அமைப்புக்கள், வெகுசனத் தொடர்புச் சாதனங்கள் என்றவாறாக இதன் பரப்பு விரிந்த வண்ணமாகவுள்ளன.

பாடசாலைக்கும் சமூகத்துக்கும் இடையிலான உறவின் தன்மையானது பரஸ்பர ரீதியான அணுகுமுறை, சமூகப் பொருளாதார அரசியல் நிலைகள் தொடர்பான சவால்கள் என்றவாறாக இது அமைந்து காணப்படுகிறது.

பாடசாலைச் சமூகம் என்பது இரண்டு பிரிவாகப் பிரித்து நோக்கப்படும்.

1.உள்ளக சமூகம்-அதிபர் , ஆசிரியர்கள், மாணவர்கள்

2.வெளியக சமூகம்-தனியாள்கள், நிறுவனங்கள்

பாடசாலைக்கும் சமூகத்துக்குமிடையிலான தொடர்பை நோக்கும்போது சமூகத்தினைப் புரிந்து கொள்ளல் என்பது முக்கியமானதாகும். இதன் மூலமே சமூகத்தினுடைய சேர்க்கைகளை, கட்டமைப்புகளை அறிந்து கொள்ள முடியும். சமூகத்தினுடைய அபிப்பிராயத்தினையும் மனப்பாங்கினையும் அறிந்து கொள்ளலாம். பாடசாலையினதும் சமூகத்தினதும் பலவீனங்களையும் அறிந்து கொள்ள முடியும். சவால்களையும் பிரச்சினைகளையும் இனங்கண்டுகொள்ள முடியும்.

பாடசாலை என்பது சமூகத்தின் ஓர் அங்கமாக உள்ளமையால் பாடசாலைத் சமூக நிறுவனமானது சமூகத்துடன் தொடர்புடையதாக இருத்தல் வேண்டும். பின்வரும் காரணங்கள் முன்வைக்கப்படுகின்றது.

1.பாடசாலை செல்லும் வயதிலான பிள்ளைகளைச் சமூகத்திலிருந்தே பெற வேண்டியுள்ளமை.

2. மாணவர்களது அடைவு மட்டத்தினை உயர்த்துவதற்கு அதாவது கலைத்திட்டத்தினூடாக சமூகத்தினுடைய தேவைகளை அறிந்து அதனைப் பூர்த்தி செய்வதற்காகவும் பொருத்தமான கற்றல் அனுபவங்களூடாக தேசிய மட்ட அடைவுகளை எட்டுதல்.

3.சமூகமானது பாடசாலைக் கல்வியின் உடனடி நுகர்வோராயுள்ளமை.

4.கல்விக்கான பணமானது மக்களது வரிப்பணத்தினூடாகவே ஒதுக்கீடு செய்யப்படுவதனால் சிறந்த அடைவுகளைச் சமூகத்துக்குவழங்கவேண்டியுள்ளமை.

5. சமூகத்தினது பங்களிப்பு அதிகரிப்பானது சிறந்த முதலீடாகும் என்பது தொடர்பாக பல்வேறு ஆய்வுகள் முடிவுகளை வெளிப்படுத்தியுள்ளமை.

6.பொதுக்கல்வியானது சமூகத்துக்கு வழங்கப்படும் சேவையாகக் கொள்ளப்படல்.

7.சமூகமானது பாடசாலைச் செயற்பாடுகளின் நுகர்வோனாகவும் அதனது வாடிக்கையாளராகவும் விளங்குதல்.

8. 21 ஆம் நூற்றாண்டின் கல்வி தொடர்பான மீள் சிந்தனை.

9.பாடசாலை முகாமைத்துவ தந்திரோபாயங்களின் மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கு.

10.புத்தாக்கத்துக்கும் மாணவர் அடைவுக்கும் வள அதிகரிப்புக்கும் வேண்டிய அரசியல் ஆதரவினையும் ஒத்துழைப்பினையும் அனுகூலமான வகையில் பெற்றுக் கொள்வதற்கு.

11.பாடசாலையும் சமூகமும் நன்மையை அடைவதற்கு.

12.பாடசாலை பற்றியும் அதன் சாதனைகள் பற்றியும் பகிரங்கப்படுத்தலை மேற்கொள்வதற்கு.

13. பாடசாலைக்கும் சமூகத்துக்குமிடையிலான தப்பபிப்பிராயங்களைஇல்லாதுசெய்வதற்கு.

14. பாடசாலையைச் சமூகத்துடன் இணைப்பதற்கு.

இந்தப் பாடசாலைக்கும் சமூகத்துக்குமிடையிலான உறவு நிலையினை நோக்கின் சில பாடசாலைகள் உயர்வான உறவு நிலையினைக் கொண்டதாகவும் சில குறைந்த மட்டத் தொடர்புடையதாகவும் அமைந்து காணப்படுகின்றன. இதற்கான தந்திரோபாயங்கள் சட்ட அடிப்படையிலானதாகவோ போதுமான தகவல்களைச் சம்மந்தப்பட்ட தரப்பினருக்கு வழங்குவதாகவோ காணப்படலாம்.

பாடசாலைச் சமூக உறவுக்குப் பாடசாலை மட்டத்தில் அதிபர், ஆசிரியர்கள் பின்வரும் திறன்களை விருத்தி செய்து கொள்வதோடு, வெற்றிகரமான பங்குதாரர் மனப்பாங்கையும் வளர்த்தல் அவசியமாகும். இதற்காகச் சமூகத்தினர் இவர்களை அணுகக்கூடிய நிலை, உளவியல் சார்ந்த நெகிழ்வுப் போக்கு, செயற்பாட்டில் ஆர்வம் எல்லாம் நன்மைக்கே என்ற மனப்பாங்கு ஆபத்தினை எதிர்கொள்ளும் மனோநிலை, ஆள்களிடையேயான தொடர்புகளைக் கட்டியெழுப்பக் கூடிய இயலுமைகளை வளர்த்துக் கொள்ளுதல், உறுதியாகக் கூறல் மற்றையோருக்கு சரியான முன்மாதிரியாக விளங்குதல் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தக்கூடிய நிலை ஆகிய திறன்களை வளர்த்துக் கொள்ளுதல் அவசியமாகும்.

பெற்றோருடனான உறவினை சிறப்பான முறையில்





மேற்கொள்ள வேண்டியது அசிரியர்களது கடமையாகும் பாடசாலைஅனுபவங்களானது வாழ்க்கை நீடித்த தாக்கத்தை விளைவிக்கக் கூடியதாக விளங்குகின்றது கலைத்திட்டமானது பிள்ளைகளது வாழ்வில் பொருத்தமானதாக உள்ளமையை உறுதிப்படுத்துகிறது. ஆசிரியர்களிலும் பார்க்க தமது பிள்ளைகள் பற்றிப் பெற்றோர் அதிகளவில் தெரிந்தவர்களாயுள்ளமையால் பெற்றோருடன் சிறப்பான உறவினைக் கட்டியெழுப்புவதன் அவசியத்தை வலியுறுத்துவதாயுள்ளது.


தமது பிள்ளைகளின் கல்விக்கான தெரிவாளர்களாக உள்ள பெற்றோர்களே தமது பிள்ளைகளுக்கான பாடசாலையை தெரிவோராயுள்ளமை, பாடசாலைச் செயற்பாடுகளின் பங்குபற்றித் தமது பிள்ளைகள் தொடர்பில் தீர்மானம் கொள்வோராய் விளங்குதல் என்பன அவர்களது ஈடுபாட்டினை பாடசாலையில் வேண்டுவதாயுள்ளது.

பெற்றோரின் ஈடுபாட்டு நிலை தொடர்பில் ஆசரியர்கள் கொண்டிருக்க வேண்டிய தகுதிகளாவன, பெற்றோர்களின் ஆதரவு அவர்களுக்கு எத்தகைய நிலையில் உள்ளது என்பதனைத் தெரிந்து கொள்வதற்கான தந்திரோபாயங்கள், பெற்றோர்களை அவர்களது வழியிலேயே அனுசரித்துச் செல்வதற்கு நம்பிக்கையுடன் கூடிய உயர் வாண்மைத்துவ வகிபாகத்தினை அவர்கள் முன்மேற்கொள்வதற்கு வேண்டிய தேர்ச்சிகள் என்பன ஆசிரியர்களால் வளர்க்கப்படுதல் அவசியமானதாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவினால் சுட்டு நஷ்டப்படாதீர்கள்



என்.கணேசன்

எதைக் காக்கிறோமோ இல்லையோ நாவைக் காப்பது நலம் என்றார் ஐயன் திருவள்ளுவர். ஏனென்றால் எத்தனையோ சோகங்களுக்கு நாக்குத் தான் மூல காரணமாக இருக்கின்றது. எத்தனையோ குடும்பங்களில் நாவினால் தான் நிம்மதி காணாமல் போகின்றது. நாக்கைப் பிடுங்கிக் கொள்கிற மாதிரி நான்கு வார்த்தைகள் கேட்க வேண்டும் என்ற எண்ணம் பல நேரங்களில் மேலோங்குவது இயற்கை. சரியான சந்தர்ப்பம் கிடைக்கிற போது அப்படி மற்றவர்களைக் கேட்காமல் இருக்க பலராலும் முடிவதில்லை. அப்படிக் கேட்டு விடும் போது அந்த நேரத்தில் கிடைக்கின்ற திருப்தியே அலாதி என்றாலும் அப்படிக் கேட்டு விட்டு மனிதர்களைப் பகைத்துக் கொள்கிறோம் என்பதைப் பலரும் மறந்து விடுகிறோம். எவருமே குற்றமற்றவர்கள் அல்ல.

எல்லோரும் சில சமயங்களில் பலவீனர்களாகவே இருந்து விடுகிறோம். பலரும் ஒருசில விடயங்களில் எப்போதுமே பலவீனர்களாகவே இருக்கிறோம். சிலவற்றை காலப் போக்கில் திருத்திக் கொள்கிறோம். சிலவற்றை காலம் கூட நம்மிடம் மாற்ற முடிவதில்லை. அப்படி இருக்கையில் கடுமையான, கூர்மையான வார்த்தைகளால் சிலரின் சில குறைகளையும், குற்றங்களையும் சாடுவது சரியல்ல. எவ்ரை அப்படிச் சாடுகிறோமோ அவர்களும் நம்மை அப்படியே சாடுவதற்கு சரியான சந்தர்ப்பத்திற்காக காத்திருக்க ஆரம்பித்து விடுகிறார்கள். இன்றில்லா விட்டாலும் என்றாவது அந்த சந்தர்ப்பத்தை நாம் ஏற்படுத்தியும் தரக் கூடும். "அன்று என்னைப் பெரிதாகக் கேட்டாயே நீ மட்டும் ஒழுங்கா?" என்கிற ரீதியில் அவர்கள் கேட்க, நாம் ஆத்திரப்பட விளைவாக ஒரு நீண்ட பகை உருவாகி விடுகிறது.

குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை என்பார்கள். ஒவ்வொரு குற்றத்திற்காகவும் ஒவ்வொருவரை நம் நாவால் பதம் பார்க்க ஆரம்பித்தால் சுற்றம் என்பதே நம்மைச் சுற்றி இருக்காது. நாம் தனியாளாகி விடுவோம். சுற்றம் மட்டுமல்ல நண்பர்களும் நமக்கு மிஞ்ச மாட்டார்கள். இன்றைய குடும்பங்களில் விவாகரத்துகள் அதிகரிக்க மிக முக்கிய காரணம் கட்டுப்படுத்தாத நாக்குத் தான். உப்புச் சப்பில்லாத விடயங்களுக்கெல்லாம் கூர்மையான கடுமையான வார்த்தைகளை உபயோகப்படுத்தி விடுவது தான். ஒரு காலத்தில் வேறு வழியில்லை என்ற போது சேர்ந்திருந்தார்கள். பொறுமை காத்தார்கள். ஆனால் இன்று அது போன்ற நிலை இல்லை. இன்றைய விவாகரத்து வழக்குகள் குறித்து பேசும் போது, மூத்த வழக்கறிஞர் ஒருவர், "விவாகரத்து கோரி வரும் கணவன், மனைவி இரு தரப்பினரும் சொல்கின்ற காரணங்களை வைத்துப் பார்த்தால் சொல்கின்ற அளவிற்கு, பெரிய குறைபாடுகளோ அல்லது வேறு ஏதும் முக்கியமான காரணங்களோ குறைவு என்றும், பெரும்பாலான காரணங்கள் சிறு பிள்ளைத் தனமானவைகளாகவே இருக்கின்றன. பள்ளி செல்லும் பிள்ளைகள் போட்டுக் கொள்ளும் சண்டைகளுக்கான காரணங்கள் போலத் தான் அவை இருக்கின்றன. மேலும் குடும்பம் இரண்டாகப் பிரிகிற போது அந்தக் குழந்தைகள் நிலை பரிதாபகரமானது என்பது கூட கவனிக்கப்படுவதில்லை" என்கிறார். பெரும்பாலான தம்பதிகள் கடைசியாகச் சொல்கிற காரணமே, அந்த அளவு பேசி விட்ட பிறகு அந்த மனிதருடன்/மனுஷியுடன் இனியும் கூட வாழ்வது சாத்தியமில்லை என்பதுதான்.

'தீயினால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே நாவினால் சுட்ட வடு'

என்கிறார் வள்ளுவர். நாவினால் சுட்ட வடுக்கள் ஆறுவதில்லை. நினைக்க நினைக்க காயங்கள் மேலும் மேலும் ஆழப்படத்தான் செய்கின்றன. சம்பந்தப்பட்ட தவறுகள் கூட பல சந்தர்ப்பங்களில் மன்னிக்கப்பட்டு விடுகின்றன. ஆனால் சொல்லப்பட்ட வார்த்தைகள் மன்னிக்கப்படுவதில்லை, மறக்கப்படுவதுமில்லை. ஒருவர் எத்தனையோ விடயங்களில் நல்லவராக இருக்கக் கூடும். அவர் மற்றவர்களுக்கு எத்தனையோ உதவிகள் செய்திருக்கவும் கூடும். ஆனால் கட்டுப்பாடில்லாமல் வார்த்தைகளால் மற்றவர்களை அவர் வேதனைப் படுத்துவாரேயானால் அத்தனை நன்மைகளும், உதவிகளும் மங்கிப் போகும். பேசிய அந்த கடுஞ்சொல் மட்டுமே பிரதானமாக நிற்கும். இது குடும்பத்திற்குள்ளும், உறவினர்களுக்குள்ளும் மட்டும் பூதாகரமாகும் ஒரு பிரச்சினை அல்ல. அக்கம் பக்கத்திலும், அலுவலகத்திலும், பொது இடங்களிலும் கூட நம் அமைதியை நிர்ணயிக்கும் ஒன்றாக இருந்து விடுகிறது. ஒருசில நிமிடங்களில் மறந்து விடக்கூடிய எரிச்சல் மிகுந்த சந்தர்ப்பங்களைக் கூட சுடு சொற்களால் பெரிய விஷயமாக்கிக் கொள்கிற எத்தனையோ உதாரணங்களை நம் தினசரி வாழ்க்கையில் காண முடியும்.

அதற்கென்று யார் என்ன சொன்னாலும் பொறுத்துக் கொண்டே போக வேண்டியதில்லை. நமக்கு இழைக்கப்படும் அநீதிகளை சகித்துக் கொண்டே இருந்துவிடத் தேவையில்லை. தவறுகளை சுட்டிக் காட்டுவதும், உறுதியுடன் நம் அபிப்பிராயத்தைத் தெரிவிக்க வேண்டியதும் சில நேரங்களில் அவசியமாகவே இருக்கின்றது. அது போன்ற சந்தர்ப்பங்களில் சொல்ல வேண்டியதை உறுதியாகவும், தெளிவாகவும் சொல்லுங்கள். ஆனால் வார்த்தைகளில் விஷம் வேண்டாம், விஷமமும் வேண்டாம். சொல்வது நேர்மையாகவும், உண்மையாகவும் இருந்தால் அது அப்போது ஒத்துக் கொள்ளப்படாவிட்டாலும் கூட சம்பந்தப்பட்டவர்களால் உணரப்படும். அப்போது சற்று சங்கடமாக இருந்தாலும் உடனடியாக மறக்கப்படும். ஆனால் வார்த்தைகளில் விஷம் தோய்ந்திருக்குமானால் சொல்கின்ற செய்தி உண்மையாகவே இருக்குமானாலும் அது ஆறாத வடுவாக அடுத்தவர் மனதில் தங்கி விடும். நீண்ட பகைமை பிறந்து விடும்.

பல பேர் குறைகளைச் சுட்டிக் காட்டும் போது சம்பந்தப்பட்டவர்களின் குடும்பத்தையும் சேர்த்து இழுப்பார்கள். உங்கள் குடும்பத்திற்கே இந்த புத்தி அதிகம் இருக்கிறது என்கிற விதத்தில் பேச்சிருக்கும். சிலர் தேவையில்லாத கடுமையான, குத்தலான அடைமொழிகளைச் சேர்ப்பார்கள். சொல்கின்ற சங்கதியை அந்த அடைமொழி அமுக்கி விடும். இப்படி நாவினால் சுடும் விதங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

சிலர் பேசுவதை எல்லாம் பேசி விட்டுப் பின்னர் ஏதோ ஒரு கோபத்தில் சொன்னதை எல்லாம் பெரிது படுத்துவதா? என்று இறங்கி வரக்கூடும். ஆனால் கேட்டு வேதனைப் பட்டவர்கள் அதில் சமாதானமாக முடிவது கஷ்டம் தான். எப்படி வேண்டுமானாலும் பேசலாம் என்பதற்கான அங்கீகாரம் அல்ல. எனவே திருப்பி வாங்க முடியாத வார்த்தைகளைப் பேசாமலேயே இருப்பது தான் அறிவு.

எல்லோரும் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் நமக்கு உதவக் கூடிய நிலையில் இருக்கக் கூடும். அல்லது நம்மை பிரச்சினைக்குள்ளாக்க வேண்டிய நிலையில் கூட இருக்கக் கூடும். அந்த நேரத்தில் நாம் பேசிய அந்த கடுமையான வார்த்தைகள் மட்டுமே அவர்களுக்கு நினைவு வரக் கூடுமானால் அதனால் பெரும் நஷ்டமே ஏற்படக் கூடும்.

எனவே வார்த்தைகளால் ஜெயித்து விட்டு வாழ்க்கையில் தோற்றுப் போகாதீர்கள். வார்த்தைகளைத் தீட்டுவதற்குப் பதிலாகப் புத்தியைத் தீட்டுங்கள். குத்தல் பேச்சும், கிண்டல் பேச்சும் அந்த நேரத்தில் நன்றாகத் தெரியலாம். உடன் இருப்பவர்களிடம் பாராட்டுக் கூடப் பெறலாம். ஆனால் அந்தப் பேச்சால் முக்கியமான மனிதர்களை இழந்து விட்டால், அவர்களின் அன்புப் பாலம் பழுதடைந்து விட்டால் நஷ்டம் நமக்கும் தான் என்பதை என்றும் மறக்காதீர்கள்.

# கடல் நீர் உப்புக் கரிப்பது ஏன்?

என்.துரை



பார்ப்பதற்கு அழகாகத் தான் இருக்கிறது. ஆனால் கடல் நீரை ஒரு கை எடுத்து வாயில் ஊற்றிக் கொண்டால் வயிற்றைக் குமட்டுகிற அளவுக்கு உப்புக் கரிக்கும். ஆனால் உலகில் உள்ள எல்லாக் கடல்களிலும் உப்புத்தன்மை ஒரே அளவில் உள்ளதாகச் சொல்ல முடியாது.

சுமார் 120 ஆண்டுகளுக்கு முன்னர் ஆராய்ச்சியாளர் ஒருவர் உலகின் கடல்களில் 77 இடங்களிலிருந்து கடல் நீரை எடுத்து ஆராய்ந்தார். கடல் நீரில் எடை அளவில் சராசரியாக 3.5 சதவிகித அளவுக்கு பல்வேறு உப்புகள் கலந்துள்ளதாக அவர் கண்டறிந்தார். அதாவது ஒரு லீற்றர் கடல் நீரில் 3.5 கிராம் அளவுக்கு உப்பு உள்ளது.

எனினும் ஐரோப்பாவையொட்டிய பால்டிக் கடலில் உப்புத் தன்மை சற்றே குறைவு. இதற்கு நேர்மாறாக செங்கடலில் உப்புத் தன்மை அதிகம். அந்தக் கடல் குறுகியதாக உள்ளது என்பதும் அதில் வந்து கலக்கும் நதிகள் குறைவு என்பதும் இதற்குக் காரணம்.

ஆனால் தமிழகத்தை ஒட்டியுள்ள வங்கக் கடலை ஒப்பு நோக்குகையில் உப்புத்தன்மை சற்றுக் குறைவு. கங்கை, பிரம்மபுத்திரா, மகாநதி போன்ற பல நதிகள் இந்தக் கடலில் வந்து கலப்பதே இதற்குக் காரணம். இந்துமாகடலை விடவும், பசுபிக் கடலை விடவும் அட்லாண்டிக் கடலில் உப்புத் தன்மை அதிகம்.

கடல் நீருடன் ஒப்பிட்டால் நதி நீர் உப்புக் கரிப்பது இல்லை. நதி நீர் ருசியாகவே உள்ளது. ஆனால் கடல் நீரில் கலந்துள்ள உப்புகள் அனைத்தும் நதிகள் மூலம் வந்து சேர்ந்தவையே.

நதிகள் நிலப்பரப்பின் வழியே ஓடி வரும்போது பாறைகளை அரிக்கின்றன. நிலத்தை அரிக்கின்றன. அப்போது நதி நீருடன் பாறைகள், நிலம் ஆகியவற்றிலிருந்து சிறிதளவு உப்பு கலக்கிறது. பல கோடி ஆண்டுகளில் இவ்விதமாக நதிகளால் அடித்துச் செல்லப்பட்ட உப்பு கடல்களில் போய்ச் சேர்ந்துள்ளது.

சூரிய வெப்பம் காரணமாக கடல்களில் உள்ள நீர் ஆவியாக மேகங்களாக உருவெடுக்கின்றன. கடல் நீர் ஆவியாகும் போது உப்பு பின் தங்கிவிடுகிறது. உப்பு இவ்விதம் பின் தங்கிவிடுவதால் தான் மழை நீர் உப்பு கரிப்பது இல்லை. தவிர, உப்பு பின் தங்குகிற அதே நேரத்தில் நதிகள் மூலம் பல கோடி ஆண்டுகளில் மேலும் மேலும் உப்பு கடலில் வந்து சேர, கடல் நீர் உப்பு கரிக்க ஆரம்பித்தது.

ஆனாலும் சில லட்சம் ஆண்டுகளுக்குப் பிறகு [illegible] உள்ளதை வி[illegible] அதிக அளவில் உப்புக் கரிக்கும் என்று சொல்ல முடியாது. ஆண்டுதோறும் நதிகள் மூலம் சுமார் 400 கோடி டன் உப்பு கடலில் வந்து சேருவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அதே நேரத்தில் கடல் நீரிலிருந்து சுமார் 400 கோடி டன் உப்பு தனியே பிரிந்து கடலுக்கு அடியில் போய் தங்கிவிடுவதாக நிபுணர்கள் மதிப்பிட்டுள்ளனர். சூடான கோப்பியில் நீங்கள் இரண்டு கரண்டி சீனியை போட்டால் கரைந்து விடும். ஆனால் 6 கரண்டி சீனியை போட்டால் கோப்பி சற்று ஆறியவுடன் கூடுதல் சீனி கரையாமல் அடியில் தங்கும். அது போலத்தான் கடல்களின் அடியில் உப்பு படிகிறது.

இந்தக் காரணத்தால் தான் கடல்களின் உப்புத் தன்மை அதிகரிக்காமல் சீராக உள்ளதாக நிபுணர்கள் கூறுகின்றனர். இந்தவிதம் கடலடித் தரையில் படியும் உப்பானது கனத்த அடுக்காகப் படிந்து நிற்கிறது.

பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் நீண்ட காலம் கடல் நீரால் மூழ்கப் பட்டிருந்து பின்னர் கடல் நீர் அகன்ற இடங்கள் பலவற்றில் நிலத்துக்கு அடியில் பாறை வடிவில் உப்பு கிடைக்கிறது. உதாரணமாக இமயமலைப் பகுதியில் இந்தவித உப்பு கிடைக்கிறது. அமெரிக்காவில் மிட்சிகன் மாகாணத்திலும் இந்தவிதம் பாறை உப்பு கிடைக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனுக்கு தேவையான முக்கிய பிரமுகர்

யார் அந்தப் பிரமுகர் என்று குழம்ப வேண்டாம். அவர் 'அயடீன்' எனும் கனிப்பொருள் தான். அயடீன் என்றதும் அதன் பற்றாக்குறையால் ஏற்படும் 'தொண்டைக்கழலை' நோய் தான் பலருக்குத் தெரியும். ஆனால் இதைவிட பாரதூரமான பல விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது இந்த அயடீன்.

அயடீன் பற்றாக்குறை மந்தபுத்தி, செவிட்டுக் குணம்,கோணற்கண், இயல்பாக நிற்க அல்லது நடக்க இயலாமை, அவயவங்கள் குள்ளமடைதல், இலகுவில் களைப்படைதல், சோம்பல் போன்றவற்றை ஏற்படுத்த வல்லது. அயடீன் அதிகம் தேவையான காலங்கள் பாலகப் பருவம், பூப்பெய்தும் பருவம், கர்ப்பகாலம் ஆகியவையாகும்.

வளர்ந்த ஒருவருக்கு நாளாந்தம் தேவைப்படும் அயடீனின் சராசரி அளவு 150mg ஆகும். ஒரு தனிநபரின் ஆயுட்காலத் தேவையாகும் இந்த அயடீன் கிரமமாக மனித உடலுக்குத் தேவைப்படுவதால் தினமும் எந்த வழியிலாவது உள்ளெடுத்தல் அவசியம். இதற்கான சுலப வழியாக அயடீன் கலந்த உப்பினை உள்ளெடுத்தல் சாலச்சிறந்தது. வடபகுதி மக்களாகிய நாம் இந்தப் பற்றாக்குறைக்கு இலக்காவது குறைவு. ஏனெனில் இங்கு காணப்படும் 1 லீற்றர் குடிதண்ணீரில் சுமார் 182.8mg அயடீன் உள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது.

பா.லக்ஷிப்பிரியா, தரம்-12 எம்.
யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்

# செல்வம்

எப்படி செல்வத்தை பூட்டி வைப்பதால் செல்வம் வளராதோ அதேபோல் வறுமையைப் பூட்டி வைக்கக்கூடாது. பணம் என்பது ஒரு வேலைக்காரனைப்போல் இருக்கவேண்டும். பணம் எஜமான் போன்று இருக்கக்கூடாது.

தேவைக்கு பயன்படாது புதைத்துவைத்த பணம் திருட்டுப் போனால் அந்தப் பணம் அங்கு இருப்பதாக எண்ணவேண்டும்.

கடனாக பெற்ற பணத்தைக் கொண்டு உன்னால் உறுதியான பாதுகாப்பைத் தேட முடியாது.

றஷினா,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

# நானும் பறவையாக இருந்தால்



எனக்கு வயது ஐந்து. எனது வீட்டு பூந்தோட்டத்தில் வண்ண வண்ணப்பூக்கள் பூத்து இருந்தது. என் அம்மா காலை எழுந்து எனக்கு குளிப்பாட்டி சட்டை போட்டு அழகாகத் தலைவாரி பொட்டும் வைத்து விடுவாள். நான் என்னை எங்கள் கண்ணாடி முன் நின்று அழகு பார்ப்பேன் அதன் முன் நின்று வட்டமிடுவேன்.

வட்ட மிட்டபடி எங்கள் வீட்டுத் தோட்டத்தைப் பார்த்தேன் பட்டாம் பூச்சிகள் பூவில் தேன் அருந்துவதைக் கண்டு ஆனந்தம் அடைந்தேன்.

வட்டமிட்டபடி எங்கள் வீட்டுத்தோட்டத்தைப் பார்த்தேன் பட்டாம்பூச்சிகள் பூவில் தேன் அருந்துவதைக் கண்டு ஆனந்தம் அடைந்தேன். அதன் சிறகுகளில் வண்ணங்களைக் கண்டு வியந்தேன். இத்தனை அழகா இந்தப் பட்டாம்பூச்சி. என்று என் கன்னத்தில் கைவைத்தவாறு அதன் அழகைக் கண்டு பெருமையும் மகிழ்வும் கொண்டேன்.

அது தேனை அருந்தி விட்டு பறந்து சென்றது. உயரத்தில் சிட்டுக்குருவிகள் பறந்து கொண்டு இருந்தன என் மனம் கற்பனையில் மிதந்தது.எனக்கும் சிறகு இருந்தால் நானும் அதனோடு சேர்ந்து விளையாடி இருப்பேன் . எனக்கு ஏக்கமாக இருந்தது.

நானும் சிட்டுக்குருவி போல் இருந்தால் அவர்களோடு எல்லா இடமும் பறந்திருப்பேன், ஒவ்வொரு பூங்காவனத்தையும் சுற்றிப் பார்த்திருப்பேன், நான் தொட்டுவிட முடியாத வானத்தை அருகில் நின்று பார்த்திருப்பேன் என நினைத்துக்கொண்டேன். அப்போது காதில் இனிமையான ஓசை ஒன்று கேட்டது. 'கூக்கு..கூக்கு' அங்கும் இங்கும் பார்த்தால் மரத்தில் குயில் பாடிக்கொண்டு இருந்தது. ''ஓ.....நீதானா அதிகாலை பாடி எழுப்புவது குயிலே எனக்கு உந்தன் சிறகைத்தருவாயா..? உன்னைப்போல் எனக்கும் பறந்து திரிய ஆசைப்படுகின்றேன். பட்டாம்பூச்சியும் என்னை அழைக்கவில்லை. சிட்டுக்குருவியும் என்னை அழைத்துச்செல்லவில்லை. நீயாவது என்னை அழைத்துச்செல்வாயா? நானும் உன்னைப்போல் அதிகாலையில் பாடி எல்லோரையும் துயில் எழுப்புவேன். இயற்கைக் காட்சிகளைக் கண்டு மகிழ்வேன். என்னையும் உன்னோடு அழைத்துச்செல்'' என்றேன். குயிலும் என்னை அழைத்துச்செல்லவில்லை கவலையுடன் வீட்டுக்குள் நுழைந்து கண்ணாடி முன் நின்று அழுதேன்.எனக்கும் சிறகு இருந்திருக்கக் கூடாதா என்று.

# வானொலி

இன்று வானொலி இன்றியமையாத ஒன்றாகிப்போனது. ஒவ்வொரு உள்ளங்களுக்கும் ஆறுதல் அளித்துக்கொண்டு இருக்கின்றது. வானொலி இல்லாத வீடு உண்டா? என்பது ஒரு கேள்விக்குறிதான்.



எல்லா வீடுகளிலும் இசையை வாரி வழங்கிக் கொண்டு இருக்கிறது.

அறிவு வளர்ச்சிக்கும் பொழுது போக்கிற்கும் பெரிதும் உதவியாக உள்ளது வானொலியைக் கண்டு பிடித்தவர். மார்க்கோணி எனும் விஞ்ஞானியாவர்.

இதனால் பல நாட்டு நிலைமைகளை செய்திகள் என்ற தலைப்பில் கேட்டு அறிந்து கொள்ள முடியும். சிறுகதைகள், நாடகம், கவிதைகள், இசைகள் என கேட்டு மகிழ்வடையலாம். ஒவ்வொரு நாட்டு மொழிகளிலும் ஒவ்வொரு விதமாக இந்த வானொலி உலாவருகின்றது.

இதில் கல்வி சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளை அதிகமாகச் சிறுவர்கள் உள்வாங்கி பயன் அடைவது அவசியம். பொது அறிவு கொண்ட நிகழ்ச்சிகள் வழங்கப்படும் போது நமக்கு தெரியாத விடயங்களை கற்றுக்கொள்வது அவசியம்.

வானொலி சிறுவர் முதல் வயோதிபர் வரை கேட்டு மகிழ்வடைகின்றனர். ஒவ்வொரு நாட்டிலும் வானொலி முக்கியமாக இருக்கின்றது.


# தந்திர ஓநாயை வென்ற புத்திசாலிக் கழுதை

ஒரு நாள் ஒரு காட்டுப் பகுதியில் கழுதை ஒன்று மேய்ந்து கொண்டிருந்தது.

கழுதையை கவனித்த ஓநாய் ஒன்று அதை அடித்துத் தின்னும் நோக்கத்துடன் அதன் மீது பாய்ந்தது. தனக்கு வந்த ஆபத்தைக் கண்டு பயந்தது கழுதை. ஓநாயை எதிர்த்து சண்டை போடுவது கடினம். அதனால் ஏதாவது ஒரு தந்திரம் செய்து தான் சமாளிக்க வேண்டும் எனக் கழுதை தீர்மானித்தது.

ஓநாயின் பாய்ச்சலின் போது சற்று விலகிக் கொண்டு, ''ஓநாயாரே, உம்முடைய வலிமையின் முன்னால் நான் எந்தமாத்திரம்... நான் இன்று உமக்கு இரையாகப் போவது உறுதி. இதை யாராலும் தடுக்க முடியாது. நானும் உமக்கு இரையாகத் தயாராக இருக்கிறேன். அதற்கு முன்னால் நான் சொல்லக் கூடிய விடயத்தைத் தயவு செய்து கேட்க வேண்டும்,'' என வேண்டிக் கொண்டது.

''நீ என்ன சொல்ல விரும்புகிறாய். சொல்வதைச் சீக்கிரம் சொல்'' என உறுமியது ஓநாய். ''ஓநாயாரே என் காலில் பெரிய முள் ஒன்று குத்தி விட்டது. முள்ளை எடுக்க நான் எவ்வளவோ முயற்சி செய்தும் முடியவில்லை. காலில் முள் உள்ள நிலையில் நீர் என்னை அடித்துச் சாப்பிட்டால் அந்த முள் உமது தொண்டையில் மாட்டிக் கொள்ளும். அது உமக்குக் கடுமையான வேதனையைத் தருவதுடன் உமது உயிரையும் பறித்து விடும். அதற்கு தயவு கூர்ந்து முதலில் என் காலில் இருக்கும் முள்ளை எடுத்து விடும். அதற்குப் பிறகு நீர் என்னை அடித்து உண்பதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை,'' எனக் கழுதை கூறிற்று.



ஏமாந்த ஓநாய் ஒத்துக் கொண்டது. கழுதை தனது பின்னங்கால்களைத் திருப்பிக் காண்பித்தது, ஓநாய் கழுதையின் பின்னங்கால்களில் முள் இருக்கிறதா எனத் தேடும் வேளையில், அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கழுதை பின்னங் கால்களால் ஓநாயைப் பலமாக உதைத்தது. கழுதையின் உதை தாங்காமல் ஓநாய் துடிதுடித்து சரிந்தது. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு கழுதை வேகமாக ஓடி [illegible]

# சிந்தனைக்கு...

★எங்கு ஒரு நூலகம் திறக்கப்படுகிறதோ அங்கு ஒரு சிறைச்சாலை மூடப்படுகின்றது.

★வாழ்க்கை என்பது இயற்கை அளிக்கும் செல்வம். ஆனால் நல்ல வாழ்க்கை என்பது ஞானம் அளிக்கும் செல்வம்.

★ஓய்வை விவேகத்துடன் பயன்படுத்துவதே கல்வியின் குறிக்கோள்.

★எனக்கென்று உள்ளதை எவரும் தடுக்க முடியாது. எனக்கென்று இல்லாததை எவரும் கொடுக்க முடியும்.

★போர்க்களத்தில் பெறக்கூடிய சில வெற்றிகளை இழக்கக்கூட நான் சம்மதிப்பேன். ஆனால் காலம் வீணாக்கப்படுவதை, இழக்கப்படுவதை மட்டும் ஒரு போதும் நான் விரும்பமாட்டேன்.

★ஒரு மனிதன் விழாமலே வாழ்ந்தான் என்பது பெருமையல்ல. விழுந்த பொழுதெல்லாம் எழுந்தான் என்பதே பெருமை.

★பார்த்தலோமியாவுக்குப் புயலாக இருந்த முனைதான் [illegible]காமாவுக்கு தன்நம்பிக்கையாக மாறியது.

★எவன் துணிகின்றானோ அவன் வெல்கின்றான்.

சா.கிருஸ்ஷிகா,
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் பக்தி

உருவகக் கதை



செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் நல்லூர் கோயிலுக்குப் போவது எனது வழக்கம். நேற்றும் நல்லூர் கோயிலுக்குப் போவதற்காக அதிகாலையிலேயே எழுந்து குளித்துவிட்டு காலை 6 மணிக்கு கோயிலின் உள்வீதியில் நிற்கிறன்... கோயிலின் உள்வீதியை மூன்று தடவைகள் சுற்றிக் கும்பிட்டுவிட்டு ஐயரிடம் திருநீறு, சந்தனம் வாங்கி பூசிவிட்டு கொஞ்சநேரம் கோயிலில் அமர்ந்து ஆறிவிட்டு போவோம் என்று கேணியடியில் உட்கார்ந்திருக்கிறேன்.

எனது பக்கத்தில் ஒருவர் வந்து அமர்கிறார். என்னைப் பார்த்து "கடவுள் மீது அளவு கடந்த பக்தியோ என்று கேட்டார். அதற்கு நானோ" அப்படி இல்லை, முருகனை கிழமையில இரண்டு நாள்கள் வந்து கும்பிட வேண்டும் என்று மனம் சொல்லிக் கொள்ளும். அதனால் தான் தவறாமல் வந்து கும்பிடுவேன்" என்றேன். அதற்கு அந்த நபரோ "முருகன் எங்க இருக்கிறார். நீர் கும்பிடுவது அவருக்குத் தெரியப் போகுதா என்ன. எல்லாம் ஒரு பம்மாத்து வேலை தான்" என்று சொன்னார். என்னடா இந்த ஆள் இப்படிச் சொல்லுது என்று அந்த நபருடன் கதைக்காமல் எனக்குள்ளே நினைத்துக் கொண்டிருந்தேன்...

சிறிதுநேரம் அமர்ந்திருந்த அந்த நபர் எழுந்து சென்று விட்டார். அந்த நபர் போகும் நேரம் பார்த்து எனது நண்பன் எனது அருகில் வந்து அமர்ந்தான்...

அவனிடம் "உதில போறவரை உனக்குத் தெரியுமா? நாத்திகன் போல இருக்கிறார். இடக்கு முடக்கா கதைத்து விட்டுப் போகிறாரே" என்றேன். அதற்கு அவனோ" அவர் தான் போன நல்லூர் தேர்த்திருவிழாவில் தூக்குக்காவடி எடுத்தவர் என்றான்.

-செல்வா




**வாழ்க்கையில் இலட்சியத்தைக் கடைப்பிடிப்பவர்கள் என்றுமே நேரத்தை வீணாக்கமாட்டார்கள். காலத்தைப் பொன்னெனப் போற்றி வாழ்கின்ற இவர்களை இலட்சிய வாதிகள் என்று அழைப்பதில் தவறேதும் இல்லை. ஆனால் அலெக்ஸ்சாண்டர், நெப்போலியன் போன்றோர் நித்திரை செய்வதற்கென்று பிரத்தியேகமாக நேரத்தை ஒதுக்கவில்லை. போர்க் களத்தில் மோதல் தணிந்த வேளையில் குதிரையில் அமர்ந்தவாறே குட்டித்தூக்கம் போட்டுவிடுவார்களாம். இல்லையெனில் உலகம் போற்றும் மாவீரர்களாக இவர்கள் தோன்றி இருக்க வாய்ப்பே இல்லாமல் போயிருக்கும் என்றும் கூறலாம்.**

# காலத்தின் தத்துவத்தை உணர வைக்கின்ற இலட்சியவாதிகள்

■ அருணா தருமலிங்கம்



காலச் சக்கரம் சுழன்று கொண்டே செல்கின்றது. இதனை நாம் நன்கு அறிவோம். செல்வம், கருணை, அந்தஸ்து போன்றவற்றைக் கொண்டுள்ள ஒருவனை உயர்ந்த நிலையில் வைத்துப் போற்றுகின்றோம். அதேவேளை துரதிர்ஷ்டவசமாக அவற்றையெல்லாம் இழந்து நிர்க்கதிக்குள்ளாகும்போது அவனைத் தாழ்ந்தவனென்றே குறிப்பிடுகின்றோம். இதுவே இயற்கையின் நியதியாகும். இறந்த காலத்தை மீண்டும் பெற முடியாது. ஆகவே காலத்தைப் பொன்னெனப் போற்ற வேண்டும். எமது கருமங்களை சிறப்பாக மேற்கொள்வதற்கு காலம்போதவில்லை என்று கவலைப்படலாமே தவிர, காலம் போகவில்லையே என்று கவலை கொள்ளக் கூடாது.

நேரம் போகவில்லையே என்று கவலைப்படுபவன் முழுச்சோம்பேறி ஆவான். அவன் காலத்தை என்றுமே மதிப்பதில்லை. அதற்குரிய அந்தஸ்தையும் வழங்குவதில்லை. இரவு, பகல் என்பவற்றை ஒரு வாளுக்கு ஒப்பிடலாம் அந்தவாள் நம் வாழ்க்கையைத் தினம் அறுத்துக் கொண்டே இருக்கிறது. காலத்தின் தத்துவத்தை நன்கு உணர்ந்தவன் மட்டுமே இதனை உணர முடிகின்றது. தினங்கள் வேகமாக ஓடுகின்றன. எங்களில் சிலர் நடக்கிறோம். பலர் ஓட முயற்சி செய்கின்றோம். பொதுவாக நாம் காலத்தைவிட அதிவேகமாகச் செல்ல வேண்டும். ஆகவேதான் வெற்றி கொள்ளச் சாத்தியப்படும். நாம் மேற்கொள்கின்ற அனைத்துப் பணிகளுக்கும் தனித்தனி நேரங்களை ஒதுக்கி வைப்பதே நல்லது. இதனால் நாம் செய்கின்ற எந்தவேலையும் முறை தவறாமல் மேற்கொள்வதற்கு உறுதுணையாகின்றது.

வாழ்க்கையில் இலட்சியத்தைக் கடைப்பிடிப்பவர்கள் என்றுமே நேரத்தை வீணாக்கமாட்டார்கள். காலத்தைப் பொன்னெனப் போற்றி வாழ்கின்ற இவர்களை இலட்சியவாதிகள் என்று அழைப்பதில் தவறேதும் இல்லை. ஆனால் அலெக்ஸ்சாண்டர், நெப்போலியன் போன்றோர் நித்திரை செய்வதற்கென்று பிரத்தியேகமாக நேரத்தை ஒதுக்கவில்லை. போர்க் களத்தில் மோதல் தணிந்த வேளையில் குதிரையில் அமர்ந்தவாறே குட்டித்தூக்கம் போட்டுவிடுவார்களாம். இல்லையெனில் உலகம் போற்றும் மாவீரர்களாக இவர்கள் தோன்றி இருக்க வாய்ப்பே இல்லாமல் போயிருக்கும் என்றும் கூறலாம். எழுத்தாளர் உலகில் தலை சிறந்து விளங்குவதற்குச் சில காரணிகள் உண்டு. அதில் முக்கியமானது ஆய்வுக் கட்டுரையோ, கதையோ, நாவலோ குறிப்பிட்ட கால எல்லைக்குள் எழுதி முடிக்க வேண்டும் என்ற இலட்சியத்தைக் குறிப்பிடலாம். விஞ்ஞானிகளையும் இதில் உள்ளடக்கலாம். பெர்னாட்ஷா, ஆர்க்கிமிடிஸ் போன்றோரை இதற்கு உகந்த சான்றாகக் கொள்ளலாம். இ[illegible] மட்டும் மு[illegible] பெறும் அளவுக்கு முன்னேறி வெற்றியும் கண்டனர்.

இயற்கை அனர்த்தங்களைக் கண்டு காலம் பயந்து ஓடி ஒளிப்பதில்லை. நேரத்தை உணர்த்துகின்ற கடிகாரங்கள் கூட சுனாமி, புயல், சூறாவளி என்பன திடீரென உண்டானாலும் ஓடாமல் நின்றுவிடுவதில்லை. இதனால் இரவு பகல் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

ஓர் குழந்தை பிறந்து பாலர் பாடசாலை முடித்தபின் கல்லூரியில் இணைந்து கொள்வதற்கு ஐந்து வயதைப் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. தேசிய அடையாள அட்டை பெறுவதற்கோ, தேர்தல்களில் வாக்களிப்பதற்கோ பதினெட்டு வயதாக வேண்டியுள்ளது. ஆனால் ஒருவன் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு காலவரையறை என்று எதுவுமே கிடையாது. நீங்கள் முன்னுக்கு வர விரும்பினால் உங்கள் உன்னத இலட்சியத்தை மனக்கண் முன் கொண்டு வர வேண்டும். அதனை அழுத்தம், திருத்தமாக எழுதிக் கொள்வது நல்லது. அப்போதுதான் உங்கள் குறிக்கோள் எந்நேரமும் தெளிவாகத் தென்படும்.

எண்ணங்களை மனதுக்குள் நினைத்துக் கொள்வதை விட அவற்றை வாய்திறந்து உரத்தர குரலில் முழங்கி, உள் மனதுக்கு நரம்புகள் மூலம் அனுப்பினால், பலன்கள் நிச்சயம் கிடைக்கும். மேற்குறிப்பிட்ட நடைமுறையைப் பின்பற்றினால் உங்களுடைய உள்மனம் அவற்றைக் கூடிய விரைவிலேயே கௌவிப்பிடித்துவிடும் என்பது நிதர்சனமாகும்.

ஒரு எண்ணத்தை மீண்டும் மீண்டும் ஞாபகப் படுத்தும் வேளையில் உடல் பூராவும் ஒருவித ஆற்றல் நிறைந்திருப்பது போன்ற உணர்வு தன்னிச்சையாகவே தோன்றிவிடுகின்றது. அந்தநேரம் உடல் முழுவதும் ஒருவித தன்னம்பிக்கை உணர்ச்சி இயல்பாகவே தோன்றிவிடுகின்றது.

எம்மிடையே அனைத்துச் சக்திகளும் அடங்கியிருக்கின்றன. சிலர் இதயத்தில் இறைவன் குடிகொண்டிருக்கின்றார் என்று புத்திஜீவிகள் கூறியிருக்கின்றார்கள். எம் எண்ணங்கள் தீவிரமாக இருத்தல் வேண்டும். மனவுறுதிக்குத் தகுந்தபடி தான் எண்ண அலைகள் கிளம்புகின்றன. ஒருவர் கண்ணீருடன் ஆசீர்வாதம் செய்தால் அதனால் நிச்சயம் நன்மை கிட்டும். பிறர் மனம் மகிழ்ந்து நல்லாசி கூறும் வண்ணம் நடந்துகொள்வதே எமக்கு நன்மைதரும் என்பது கண்கூடு. கண்ணீர் என்பது ஆனந்தக் கண்ணீரைக் குறிக்கின்றது.

மனதை ஒருமுகப்படுத்தினாலும் சக்தி மேலிடுகின்றதற்கு உகந்த சான்றாக இதனைக் குறிப்பிடலாம். அதாவது சாதாரண முகம் பார்க்கும் கண்ணாடி ஒன்றை சூரிய வெளிச்சத்தில் வைத்தால் கதிரவனின் கதிர்கள் சாதாரணமாகப் பிரதிபலிப்புக்கு உள்ளாகின்றது. இதனால் எந்தவித விளைவுகளும் உண்டாவதில்லை. ஆனால் கண்ணாடி வில்லை ஒன்றை வைத்தால் சூரியக் கதிர்கள் கண்ணாடி வில்லையில் பாய்ந்தால் அவை ஒருமுகப்படுத்தப்பட்டு ஒரு புள்ளியை நோக்கிச் செல்கின்றது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ...ராவளி
## ...ரிந்து கொள்வோம்

இணையவன்

சூறாவளி என்பது ஒருவகை சுழலும் காற்றாகும். இந்தக் காற்று கட்டுக்கடங்காத வேகத்தில் சுழன்றபடியே மேகங்களை தொட்டுக் கொண்டு நிலப்பரப்பை சூறையாடி பயிர்களையும், வீடுகளையும் நாசம் செய்துவிடும். சூறாவளி என்பது ஒரு புனல் [Funnel] வடிவத்தில் காணப்படும். பயங்கரமான சூறாவளியின் மேற்பகுதி மேகத்தை தொட்டு கிணறு போன்று அகன்று காணப்படும் மேலும் இதன் வால்ப் பகுதி கூர்மையான வாள் போன்று வளைந்து காணப்படும். இவற்றிற்கு ஆங்கிலத்தில் டொர்னடோ [Tornado] என்று பெயர்.

### சூறாவளியின் வேகம்

பல்வேறு சூறாவளிகள் குறைந்த பட்ச வேகமாக மணிக்கு 40 மைல்கள் என்ற வேகத்தில் சுழன்றடிக்கும். [அதாவது 64 கி.மீ வேகம்] மற்றும் அதிக பட்சமாக மணிக்கு 110 மைல்கள் என்ற வேகத்தில் சுழன்றடிக்கும் [அதாவது மணிக்கு 177 கி.மீ வேகம்] இந்த வேகம் சுமார் 250 அடி [75 மீற்றர்] நிலப்பரப்பை ஒரு வினாடியில் தாக்கும் வல்லமை படைத்தது.



நில சூறாவளி

சூறாவளிகள் சுழல ஆரம்பிக்கும் போது, எதிர்பாராதவிதமாகக் காற்றின் வேகம் 300 மைல்களாக இருந்தால் இந்த சூறாவளிகள் குறைந்தபட்சடம் 1 மைல் [அதாவது 1.6 கி.மீ] பரப்பளவு கொண்ட நிலப்பரப்பை ஒரு வினாடியில் துவம்சம் செய்து விடும். பின்னர் அப்படியே மெல்ல நகர்ந்து பல மைல்கள் நகர ஆரம்பிக்கும். இவைகள்தான் சூறாவளிகள் அதாவது வானத்தின் சுனாமி என்று கூடக் கூறலாம்.

### சூறாவளி - டொர்னடோ எவ்வாறு உருவாகிறது

ஒரு குறிப்பிட்ட திசையிலிருந்து வீசக்கூடிய குளிர்ந்த காற்று மற்றும் வறண்ட காற்றும் அதன் எதிர்திசையிலிருந்து வீசக்கூடிய சூடான காற்று மற்றும் ஈரப்பதமான காற்றுடன் மோதுகிறது. இப்படிப்பட்ட பல்வேறு வகையான காற்றுகள் ஒன்றுடன் ஒன்று மோதும்போது அதிலிருந்து வெளிப்படும் விசையே சூறாவளி எனப்படுகிறது. இந்த மோதல்கள் அதிகமான அளவு நடைபெறும்போது அந்த சூறாவளிக்கு பலம் கூடுகிறது. இதற்குப் பெயர்தான் டொர்னடோ எனப் படுகிறது.

### சூறாவளி காற்றின் அறிகுறிகள் என்ன?

டொர்னடோ என்ற பயங்கரமான சூறாவளி வீசுவதற்கு முன்னர் ஆலங்கட்டி மழைகள் ஏற்படுமாம். அந்த ஆலங்கட்டியின் தாக்கம் வீடுகளின் கூரைகளை துவம்சம் செய்துவிடுமாம்.

### சூறாவளி காற்றின் வேகம் என்ன?

வானத்தில் ஒரு பயங்கரமான சூறாவளி உருவாகிவிட்டால் அந்த சூறாவளி நிலத்தை தொடுவதற்கு எடுத்துக்கொள்ளும் நேரம் வெறும் 12-13 நிமிடங்கள் என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். 13 ஆம் வினாடியிலிருந்து இந்த சூறாவளி நிலத்தை பதம் பார்த்து அக்குவேறு ஆணிவேறாக பிடுங்கி அதை தனக்குள் வசப்படுத்திக்கொண்டு அதே வேகத்தில் நகர ஆரம்பிக்குமாம்.



புழுதி சூறாவளி

### சூறாவளி காற்றின் சக்தி எத்தகையது?

மனிதர்கள், கால்நடைகள் கூட இந்தச் சூறாவளியில் சிக்கி வீசப்படுவதுமுண்டு. சாலையில் நிறுத்தப்பட்டிருக்கும் வாகனங்கள் தூக்கி வீசப்பட்டு, வீட்டின் கூரைகளின் மேல் நிற்குமாம். அவ்வளவு பயங்கரமானது இந்த சூறாவளிகள்.

### சூறாவளியின் வகைகள்



நெருப்பு சூறாவளி

இந்த வகை சூறாவளிகள் SUPERCELL TORNADOES என்று அழைக்கப்படுகின்றன. இந்த வகை சூறாவளி மேகங்களை கருவாகக் கொண்டு சுழன்றடிக்கும். ஒரு பக்கம் மேகங்கள் மழைச்சாரல்களை வீசிக்கொண்டும் மற்றொரு பக்கம் சூறைக் காற்றை சுழன்றபடியும் வீசி பல கிலோமீற்றர்களை நாசம் செய்யக்கூடிய ஆற்றல் பெற்றிருக்கும். இந்த வகை சூறாவளிகள் ஒரு நிலத்தை தொட்டுவிட்டால் அதன் வேகம் 200 கி.மீ.இற்கும் குறைவாகஇருக்காது என்றுநிபுணர்கள் கூறுகின்றனர்.

### LANDSPOUT [லான்ட் ஸ்பவ்ட்]

நிலத்தில் உள்ள மணல் மேடுகளை பதம்பார்த்து மணலை வீசியவண்ணம் சுழன்றடிக்கும் இந்த கொடிய சூறாவளிக்கு லான்ட் ஸ்பவ்ட் என்று பெயர். இது முதலில் கண்ட SUPERCELL TORNADOES-களுக்கு அடுத்தபடியாக வீசக்கூடிய சூறாவளியாகும். இவைகள் கனத்த மேகங்களை இழுத்துக்கொண்டு சுழலாமல் பலவீனமான மேகங்களைக் கொண்டு காற்றை சுழன்றடிக்கும் ஆற்றலை பெற்றிருக்கிறது.

### GUSTNADO

இந்த GUSTNADO என்றழைக்கப்படும் சூறாவளி பலவீனமானதாகும். இவைகள் சற்று வேகம் குறைந்ததாகவும் விரைவில் நின்றுவிடக் கூடியதாகவும் காணப்படும். இந்த சூறைக்காற்றால் தூசுப்படலம் சற்று அதிகமாகக் காணப்படும். இந்த வகை சூறாவளிகளுக்கு மேகங்களுடன் நெருங்கிய தொடர்பிருக்காது. மாறாக காற்றின் வேகம்தான் இவைகளையும் உருவாக்குகிறது.

### WATER SPOUT [வோட்டர் ஸ்பவ்ட்]

வாட்டர் ஸ்பவ்ட் எனப்படும் இந்த வகை நீர்நிலைகளில் ஏற்படக்கூடிய சூறாவளிகளாகும். இவை நிலத்தில் வீசக்கூடிய SUPERCELL எனப்படும் அதிபயங்கர சூறாவளிகளின் வடிவமேயாகும். ஆனால் இவைகள் நீரில் சுழன்றடிப்பதால் இதனால் ஏற்படும் பாதிப்புகள் மனிதனுக்கு மிக குறைவுதான். இந்த சூறாவளிகள் நிலத்தை தொடுவதற்குள் அதன் சக்தியை இழந்து விடுகின்றன.

### DUST DEVILS
[டஸ்ட் டெவில்]

இந்த வகை சூறாவளிகளுக்கு டஸ்ட் டெவில் என்று பெயர் அதாவது தூசுகளின் சாத்தான். இந்த சூறாவளி அதிகமாக பாலைவனங்களில் வீசுவதுதான் வழக்கம். இவைகள் உச்சிவெயில் மற்றும் மதிய நேரங்களில் அதிகமாக வீசுகின்றன. இவைகள் மணிக்கு 70 மைல்கள் வேகத்தில் சுழன்றடிக்கும் ஆற்றல் பெற்றிருக்கின்றன. இவைகள் மிகவும் பலவீனமானசூறாவளிகளாகும் இவைகளுக்கு மேகங்களுடன் எந்தத் தொடர்பும் காணப்படாது. மாறாக காற்றின் அழுத்தம் இவ்வகை சூறைக் காற்றை வீசிக்கொண்டு சில நிமிடங்களில் தன் சக்தியை இழந்துவிடுகின்றன. தூசுப்படலத்தை தட்டிச் செல்வதால் கண்களுக்கு மிகவும் பாதிப்புகள் ஏற்படுத்துகின்றன. சற்று அதிகமாக வீசினால் ஒரு வாகனத்தை தலை குப்புற கவிழ்த்து விடும் ஆற்றல் பெற்றிருக்கும்.

### FIREWHILS [நெருப்பு சூறாவளி]

நெருப்புச் சுறாவளிகள் அதாவது சூறாவளி சுழலும் போது அதன் உராய்வினால் காய்ந்த இலை தழைகள் கருகி நெருப்பு உண்டாகிறது. இந்த நெருப்புச் சுவாலைகளை சூறாவளி தன்னுள் இழுத்தபடியே பிற இடங்களுக்கு பரவி நாசத்தை ஏற்படுத்தும் ஆற்றல் பெற்றுள்ளன. இவைகள் பெரும்பாலும் விவசாய நிலங்கள் மற்றும் காடுகள் உள்ள பகுதிகளில் பேரிழப்பை ஏற்படுத்தி விடுகின்றன. இந்த நெருப்புச் சூறாவளிகள் 1923ஆம் ஆண்டு ஜப்பான் நாட்டில் உள்ள டோக்கியோவின் Hifukusho&Ato என்ற கிராமத்தில் உருவானது. சுமார் 38,000 இற்கும் மேற்பட்ட மனிதர்களை 15 நிமிட இடைவெளியில் நெருப்பினால் பொசுக்கி அழித்துள்ளது. இவைகள் பெரும்பாலும் 10 முதல் 50 மீற்றர் அகல உயரமும் 10 அடி அகலம் கொண்டதாகவும் காணப்படும். இச்சூறாவளிகள் சுழன்றடிக்கும் போது காற்றின் வேகம் மணிக்கு 160 கி.மீ என்ற வேகத்தில் காணப்படும். 49 அடி உயரமுள்ள மரத்தை கூட சில வினாடிகளில் அழித்துவிடும்.

## மழையைப் பிடிக்குமா?

மழைத்துளி விழுந்து தெறிக்கும்
சிதறல்களில் கலங்கும் வெள்ளத்தில்
எனது முகம் பார்க்கிறேன்.
துண்டு துண்டாக
உடைந்துவிட்டது போல்
காண்பித்து,
மீண்டும் உடையாதது போல்
காண்பிக்கும்
மழை வெள்ளத்தின்
ஏமாற்றுப் புத்தியில்
எங்களது புத்தியும்
ஒன்றாக இருக்கிறது.

ஓடும் வெள்ளத்தில் நின்று கொண்டு
வெள்ளத்தைப் பார்க்கின்றபோது,
என்னை இழுத்துக் கொண்டு
செல்வது போல், எனது பார்வையை
பிரமிக்க வைக்கும் வெள்ளத்தில்
மீண்டும் மீண்டும் நிற்க
விரும்புகின்ற போதும்
எந்தவித வசதியுமின்றி
மீளக்குடியமர்ந்த
கூடாரத்துக்குள் நீ வருவதால்
வெள்ளத்தில் நிற்க விருப்பமில்லை

மழை பெய்யும்போது
பெரிய மழை என்று தெரியாமல்
ஓடும் வெள்ளத்தைப் பார்த்து
கூடுதலாகப் பெய்திருக்கிறது என்று
அறிந்துகொள்ளும்போதுதான்
தெரிகிறது
பரந்து பெய்கிறது மழை என்று.
முள்ளிவாய்க்காலில்
குறுகிய இடத்துக்குள்
அடைபட்டிருந்தபோது தெரியவில்லை
சர்வதேசத்திடம் பரந்துபட்டு
எமது செய்தி போய்ச் சேரும் என்று.

உன்னைப் புயல், வெள்ளம்
பெரும் மழை, தூறல் மழை என்று
பல வடிவங்களில் அடையாளப்படுத்தும்
திறமை
உனக்கு மட்டும் இருக்கிறது.
ஆனால் ஒரே இலக்கில்
இருந்துகொண்டு
கடைசிவரை போராடிய
பெருமை பிரபாகரனைச் சாரும்

தேடாத நாள்களில்
நீ வருகின்றபோது
பிடிக்காதொன்றாகவும்,
தேடின நாள்களில்
நீ வர மறுக்கின்றபோது
பிடிக்கும் ஒன்றாகவும்
இருக்கிறாய்.
எப்பொழுது
எங்களுக்குப் பிடிக்கும்படி
நீ செயற்படப் போகிறாய்.

வன்னிக்குளங்கள் எல்லாம்
வற்றி வறட்சி நிலவியபோது
எங்கிருந்தாய்.
எங்களில் தாங்கும் சக்தியை
மீறும்போதுதான்
உன்னால் திரும்பிப் போக முடிவதில்லை

- பிறைவாணன்



(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## நூல் - 'நங்கூரம்'




**வா**சிப்பின் மகத்துவம் உணர்ந்தோர் அந்த வாசிப்பை மேம்படுத்தச் சொல்லும் கருத்துக்களைக் கூட வாசித்துத்தானே பெறவேண்டும். வாசகர்களின் இன்றைய அருகும் நிலை கண்டு ஆதங்கமடையும் புத்தகக்கூடம் எனும் நூல் மையத்தின் விற்பனை உரிமையாளர் தெ.ரவீந்திரன் அவர்களுடனான நேர்காணல் மிகவும் பயனுடையதாகும். இது நங்கூரம் சமூக அறிவியல் ஏட்டின் புரட்டாதி, ஐப்பசி 2012 இதழில் இடம்பெற்றுள்ளது. அட்டையை அலங்கரிக்கும் நீல் ஆம்ஸ்ட்ரோங் நிலவிருக்கும் வரை நினைவிருக்கும் உன்னதராக உள்ளார் என்பதை இ.சர்வேஸ்வரா விளக்கியுள்ளார்.

தொண்டமான் ஆறு தொண்டையை நனைக்குமா? என்ற கேள்வியை எழுப்பி மா.மோகனகிருஷ்ணன் நன்னீரைத் தேக்கும் வகை செய்யப்பட்ட புனரமைப்புக்களால் ஏற்படும் சாதக பாதக நிலைமைகளை விவரித்துள்ளார். ''வினாக்களுக்கான விடையளிக்கும்'' தெரியுமா? எனும் பகுதியில் பொ.ஐங்கரநேசன் அவர்களின் விடைகள் ஆழமானவையாகவும் அர்த்தமுள்ளவைகளாகவும் அமைந்துள்ளன. நடுப் பக்கம், தகவற் களஞ்சியம் என்பனவும், இ.இராஜேஸ்கண்ணன் எழுதிய பூக்கள் சிறுகதையும் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன. நோபல் விருது பற்றி ஈ.ஆர்.திருச்செல்வம், பழிசுமக்கும் பல்லிகள் பற்றி பொ.ஐங்கரநேசன் எழுதிய கட்டுரைகள் சிறப்புப் பெறுகின்றது. அத்துடன் கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கான போராட்டம் குறித்து 'யுகபாரதி' எழுதிய கவிதை நங்கூரத்தின் சமூக அறிவியல் சிந்தனைக்கு வளம் கூட்டுகின்றன. நங்கூரத்தின் புரட்டாதி - ஐப்பசி 2012 இதழ் முழுமையாக வாசிக்கவும் சிந்திக்கவும் எமது சூழலைச் சீராக்கவும் தூண்டும் என நம்பலாம்.

## நூல் - 'நல்லதோர் உணவு செய்வோம்'




**யா**ழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சை நிலையம் நல்லதோர் உணவு செய்வோம் என்ற நூலை வெளியிட்டுள்ளது. அனைவருக்கும் உகந்த, 36 புதிய ஆரோக்கியமான உணவுகளைத் தயாரிக்கும் முறைகள் பற்றி சொல்லப்பட்டுள்ளன. அவை உடற்பருமனானோர், நீரிழிவு நோயாளர், இரத்த அழுத்தமுள்ளோர், இதய நோயாளர், கர்ப்பிணிகள், குழந்தைகள் எனப் பலரும் சுவைத்து உண்ணவும், ஆரோக்கியமாக வாழவும் ஏற்ற உணவுகளாகும்.

பிரதான உணவு வகைகளில் சைவம், அசைவம் என்பவை வேறுபடுத்தப்பட்டு அவற்றைத் தயாரிக்கும் முறைகள் விவரிக்கப்பட்டுள்ளன. சிற்றுண்டி வகைகளையும் அவ்வாறே வகுத்துத் தயாரிக்கும் முறைகள் தரப்பட்டுள்ளன. பான வகைகளும், உலர் உணவு வகைகளும் ஒவ்வொருவரும் விரும்பும் வகையில் தேர்ந்து ஆக்கி உண்ணும் சிறப்புடன் நூலில் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு உணவும் தயாரிக்கும் முறைகளையும் அவை பற்றிய குறிப்புக்களையும் சமையற்போட்டி ஒன்றின் மூலம் தேர்வு செய்துள்ளமை இந்நூல் சிறக்கக் காரணமாகியுள்ளதெனலாம். ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டி எழுப்பவும், உண்ணும் உணவிலும் புதியனவும் சத்துள்ளனவுமாக உணவுகளைத் தயாரிக்கவும், ஆர்வமூட்டும் இந்நூலை ஒவ்வொரு சமையலறையிலும் பேணுதல் நல்லதாகும். இந்நூல் வெளிவரக் காரணமாகச் செயலாற்றிய வைத்திய நிபுணர்களும் ஏனையோரும் பாராட்டுக்குரியவர்களே!



## விவசாயிகளுக்காக உழைத்த சேவையாளன் அமரர் முதலியார்



**சி.**பொ.வ.மா.க.முதலியார் ஒரு விவசாயி, சமூக ஆர்வலர், அரசியல் அபிமானி எல்லாவற்றுக்கும் மேலாக மனிதநேயம் மிக்க - அன்புள்ளம் கொண்ட ஒரு பெருந்தகையாளர் இவர் 14-01-1934 இல் மானிப்பாய் கட்டுடையில் அவதரித்தார். இளமைக்காலத்தில் ஆங்கில மொழியில் கல்வியைக் கற்று தேறி பன்முக பார்வை கொண்ட பன்முக சேவையாளனாக விளங்கினார். அந்தக் காலப்பகுதியில் இருந்து இன்று வரை அதாவது கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக விவசாயத்தை தனது மையத்தொழிலாகக் கொண்டு வடபால் பிரதேச விவசாய மக்களின் வளர்ச்சி - அபிவிருத்திக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்து செயலாற்றியவர். இக்காலங்களில் விவசாயிகளுக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்கும் அவர்களது பாதிப்புக்களுக்கும் தன்னாலான உதவிகளைச் செய்து வந்தார்.

இதனால் அவருக்கு விவசாயிகளின் தோழன், விவசாயிகளின் மன்னன், விவசாயிகளின் தந்தை போன்ற பட்டங்களும் விருதுகளும் அரச இலாகாவினாலும் பொது அமைப்புக்களினாலும் காலத்திற்கு காலம் வழங்கி கௌரவிக்கப்பட்டன.மேலும் நீதி அமைச்சினால் சமாதான நீதிவான், சிரேஷ்ட மத்தியஸ்தர் போன்ற பதவிகள் அவரை நாடி வந்தன.

இதனைவிட யாழ்.மாவட்டத்தின் தேசவள விவசாயிகள் சம்மேளத்தின் முதல் தலைவராக விளங்கிய முதலியார் யாழ்.மாவட்டத்தை மட்டும் பிரதிபலித்து நிற்கவில்லை.அகில இலங்கையில் உள்ள விவசாயிகளுக்கும் நன்மை கிட்ட வேண்டும் என்ற ரீதியில் பொதுமைவாதியாக செயற்பட்ட செயல் வீரன்.

இறுதியாக அதாவது சாவை ஏற்றுக் கொள்வதற்கு இருவாரத்திற்கு முன்னர் நாடுதழுவிய ரீதியில் உள்ள 98 ஆயிரம் விவசாயிகளுக்கும்,

### நீத்தார் நயப்புரை

அடிப்படை ஓய்வூதியமாக 3000 ரூபா வழங்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2013 வரவு செலவு திட்ட ஏற்பாட்டில் ஒதுக்கீடு செய்ய முன்வரவேண்டும் என கடிதம் அனுப்பி இருந்தார்.மூத்த பிரஜைக்கான தங்க விருதும் கிண்ணமும் ஹெல்ப்பேஜ் (Help Age) நிறுவனத்தினால் கடந்த 2007 ஆம் ஆண்டில் முதன் முதலாக ஒரு தமிழனுக்கு - முதலியார் ஐயாவுக்கு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

யாழ்.கிளிநொச்சி குடிதண்ணீர்த் திட்டம், வடபகுதிக்கு திசைதிரும்பி அதன் தன்மையை விளக்குவதற்காக முன்னாள் தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லாவை அழைத்து விளக்கியதுடன் பொக்கணையில் இருந்து கட்டுடை - நவாலி குழாய் மூலமான குடிதண்ணீர் திட்டத்தை ஆரம்பிப்பதற்கும் நிதி உதவியை பெற்றுக் கொடுத்த பெருமை இவரையே சேரும்.கட்டுடை சைவ வித்தியாசாலை, அட்டகிரி சைவ வித்தியாசாலை, நவாலி மகாவித்தியாலயம் போன்ற பாடசாலை அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் உதவியவர்.

இளைஞர் - சிறுவர் எனப் பல அணிகளை கிராமிய மட்டத்தில் உருவாக்கியவர். இதனால் தான் இவர் மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத் தலைவர், கமநல சேவைகள் நிலைய கமக்குழுத் தலைவர்,கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் என பல தலைமைப் பதவிகளை வகித்தார். இவருக்கு மாவிட்டபுரத்தை சேர்ந்த மங்கயர்க்கரசி என்பவர் மனைவியாக வாய்க்கப் பெற்றார். அவரும் முதலியாருடன் ஒன்றித்து பல்வேறு பணிகளைச் செய்தவர்.

தேசத்தின் மணிமகுடமாக செயற்பட்ட முதலியார் ஐயாவுக்கு அவரது சேவைக்காக, தேசகீர்த்தி என்ற பட்டம் வழங்கப்பட்டது. இவ்வாறாக விவசாயிகளுக்காக தன்னை அர்ப்பணித்து இறுதிவரை விவசாயிகளின் தோழனாக இருந்து கடந்த 14 ஆம் திகதி இறையடி சேர்ந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய மானியூர் மருதடியானின் பாதங்களை வணங்குவோம்.

**செ.ரமேஷ்(ச.நீ),**
**செயலாளர்,**
**வேலணை பிரதேச சபை.**

## புத்தகங்களின் வாசனை

**சி**ல வாசனைகள் நம் ரத்தத்தோடு கலந்திருப்பவை, சில வாசனைகள் இரசனையோடு கலந்திருப்பவை. புத்தகங்களின் வாசனை என்பது சிலரின் ரத்தத்தோடும் இரசனையோடும் கலந்திருப்பவை. புத்தகங்களை நேசிப்பவர்கள் மனிதர்களை நிச்சயம் நேசிப்பவர்களாக இருப்பார்கள். புத்தகங்கள் வாயிலாக அவர்களுக்குத் திறந்திருக்கும் உலகம் அதி அற்புதமானது. கொடும் வெயிலை சபித்தவாறே இருப்பவர்களுக்கு ரஷ்யாவின் தெருக்களில் கொட்டும் பனியின் சிலிர்ப்பை உருவாக்கித் தருபவை.

வாசிப்பு அனுபவம் என்பது தியானம் போன்றது. தீவிரமாக எதையாவது படித்துக் கொண்டிருக்கையில் பக்கத்தில் என்ன நடக்கிறது என்று கூட சிலருக்குத் தெரியாது. புத்தகங்கள் நம் அறிவுக் கண்களை கூர்மையாக்கும். சில புத்தகங்கள் அகக் கண்களை திறந்து வைக்கும்.

புத்தகங்களைச் சேகரிப்பது கூட சுலபம் தான். ஆனால் அதை ஒழுங்குபடுத்தி பத்திரமாக வைத்திருப்பது சிரமமான வேலை. நம்மிடம் இருக்கும் ஐம்பது புத்தங்களையோ, ஐயாயிரம் புத்தகங்களையோ அகர வரிசையாக அட்டவணைப்படுத்தி அழகாக அடுக்கி தூசி படியாமல் புத்தகத்தை பாதுகாத்து வைத்திருப்பவர் எத்தனை பேர்? அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் புத்தகங்களைப் பார்த்தாலே வாசிக்கும் ஆசை தோன்றும்.



ஏனோ தானோ எனப் புத்தகங்களைக் குவியலாக போட்டு வைத்திருந்தால் சில வருடங்களில் அவை பொலிவிழந்து, பக்கங்கள் இற்றுப் போய் வாசிக்க பயனற்றுப் போய்விடும். பணமோ புத்தகமோ பொருளோ அதற்குரிய மரியாதையை நாம் தந்தால் தான் நம்மிடம் தங்கும்.

புத்தகங்களை எப்படி பத்திரமாக வைத்திருப்பது? நூலகங்களில் வைத்திருப்பது போல் (சிறுகதை, கவிதை, வரலாற்றுப் புத்தகங்கள், அறிவியல், [illegible] வகைப்படுத்திய பின் அட்டவணைப்படுத்தி ஒவ்வொரு புத்தகத்தின் அடிப்பகுதியில் நம்பர் எழுதிய தாள்களை ஒட்டிவிடலாம். உதாரணமாக சுஜாதா நாவல்களை நம் வீட்டில் தேட அத்தனை புத்தகத்தையும் கலைத்துப் போடாமல் அதன் நம்பர் 256 என ஏற்கனவே எழுதி ஒட்டியிருப்பின் (அந்த நம்பரை நோட்டில் அல்லது சிறிய ரிஜிஸ்டரில் குறித்து வைத்திருக்கவேண்டும்) 256 இருக்கும் வரிசையில் எளிதாக எடுத்துவிடலாம். மேலும் நண்பர்களுக்கு புத்தகங்களை இரவல் கொடுக்க நேரும் போது, 256 பக்கத்தில் யாரிடம் கொடுத்தோம் என்று சிறு குறிப்பு எழுதி வைத்துவிடலாம்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவெடுக்கும் திறன்

ஒரு பெரிய கிராமம். அந்தக் கிராமத்தில் ஒரு பண்ணையார் வீடு இருந்தது. அதுதான் அந்தக் கிராமத்தில் பெரிய வீடு.

ஒரு நாள் ஒரு திருடன் அந்தக் கிராமத்துக்குச் சென்றான். அங்கு சுற்றிப் பார்த்தான். இன்றைக்கு ராத்திரி இந்த வீட்டிலேதான் எமது தொழிலை ஆரம்பிக்க வேண்டும் என்று முடிவு செய்தான்.

அர்த்த சாமம். அவன் மெதுவாக சுவர் ஏறிக் குதித்து அந்தப் பெரிய வீட்டுக்குள்ளே புகுந்தான். அங்கே போய்ப் பார்த்தால் முக்கியமான இடங்களில் எல்லாம் காவலுக்கு ஆள்கள் நின்றனர். சரி. இந்த வீட்டில் என்னால் திருட முடியாது என்று தீர்மானித்து விட்டு மெதுவாக வந்த வழியே திரும்பினான்.

அந்த வேளையில் காலில் ஏதோ தட்டுப்பட என்னவென்று குனிந்து பார்த்தான். ஒரு பெரிய வெங்காய மூட்டை. சரி வந்ததுக்கு வெறுங்கையோடு திரும்ப வேண்டாமென்று கையிலே இருந்த ஒரு பெரிய பை நிறைய அதை அள்ளிப் போட்டுக் கொண்டு புறப்பட்டான். அந்த வேளையில் 'தொப்' என்று கழுத்தில் ஒரு கை வந்து விழுந்தது. ஆள் மாட்டிக் கொண்டான்.

காவலாளிகள் அவனைப் பிடித்து வைத்தனர். மறுநாள் காலையில் அந்தத் திருடனை பண்ணையார் முன்பாகக் கொண்டு போய் நிறுத்தினர்.

''ஐயா... இந்த ஆள் இரவு எங்க வீட்டில் திருட வந்தான். வெங்காயத்தை அள்ளிக் கொண்டு சென்றபோது எங்களிடம் மாட்டிக் கொண்டான்'' என்றனர்.

''என்னப்பா இவர்கள் சொல்வது உண்மைதானா?'' என்று கேட்டார் பண்ணையார்.

''ஆமாம்'' என்று ஒத்துக் கொண்டான் அந்தத் திருடன்.

பண்ணையார் சிறிது யோசனை செய்தார். அதன் பின்னர் தீர்ப்பு வழங்கினார்.

''இதோ பாரப்பா... நீ இங்கே திருட வந்தது குற்றம்... அதுக்காக நீ நூறு ரூபா அபாரதம் செலுத்தவேண்டும். அல்லது நூறு கசையடி வாங்க வேண்டும் அல்லது நீயே திருடிய அவ்வளவு வெங்காயத்தையும் பச்சையாக என் கண்முன்னே சாப்பிட வேண்டும். இவற்றில் எந்தத் தண்டனையை ஏற்றுக் கொள்வது என்பது பற்றி நீயே யோசித்து முடிவு எடுத்துக் கொள்ளலாம்!'' என்று சொன்னார்.

திருடன் சிறிது நேரம் யோசனை செய்தான்.

''ஐயா.. நான் வெங்காயத்தையே சாப்பிடுகின்றேன்!'' என்றான்.

''சரி'' என்றார் பண்ணையார்.

அவன் சாப்பிட ஆரம்பித்தான். ஒவ்வொன்றாக எடுத்துச் சாப்பிட அவன் வாய் எரிய ஆரம்பித்தது. கண்கள் இரண்டும் சிவந்து போயின. கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வழிய ஆரம்பித்தது. ஒரே எரிச்சல். அவனால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. வெங்காயம் அரைவாசி கூட சாப்பிட்டு முடியவில்லை. பார்த்தான். ''சரி... இது எனக்குச் சரிப்பட்டு வராது'' என்று முடிவு எடுத்தான்.

''ஐயா.. என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்... இது என்னாலே முடியாது போல இருக்கின்றது. பேசாமல் எனக்கு நூறு சாட்டையடியே கொடுத்திடுங்கள்!'' என்றான்.

அவரும் சரி என்றார்.

சாட்டை அடி விழ ஆரம்பித்தது...

அறுபது அடிகள் விழும் வரைக்கும் தாங்கினான். அதற்கு மேல் அவனால் தாங்க முடியவில்லை.

''ஐயா என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்...'' என்று மறுபடியும் பண்ணையார் காலில் விழுந்தான்.

''ஐயா... இதுவும் எனக்குச் சரிப்பட்டு வராது போல இருக்கின்றது... பேசாமல் நூறு ரூபா அபராதம் கட்டுகிறேன்! என்றான். அதேமாதிரி பணத்தை எடுத்துக் கொடுத்து விட்டுச் சென்றான். இவ்வாறு ஒரு கதை உண்டு.

இந்தக் கதையை உலகப் புகழ்பெற்ற மனோதத்துவ மேதை எம்.ஸ்காட் பெக் ஒரு உதாரணமாக எடுத்துச் சொல்கிறார். எதுக்கென்று சொன்னால்...



முடிவெடுக்கும் திறன்'' என்பதை விளக்குவதற்காக முடிவெடுக்கும் திறன் எங்கள் ஒவ்வொருத்தருக்கும் மிகவும் அவசியம்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# வாசகர் திருமுகம்

## இலவச சிகிச்சையை பெறமுடியுமா?

யாழ்.போதனா வைத்தியசாலையில் இலவச சேவை சிகிச்சை நடைபெறுகின்றதா? அல்லது லஞ்சசேவை சிகிச்சை நடைபெறுகின்றதா என்பது புரியாமல் இருக்கின்றது.

இரத்தப் பரிசோதனை செய்வதற்காக வைத்தியசாலைக்கு ஒருநாள் சென்றிருந்தேன். அங்கு இதனைப் பதியும் ஊழியர் ஒருவர் தனியார் மருந்தகத்தில் இரத்தம் சேகரிக்கும் நான்கு குழாயினை வாங்கி வருமாறு கூறினார். ஏனைய நோயாளர்களும் இதே மாதிரி நான்கு குழாய்கள் வாங்குமாறு பணிக்கப்பட்டனர். எல்லோரும் அவற்றை வாங்கி வந்து கொடுத்தோம்.

இதேநேரம் பாடசாலை மாணவன் ஒருவனைக் கூட்டி வந்த தாய் ஒருவர், இந்தக் குழாயை வாங்கி வரவில்லை. இவரது பிள்ளைக்கு இரத்தம் எடுக்கும் வைத்தியர். ''குழாய் வாங்கவில்லையா?'' எனக் கேட்ட போது ''இல்லை'' என்று சொல்ல குழாய்கள் இருந்த ஒரு பெட்டியில் குழாய் ஒன்றை எடுத்து இரத்தத்தை எடுத்துள்ளார்.

ஏற்கனவே வைத்தியசாலையில் உள்ள இரத்தக் குழாயை கடையில் வாங்குவதற்கு நிர்ப்பந்தித்தது ஏன்?

இதேவேளை அங்கு கடமை புரியும் ஊழியர் ஒருவர் ''ஏன் கடையில் காசு கொடுத்து வாங்குகிறீர்கள், இங்கு அதற்கான குழாய்கள் இருக்கின்றன. ஏன் வைத்தியசாலை ஊழியர்களுக்கு பிழைப்புக் காட்டுகின்றீர்கள்'' எனக் கேட்டுள்ளார்.

அப்படியாயின் மேலதிகமாக வாங்கும் இக்குழாய்கள் மீண்டும் அதே மருந்தகத்துக்குச் செல்கின்றதா? என்று நோயாளிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேலும், இச் சத்திரசிகிச்சைக்குச் செல்லும் நோயாளர்களுக்கு ஒவ்வொரு கிளினிக்குக்கும் எப்ப வரவேண்டும் என்று எழுதப்பட்ட ஓர் அப்பியாசக் கொப்பியை அவர்கள் வழங்குகின்றார்கள். இக் கொப்பிக்காக 40 ரூபா அறிவிடுகிறார்கள். ஆனால் இக் கொப்பியை வெளியில் நோயாளர்கள் வாங்கினால் 15 ரூபாவிற்கு வாங்கலாம்.

ஏன் இப்படி? இதனை வைத்தியசாலை நிர்வாகம் கவனிக்காமல் கண்டும் காணாமல் இருக்கின்றதா?.

இலவச வைத்தியசேவை என்னும் பெயரில் லஞ்ச வைத்திய சேவை இங்கு நடக்கின்றதா? மேற்படி கொப்பிகளைத் தொகையாகப் பெறும் போது 15 ரூபா இற்கும் குறைவாகவே இவர்கள் பெற்றுக் கொள்கிறார்கள். அத்துடன் மேலதிகமாக இருக்கும் இரத்தப் பரிசோதனைக் குழாய்களும் மீண்டும் குறிப்பிட்ட மருந்தகத்துக்குச் செல்கின்றதா? என்பதும் புரியவில்லை.

**மு.சந்திரகுமார், சங்கானை**

## சேமக்காலை ஒன்றை அமைத்துத் தருவார்களா?

அரியாலை மக்களுக்கான சேமக்காலை ஒன்றை அமைத்துத்தருவார்களா? யாழ்.நகரில் கத்தோலிக்க மக்களின் பாவனைக்கென கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலை மட்டுமே உள்ளது. யாழ்.நகரிலிருந்து கிழக்கு நோக்கிய இப்பகுதியில் வசந்தபுரம், மணியந்தோட்டம்,முள்ளி, நாவலடி, உதயபுரம், பூம்புகார், எனப் பல கிராமங்கள் உள்ளன. இங்கெல்லாம் பரவலாக கத்தோலிக்க ஆலயங்களும் உள்ளன.

இ[illegible]ள் பல கி.மீ தூரம் கடந்தே இறுதிச் சடங்குகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது.

எனவே இப்பகுதியில் வாழும் கத்தோலிக்க மக்களின் தேவை கருதி ஒரு சேமக்காலையை அமைக்க உதவ முன்வருவார்களா?. மரித்தோரை நினைவு கூரும் கார்த்திகை மாதத்தில் அப்பகுதி மக்களும் நினைவு கூர வழியினை ஏற்படுத்தித் தருவார்களா?

**ந.மரியநாயகம்**
**கொழும்புத்துறை**

## உரிய வேலை வாய்ப்பை பகிர்ந்தளிப்பார்களா?

பட்டதாரிப் பயிலுநர்களாக இணைக்கப்பட்டு மூன்று மாதங்கள் கழிந்தும் உரிய வேலை வாய்ப்புக்கள் பகிர்ந்தளிக்கப்படவில்லை. மூப்பு, பட்டத்தகைமை எவையும் கருத்தில் கொள்ளப்படவில்லை. அரசியல் கட்சியின் செல்வாக்குகளின் அடிப்படையில் கணிசமானோர் பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் இணைக்கப்பட்டுள்ளனர்.

மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை முதலிய மாவட்டங்களில் ஆசிரியர் சேவையில் பட்டதாரிப் பயிலுநர்கள் உள்வாங்கப்பட்டும் அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் குறிப்பாக கலைத்துறைப் பாடங்களான அரசியல், வரலாறு, மெய்யியல், ஆலோசனை வழிகாட்டி அடங்கலான முக்கிய பாடங்களுக்கு பாடசாலைகளில் முழுமையான வெற்றிடங்கள் உள்ளன.

குறித்த பாடங்களைக் கற்க மாணவர்கள் விருப்புடன் இருந்தும் , அதற்கான ஆசிரியர்கள் இன்மையால் அந்தப் பாடங்களை நடத்த முடியாத சூழலும் தோன்றியுள்ளது.

பல்கலைக்கழக பேராசிரியர்கள் , கல்வி அதிகாரிகள் உரிய தரப்பினருக்கு அழுத்தங்களையோ, வேண்டுகோள்களையோ விடுக்காதிருப்பது எமக்கு பலத்த ஏமாற்றத்தைத் தந்துள்ளது.

பதவிக் கதிரைகளை பலப்படுத்துவதில் மாத்திரம் ஆர்வம் கொள்ளுவதை விடுத்து யாராவது ஒரு கல்வி அதிகாரி பொறுப்புணர்ச்சியுடன் பதிலளிப்பாரா? உரிய வெற்றிடங்களை நிரப்ப முன் வருவாரா?

அசாதாரண சூழ் நிலையில் கல்வியைத் தொடர்ந்த எமக்கு சமூகத்தில் ஏற்பட்டுள்ள சவால்கள் பெரும் ஏமாற்றத்தை தந்துள்ளது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தில் அக்கறை எடுத்து எமக்கு வழியினை ஏற்படுத்தி தருவார்களா.. ?

**பட்டதாரிப் பயிலுநர்.**

## சூழலைத் துப்புரவாக வைத்திருப்போம்

மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் எமது சூழலை நாமே பாதுகாப்போம். சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதன் ஊடாக நோயிலிருந்து எம்மைப் பாதுகாப்போம். மழைகாலங்களில் நுளம்புப் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுமாயின் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துக் காணப்படும்.

எனவே துப்புரவாக எமது ஊரினை வைத்துக் கொள்ள நாமே முன்வந்து ஒன்றாகச் சேர்ந்து துப்புரவுப் பணியில் ஈடுபடுவோம். இதன் ஊடாக நோயினால் வீணாக உயிரிழப்பதை இல்லாமல் செய்வோம். இன்றிலிருந்து ஒவ்வொரு பிரதேச மக்களும் ஒன்று கூடி பிரதேசங்களை துப்புரவாக வைத்திருக்கும் பணிகளில் ஈடுபடுவோம்.

**கஜன், அராலி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளிர் காலத்தில் சருமப் பாதுகாப்பு



குளிர் காலத்தில் பலருக்கு உடம்பு முழுவதுமே வறண்டு காணப்படும். அதிலும் இயற்கையிலேயே வறண்ட சருமம் உடையவர்களுக்கு கேட்கவே வேண்டாம். முகம் அதிகளவில் வறண்டு போய்விடுவதால், ஒருவித அசெளகரியத்தை அவர்கள் உணர்வார்கள்.

இத்தகையவர்களுக்காகவே கைகொடுக்கிறது ஓரேஞ் பழமும், தேனும். வறண்ட சருமம் உடையவர்கள் மட்டுமல்லாது எண்ணெய் வடியும் முகத்தை கொண்டவர்களுக்கும் இந்த இரண்டும் அற்புத மாற்றத்தை ஏற்படுத்திவிடும்.

ஓரேஞ் பழத்தில் சாத்துக்குடி ஒருவகையென்றால், சுளை சுளையாகக் காணப்படும் கமலா ஓரேஞ் இந்தக் குளிர் சீசனில் அதிகமாகவே சந்தைகளில் கிடைக்கும்.

விற்றமின் ஏ மற்றும் சி சத்துக்கள் அதிகம் நிறைந்த இந்தப் பழத்தைத் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், மேனி மினு மினுப்படைவது உத்தரவாதமான ஒன்று என்கிறார்கள் அழகுக் கலை நிபுணர்கள்.

பொதுவாக மேனி வறண்டுபோகாமல் இருக்க வழக்கமாகக் கூறப்படும் ஆலோசனை, அதிகளவில் தண்ணீர் அருந்துவது. அது ஒரு வகையில் பலனளிக்கும் என்றாலும், ஓரேஞ்சு மற்றும் தேன் ஆகியவை புரியும் மாயாஜாலம் அதி அற்புதமானவை என்கிறார்கள் நிபுணர்கள்.

ஓரேஞ் பழச் சுளைகளை உண்டுவிட்டு அதன் தோலை தூக்கி எறிந்துவிடாமல், அதனை காயவைத்து பவுடராக்கி தண்ணீருடன் குழைத்து முகம் மற்றும் கைகளில் தடவி, சிறிது நேரம் கழித்து கழுவினால் வறண்ட சருமம் புத்துணர்ச்சி பெற்றுவிடும்.

அதேபோன்று அரை மூடி எலுமிச்சை பழச்சாறில் ஒரு குவளை சுடுநீரைக் கலந்து, அதனுடன் ஓரிரு தேக்கரண்டி தேனைக் கலந்து காலையில் வெறும் வயிற்றில் குடித்து வந்தால், மேனி மினு மினுப்படைவதோடு, உடம்பில் உள்ள தேவையற்ற சதைகள் குறைந்து உடம்பும் ''சிக்''கென்று இருக்கும்.

எண்ணெய் சருமம் உடையவர்கள் ரோஸ் தண்ணீரை ஒரு பஞ்சில் நனைத்து தடவ, சருமம் மினு மினுக்கும்.

தோலில் தழும்புகள், கீறல் வடுக்கள் போன்றவை உள்ளவர்கள் தக்காளிப் பழக்கூழுடன், தயிர் கலந்து தடவி சிறிது நேரம் காயவிட்டு பின் கழுவி வர தழும்புகள் மறையும்.

# அழகாக இருக்க வேண்டுமா?

## மனதில் அன்பை வெளிக்காட்டுங்கள்



இயற்கையின் படைப்பில் அனைவரும் அழகுதான். அழகு என்பது நிறத்தால் தோற்றத்தால் வருவது அல்ல. உள்ளத்தின் தூய்மையே அன்பே முகத்தில் அழகை, அமைதியை வெளிப்படுத்தும்.

அதற்காக தோற்றத்தை சீர்கேடாக வைத்துக் கொள்ளலாமா என்று கேட்கவேண்டாம். ஒவ்வொருவரும் தன் மேனியைப் பேணிக்காத்து நோயின்றி என்றும் இளமையுடன் முதுமையை எதிர்கொள்வதே அழகு.

அனைவரும் தன் தோற்றத்தை அழகுபடுத்திக் கொள்ளவே விரும்புவர். அதிலும் இளம் பருவத்தினருக்கு தன்னை அழகுபடுத்திக்கொள்வதில் நாட்டம் அதிகம் இருக்கும்.

அதற்காக பல இரசாயனம் கலந்த கிரீம்களைத் தடவி தன்னை அழகுபடுத்திக் கொள்வர். இது சிலருக்கு ஒவ்வாமையை ஏற்படுத்திவிடும். முகத்தில் சொறி, கறுப்புத் திட்டு, முகச்சுருக்கம், கண்களில் கருவளையம், முகப்பரு, தேமல் எனப் பலவகையான பாதிப்புகள் ஏற்படும்.

சிலருக்கு பலவீனத்தாலும், ஈரல், இருதயம், குடல் பாதிப்புகளாலும் இவ்வகையான ஒவ்வாமை உருவாகலாம். முகத்தின் சருமம் மிகவும் மென்மையானது. அதனாலேயே எந்த ஒரு நோயும் முதலில் முகத்தில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. மனிதனின் அகத்தை மட்டுமல்ல, நோயையும்கூட முகத்தில் பார்த்து விடலாம்.

இவ்வாறு வெளிப்புறத்தாலும், உட்புறத்தாலும் ஏற்படும் பாதிப்பால் உண்டான தோல் ஒவ்வாமை நோய்களைக் குணப்படுத்த மருத்துவர்கள் இருவகையான மருந்துகளைக் கொடுப்பார்கள்.

ஒன்று மேற்பூச்சு மருந்துகள், மற்றொன்று உட்கொள்ளும் மருந்துகள். அவ்வாறான மருந்துகளைச் சாப்பிடும்போதோ அல்லது பூசும்போதோ பாதிக்கப்பட்ட உறுப்புகள் குணமாகும். தோலில் ஏற்பட்ட பாதிப்புகள் குறையும்.

# லிப்ஸ்டிக்குப் பதிலாக

## லிப் கிளாஸ் வீட்டில் எளிதாகத் தயாரிக்கலாம்

லிப்ஸ்டிக் போட்டு உதட்டை அழகுபடுத்துவதற்கு பெரும் பாலான பெண்கள் விரும்புகின்றனர். இரசாயனப் பொருள்கள் அடங்கிய லிப்ஸ்டிக் ஒவ்வாமையை ஏற்படுத்தி உதடு புண்ணாகிவிடும். எனவே லிப்ஸ்டிக் உபயோகிப்பதற்கு அச்சப் படுபவர்கள் லிப் கிளாஸ் உபயோகிக்கலாம். இது உதட்டில் பயன்படுத்தும் வர்ணத்தில் இருக்காது. எனினும் உதடு அழகாக இருக்கும். கடைகளில் விற்பனை செய்யப்படும் லிப் கிளாஸ் வாங்குவதை விட வீட்டில் நாமே சிவந்த உதட்டிற்கு ஏற்ப லிப் கிளாஸ் தயாரிக்கலாம் என்கின்றனர் அழகியல் நிபுணர்கள்.

லிப் கிளாஸ் தயாரிக்க தேனீக்களின் மெழுகு, விளக்கெண்ணெய், பீட்ரூட் ஜூஸ், போதுமானது. 2 தேக்கரண்டி தேனீக்களின் மெழுகை ஒரு பாத்திரத்தில் போட்டு சூடேற்றவும். உருகிய உடன் ஸ்டவ்வை நிறுத்திவிடவும். இதனுடன் ஒரு தேக்கரண்டி விளக்கெண்ணெய்யைக் கலந்து நன்றாக கிரீம் பதத்துக்கு வரும் அளவிற்கு கலக்கவும். இந்தக் கலவையில் பீட்ரூட் சாற்றைச் சேர்த்துக் கலக்கவும். இந்த கலவை சிவப்பு நிறத்தில் மினுமினுப்போடு வரும். அதிகளவு நிறம் வேண்டும் என்பவர்கள் பீட்ரூட் சாறை அதிகரிக்கலாம். இயற்கை லிப் கிளாஸ் தயார். இந்த லிப் கிளாஸை சுத்தமான பெட்டியில் போட்டு குளிர்ச்சியான இடத்தில் வைக்கவும்.

இந்த லிப் கிளாஸை தொடர்ச்சியாகப் பயன்படுத்தலாம். பக்க விளைவுகள் ஏற்படாது. இந்த லிப் கிளாஸ் உடன் தேன், வெனிலா, எசன்ஸ் ஆகியவைகளைக் கலந்தால் வாசனையாகவும், உதட்டில் சுவையாகவும் இருக்கும். செந்நிற லிப் கிளாஸ் வேண்டும் என்பவர்கள் ஸ்ட்ராபெரிஸ் பயன்படுத்தலாம். தேனீ மெழுகு வேண்டாம் என்பவர்கள் பெட்ரோலியம் ஜெலியை பயன்படுத்தியும் லிப் கிளாஸ் தயாரிக்கலாம்.

வீட்டில் தயாரிக்கப்படும் லிப் கிளாஸ் எப்பொழுதும் ப்ரிட்ஜில் குளிர்ச்சியாகவே வைத்திருக்க வேண்டும் என்கின்றனர் அழகியல் நிபுணர்கள்.



# அழகுக்கு இன்னும் மெருகூட்டும்

## உயரத்துக்கேற்ற உடை



பெண்களின் உயரத்துக்கு ஏற்ப உடை அணிந்தால் அழகு மிளிரும் என்று உடை அலங்கார நிபுணர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

அந்தவகையில் ஒல்லியாக இருப்பதால் சாதாரணமாகவே உயரமாகத் தோன்றுவீர்கள். நீங்கள் நேர்கோடிட்ட, முழுநீள கையுள்ள உடைகள் அணியலாம்.

சுடிதார் அணியும்போது கோடிட்ட பாண்ட் மற்றும் பிளைன் டொப் அணிந்தால் அழகாக இருக்கும். கால்களின் நீளத்தை எடுத்துக்காட்ட முக்கால் பாண்ட் அணியலாம். அதிக உயரமான ஹீல்ஸ் இல்லாத காலணி நல்லது. சில உடைகளுக்கு ஹீல்ஸ் அணிந்தால்தான் அழகாக இருக்கும். அப்போது சிறிய அளவிலான ஹீல்ஸ் காலணிகளை அணியலாம்.

புடைவை அணியும்போது, தொப்புளுக்குக் கீழ் அல்லாமல், அதே நேரம் இடுப்பு வளைவை எடுத்துக்காட்டுவதுபோல அணியலாம். பெரிய போடர் உள்ள பட்டுப் புடைவை அணிந்தால் மேலும் உயரமாகக் காட்டும். மஞ்சள், ஓரேஞ், பச்சை, வயலெட் நிறங்களைத் தவிர்க்க வேண்டும்.

உயரமான பெண்கள் உயரமாக இருந்தாலும் பருமன் காரணமாகக் குள்ளமாகத்தான் தோன்றுவீர்கள். நீங்கள் குறுக்குக்கோடிட்ட உடைகளை அணியலாம். அடர்த்தியான நிறங்கள் உங்களை ஒல்லியாகவும் உயரமாகவும் காட்டும். [illegible] வைத்த [illegible] டொப் அணியலாம். லோ ஹிப் புடவையோடு, ஹீல்ஸ் வைத்த காலணி அணிந்தால் அழகாக இருக்கும். பெரிய பூ வகைகள் உள்ள உடைகளைத் தவிர்க்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org